தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண். 210

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## எட்டாம் தொகுப்பு

(வைத்தியப் பகுதி)



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூல் நிலையம்.

கி. பி. 1985]

[விலை. ரு. 8—50

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண். 210

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## எட்டாம் தொகுப்பு

**(வைத்தியப் பகுதி)**

பதிப்பாசிரியர்கள் :

**புலவர் வீ. சொக்கலிங்கம்,**

தமிழ்த்துறை,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

**(அமரர்) டாக்டர். எஸ். வெங்கட்டராசன்,**

எல். ஐ. எம்., (ரிஜிஸ்ட்டர்டு) தஞ்சாவூர்.



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூல் நிலையம்.

கி. பி. 1985 ] [ விலை. ரூ. 8—50

முதற் பதிப்பு : 1985.

வெளியீடு :

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம்,
தஞ்சாவூர்.

பதிப்பகம் :

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலைய அச்சகம்,
தஞ்சாவூர்.

# வெளியிடுவோர் முன்னுரை

உலகப் புகழ் பெற்ற, தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தின்கண் உள்ள தமிழ்ப்பகுதியில், மருத்துவச் சுவடிகள் பல உள்ளன. அவற்றில் 300 சுவடிகளின் விளக்கக் குறிப்புகள் 3, 4, 5 ஆகிய தொகுதிகளாக முன்பே வெளிவந்துள்ளன. 1, 2, 6, 7 ஆகிய தொகுதிகள் இலக்கியம்.

இந்த எட்டாவது தொகுதிக்கான பணியினைத் திருவாளர் டாக்டர் எஸ் வெங்கட்டராசன், எல். ஐ. எம்., (பதிவு) அவர்கள், மேற்கொண்டு எழுதி வருகையில் இறைவனடி சேர்ந்தார்கள். அவர்கள் விட்டுச்சென்ற அப் பணியினைத் தொடர்ந்து, எமது மகால், தமிழ்த் துறையைச் சேர்ந்த, திருவாளர் புலவர் வீ. சொக்கலிங்கம் அவர்கள் எழுதி, முன்னையதைச் செம்மைப்படுத்திப் பதிப்பித்துள்ளார்கள். எனவே, அன்னார் இருவருக்கும் எனது நன்றி உரித்தாகிறது.

இந்த எட்டாம் தொகுதி வெளிவரப் பொருளுதவி புரிந்த மைய அரசுக்கும், நன்முறையில் அச்சிட்டுத் தந்த சரசுவதி மகால் நூலக அச்சகத்தாருக்கும், ஏனையோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சுவடிகள் வைத்திருப்போர், அவற்றை எமது நூலகத்தில் சேர்த்து, தாம் புகழடைவதோடு, மற்றவர்க்கும் அவை பயன்பட உதவுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

தஞ்சாவூர்.
10—5—1985.

**து. இரா. இராமசாமி,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

# முன்னுரை

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்". கல்வியும் செல்வமும் நிறம்பப் பெற்றாலும், உடல் நலமில்லையானால், அவற்றைத் துய்க்க முடியாது. உடற்பிணி வருவதற்குப் பல காரணங்கள் உண்டேனும், அவையெல்லாம், முன்னைநாள் வினையால் வருவது, (பெற்றோர்களால்) உடன்பிறந்தே கொல்லுவது, தீயொழுக்கம், வேண்டாத உணவுகளால் வருவது ஆகிய மூன்று முதற்காரணங்களுள் அடங்கும்.

இவற்றைப் போக்குதற்குப் பல வழிகளைப் பல மகான்கள் கூறிப் போந்தனர். "நோய்நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்" என்பார் மாதானுபங்கி. வினையால் வருவதனையும், உடன் பிறந்தே கொல்வதனையும் மருந்துகளால் சற்று தணிக்கலாம். மற்றவற்றால் வரும் நோய்களை, உடன்பிறவா மூலிகை முதலான மருந்துகளால் போக்கிவிடலாம். இதற்கான வழிமுறைகளைக் கண்ட சித்தர்களும், மருத்துவர்களும், தம் அனுபவத்தால் கண்டறிந்த மருந்துகளை, அப்போதைக்கப்போது ஏடுகளில் எழுதி வைத்தனர். அவ்வாறு எழுதிய மருத்துவச் சுவடிகள் உலகெங்கும் காணப்படுகின்றன.

நம் சரசுவதி மகாலில் இன்றுவரை சேகரித்து வைக்கப்பட்டுள்ள மருத்துவச் சுவடிகளில் **300** சுவடிகள் விளக்கக் குறிப்புக்களுடன், எமது மகாலில் **3, 4, 5** ஆகிய தொகுதிகளாக வெளிவந்துள்ளன. **1, 2, 6, 7** ஆகியவை இலக்கியங்கள்.

தற்போது **8**-வது தொகுதி வெளிவருகின்றது. இதில் **301** முதல் **365** வரை உள்ள (D. 532—730) சுவடிகளின் விளக்கங்கள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு சுவடியின் உட்பிரிவுகள், a, b, c என, அடைப்புக்குறிகளில் குறிக்கப்பட்டுள்ளன.

இம்மகாலில், பல வைத்திய நூல்களை அச்சிட்டுதவிய திருவாளர், டாக்டர் **எஸ். வெங்கட்டராசன்**, L. I. M., (Regd.) அவர்கள், இந்த

8-வது தொகுதிக்கான வைத்தியச் சுவடிகளின் குறிப்புக்களை எழுதிக் கொண்டிருக்கும்போதே, யாக்கை நிலையாமையை உறுதி செய்து விட்டு விண்ணுலகடைந்தார்கள். அப்பணியினைத் தொடர்ந்து எழுதி, முன்னையதில் உள்ள குறைபாடுகளை அகற்றி, ஒரு அளவுக்கு முழுமை செய்து பதிப்பித்துள்ளேன்.

தமிழ் மருத்துவப் பிரிவில் சுவடிகள் சேர்ந்து வருகின்றன. அண்மையில், பழனி, ஆர். எம். கே. வேலுச்சாமி சித்த வைத்திய சாலையில் இருந்த சித்த மருத்துவச் சுவடிகள் 229-ஐ, எமது மகாலுக்கு, ஷியார் குமாரர், சித்தர் ஆர். எம். கே. சிவசுப்பிரமணி ஓம் அவர்கள், அன்பளிப்பாக, என் மூலமாக வழங்கியுள்ளார்கள். மற்றும், சுவடிகள் வைத்துக் கொண்டிருப்பவர்கள், கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சுவடிகளைப் பராமரிப்பது மிகவும் கடினம் எமது மகாலில் நன்கு பாதுகாக்கப்படுகின்றன.

எனவே, அவரவர்கள், தங்கள் தங்களிடமுள்ள சுவடிகளைத் தந்து, தங்கள் பெயரை நிலைநாட்டிப் புகழடைவதுடன், மக்களையும் காப்பாற்றுவார்கள் என நம்புகிறேன்.

இதனை வெளியிடப் பொருளுதவி புரிந்த நடுவண் அரசுக்கும், இதனைப் பதிக்க அனுமதியளித்த, எமது மகால் இயக்குநரும். மாவட்ட ஆட்சியருமான திருவாளர் து. இரா. இராமசாமி, இ.ஆ.ப., அவர்கட்கும் இந்நூலக நிருவாக அதிகாரி பொறுப்பு, திருவாளர் அ. பஞ்சநாதன், எம். ஏ., பி. லிப். சி., அவர்கட்கும், நன்முறையில் அச்சிட்டுதவிய, நமது நூலக அச்சகத்தாருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இதிற் காணும், குற்றங்களைந்து, குணம்பொருந்தி வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்.

இங்ஙனம்,

தஞ்சாவூர்,

25—4—85.

புலவர் **வீ. சொக்கலிங்கம்,**
தமிழ்த்துறை,
சரசுவதி மகால் நூலகம்.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அகத்தியர் 205 ... .. ... ... | 30 |
| அகத்தியர் 205 ... ... ... ... | 80 |
| அகத்தியர் 205-க்குச் சூத்திரம் ... ... ... | 51 |
| அகத்தியர் 1500 ... ... ... ... | 7 |
| அகத்தியர் 1500 ... ... ... ... | 39 |
| அகத்தியர் கர்மகாண்டம் 300 ... ... ... | 81 |
| அகத்தியர் குருநூல் 50 ... ... ... | 69 |
| அகத்தியர் கைபாகம் 30 ... ... ... | 65 |
| அகத்தியர் கருமானம் ... ... ... | 34 |
| அகத்தியர் சூத்திரம் ... ... ... | 143 |
| அகத்தியர் சூத்திரம் ... ... ... | 103 |
| அகத்தியர் சூத்திரம்-8 ... ... ... | 129 |
| அகத்தியர் சூத்திரம் 50 (வயித்தியக் குருநூல்) ... ... | 103 |
| அகத்தியர் சௌமிய சாகரம் ... ... ... | 131 |
| அகத்தியர் ஞானத்திரட்டு–100 ... ... ... | 95 |
| அகத்தியர் தண்டகம் ... ... ... | 125 |
| அகத்தியர் தீட்சாவிதி ... ... ... | 78 |
| அகத்தியர் தீட்சாவிதி—200 ... ... ... | 152 |
| அகத்தியர் தீட்சை—5 ... ... ... | 130 |
| அகத்தியர் தீட்சைவிதி—200 ... ... ... | 57 |
| அகத்தியர் நவகண்டமாலை ... ... ... | 35 |
| அகத்தியர் நவக்கிரக கக்கிஷம் ... ... ... | 18 |
| அகத்தியர் பச்சைவெட்டு ... ... ... | 20 |
| அகத்தியர் பதினாயிரக் காண்டத்தில் சர்ப்பராசன் மாத்திரை ... | 118 |
| அகத்தியர் பரிபாஷைத்திரட்டு 1—5 காண்டங்கள் ... | 64 |
| அகத்தியர் பற்பமுறை—110 ... ... ... | 60 |

| | பக்கம் |
|---|---|
| அகத்தியர் பித்த குணவாகடம் ... ... ... | 126 |
| அகத்தியர் பூசாவிதி ... ... ... | 135 |
| அகத்தியர் பூரண காவியம்—1000 ... ... ... | 155 |
| அகத்தியர் பூரண சூத்திரத்துக்குச் சுருக்கம்—48 ... | 32 |
| அகத்தியர் பூரண சூத்திரம்—216 ... ... ... | 94 |
| அகத்தியர் பூனீறு வித்தை—50 ... ... ... | 93 |
| அகத்தியர் மதிவெண்பா—9 ... ... ... | 67 |
| அகத்தியர் முப்பு—16 ... ... ... | 29 |
| அகத்தியர் முப்பு—50 ... ... ... | 149 |
| அகத்தியர் முப்பு—50 ... ... ... | 68 |
| அகத்தியர் முன்னூற்றுக்குச் சுருக்கம்—36 ... ... | 31 |
| அகத்தியர் வகாரச் சுருக்கம்—12 ... ... ... | 66 |
| அகத்தியர் வகார மதிவெண்பா—100 ... ... | 68 |
| அகத்தியர் வகாரம்—100 ... ... ... | 152 |
| அகத்தியர் வண்ணம் (மூலிகை நிதானம்) ... ... | 62 |
| அகத்தியர் வழலை—10 ... ... ... | 71 |
| அகத்தியர் வழலை மதிவெண்பா ... ... ... | 73 |
| அகத்தியர் வாகட சூத்திரம்—100 ... ... ... | 86 |
| அகத்தியர் வாகடம் ... ... ... | 59 |
| அகத்தியர் வாகடம்—205 ... ... ... | 50 |
| அகத்தியர் வாத சூத்திரம் ... ... ... | 128 |
| அகத்தியர் வாத சூத்திரம்—202 ... ... ... | 97 |
| ,, வெடியுப்புச் சுண்ணச் சூத்திரம்—4 ... ... | 70 |
| ,, வைத்தியத்திரட்டு ... ... ... | 1 |
| ,, ,, ... ... ... | 48 |
| ,, வைத்தியம்—36 ... ... ... | 92 |
| ,, ,, —50 ... ... ... | 33 |
| ,, ,, ,, முப்பு வைத்தியம் ... ... | 148 |
| அகத்தியர் வைத்தியம்—150 ... ... ... | 91 |
| ,, ,, —300 ... ... ... | 86 |
| அனுபவ வைத்திய அட்டவணை ... ... ... | 107 |
| அனுபவ வைத்திய அட்டவணை நயன ரோகம் ... ... | 110 |

| | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| அனுபவ வைத்திய முறைகளும் ரோக நிதானமும் | | | ... | 108 |
| அனுபோக வைத்திய முறைகள் | ... | ... | ... | 101 |

ஆ

| | | | | |
|---|---|---|---|---|
| ஆயுர்வேத வைத்தியம் | ... | ... | ... | 156 |

இ

| | | | | |
|---|---|---|---|---|
| இராமதேவர் கருமானச் சுருக்கம்—30 | | ... | ... | 41 |
| இராமதேவர் சூத்திரம்—215 | ... | ... | ... | 94 |
| ,, ,, —500 | ... | ... | ... | 159 |
| இராமதேவர் பட்சணி—50 | ... | ... | ... | 40 |

உ

| | | | | |
|---|---|---|---|---|
| உதரக்கிரியை நிதானம் | ... | ... | ... | 74 |
| உதரக் கிரியை வாகடம் | ... | ... | ... | 82 |

க

| | | | | |
|---|---|---|---|---|
| கண் வைத்தியம் முதலியன | ... | ... | ... | 79 |
| கருவூரார் நொண்டி நாடகம் | ... | ... | ... | 77 |
| கர்ப்ப சாத்திரம் | ... | ... | ... | 52 |
| கர்ம காண்டத்தில் பகளங்க பற்பம் முதலியன | | ... | ... | 76 |
| கர்மானுபோக சூத்திரம்—302 | ... | ... | ... | 91 |
| கவுசிகமுனி குழம்பு | ... | ... | ... | 148 |

கு

| | | | | |
|---|---|---|---|---|
| குதிரை வாகடம் | ... | ... | ... | 84 |
| குருசெயநீர் கட்டு முறைகள் | ... | ... | ... | 15 |
| குழந்தை வாகடம் | ... | ... | ... | 143 |

கை

| | | | | |
|---|---|---|---|---|
| கைலாசச் சட்டைமுனி சூத்திரம்—201 | | ... | ... | 158 |
| கைலாசச் சட்டைமுனி நிகண்டு—1200 | | ... | ... | 55 |

பக்கம்


கைலாசச் சட்டைமுனி வகாரச் சருக்கம்—200 ... ... 56
,, ,, ,, சூத்திரம்—1000 .. ... 54


## கொ


கொங்கணர் ஆயிரக் காண்டத்தில் கடைக்காண்டம் ... 136
கொங்கணர் கடைக்காண்டம்—500 ... ... 137
கொங்கணர் கர்ப்ப சூத்திரம் ... ... ... 127
,, ,, ,, ... ... ... 131
,, ,, ,, ... ... ... 138
கொங்கணர் காரசாரப் பெருமை ... ... ... 121
கொங்கணர் சோடச சூத்திரம்—40 ... ... 120
கொங்கணர் தண்டகம் ... ... ... 124
,, திருவருள்—16 ... ... ... 107
,, தீட்சை ... ... ... 97


## கோ


கோரக்கர் கற்ப முறை ... ... ... 89
கோரக்சர் பூரணாதி லேகியம் ... ... ... 127


## ச


சட்டைமுனி காயசித்தி—100 ... ... ... 124
சட்டைமுனி நிகண்டு ... ... ... 117
சட்டைமுனியார் கற்பம் ... ... ... 135
சட்டைமுனியார் நிகண்டு ... ... ... 115
சட்டைமுனியார் பூசாவிதி சூத்திரம் ... ... 153
சட்ரச நிகண்டு ... ... ... 120
சவுமிய சாகரம் ... ... ... 58


## சா


சாம்பிராணியின் குணமும் செயலும் ... ... 27

பக்கம்

சி


| | |
|---|---|
| சித்தராரூடம்—நொண்டி | ... ... ... 2 |
| ,, | ... ... ... 145 |
| சில்லரை வைத்தியம் | ... ... ... 108 |
| ,, | ... ... ... 119 |


சு


| | |
|---|---|
| சுந்தரமூர்த்தி பூசாவிதி | ... ... ... 147 |
| சுந்தரானந்தர் சூத்திரம்—25 | ... ... ... 76 |
| சுந்தரானந்தர் பல திரட்டு | ... ... ... 110 |
| சுந்தரானந்தர் பாடல் சூத்திரம் | ... ... ... 114 |
| சுந்தரானந்தர் பூசைவிதி—36 | ... ... ... 96 |
| சுர சாத்திரம் | ... ... ... 45 |


சூ


| | |
|---|---|
| சூலை நிதானக் குணம் | ... ... ... 82 |


த


| | |
|---|---|
| தட்சிணாமூர்த்தி—1200 | ... ... ... 161 |
| தட்சிணாமூர்த்தி—1200 முதற்காண்டம் | ... ... 160 |
| தட்சிணாமூர்த்தி—1200ல் வாதப் பிரகாணம் | ... ... 160 |
| தட்சிணாமூர்த்தி ஞானம்—100 | ... ... ... 133 |
| தட்சிணாமூர்த்தி பரிபாஷை | ... ... ... 10 |
| தட்சிணாமூர்த்தி பூரண சந்திரோதயவாலை | ... ... 29 |
| தட்சிணாமூர்த்தி யோகாண்டம்—1200 | ... ... 99 |
| தட்சிணாமூர்த்தி வேதாந்த சூத்திரம் | ... ... 141 |
| தட்சிணாமூர்த்தி வைத்தியம்-600 கடைக்காண்டம்—வழலைப் போக்கு | ... ... 156 |
| தன்வந்திரி சிந்தாமணி—நாடி சாத்திரம் | ... ... 46 |
| தன்வந்திரியார் பாடல் | ... ... ... 90 |


தி


| | |
|---|---|
| திருமூலர் திருமந்திர சூத்திரம் | ... ... ... 113 |
| திருமந்திரம்—50 குருபாத விளக்கம் | ... ... 145 |
| திருமந்திர வாகடம்—10 | ... ... ... 43 |


தோ


| | |
|---|---|
| தோஷநூல் சாத்திரம் | ... ... ... 45 |

| | பக்கம் |
|---|---|
| **ந** | |
| நட்சத்திர உருவம் நாம நட்சத்திரம் முதலியன .. ... | 3 |
| நட்சத்திரபலன்—சுர நிதானம் ... ... | 112 |
| நந்தி—300 ... ... ... | 116 |
| நந்தி தேவர் நிகண்டு—300 ... ... ... | 11 |
| நந்தீசர் கர்ப்ப வாகடம் ... ... ... | 39 |
| நந்தீசர் காரச் சுருக்கம்—12 ... ... ... | 113 |
| நந்தீசர் நிகண்டு—300 ... ... ... | 111 |
| நந்தீசர் நிகண்டு 300-க்குச் சுருக்கம் ... ... | 112 |
| நந்தீசர் வகாரச் சுருக்கம் ... ... ... | 13 |
| நயனவிதி சாத்திரம் ... ... ... | 88 |
| **நா** | |
| நாடி லட்சணம் ... ... ... | 73 |
| நாலுகாண்டத்தாயிரத் திருநூறில் ... ... | 72 |
| **நீ** | |
| நீரிழிவின் குணம் 20 வகை ... ... ... | 8 |
| **ப** | |
| பதஞ்சலி வாதத் திறவுகோல் சுருக்கம்—21 ... | 12 |
| பதார்த்தகுண சிந்தாமணி ... ... ... | 156 |
| பதார்த்த குணம் முதலியன ... ... ... | 83 |
| பரிபாஷைப் பாடல் ... ... ... | 5 |
| பலதிரட்டு வைத்திய அட்டவணை ... ... ... | 48 |
| பலதிரட்டு வைத்தியம் ... ... ... | 24 |
| பலதிரட்டு வைத்தியம் ... ... ... | 26 |
| ,, ... ... ... | 89 |
| ,, ... ... ... | 144 |
| ,, ... ... ... | 151 |
| **பி** | |
| பிரம்மமுனி கருக்கிடை சூத்திரம்—400 ... ... | 36 |
| ,, ,, ... ... | 49 |
| பிரம்மமுனி வைத்திய சூத்திரம் ... ... ... | 75 |
| **பு** | |
| புலத்தியர் வைத்திய சூத்திரம் ... ... ... | 146 |
| புலத்தியர் வைத்தியம் ... ... ... | 122 |

| | பக்கம் |
|---|---|
| **போ** | |
| போகநாதர் 700 பூரணுதி ... ... ... | 38 |
| போகநாயஞர் எழுநூற்றுத்திரட்டு ... ... | 16 |
| ,, ,, ... ... | 157 |
| போகர் இரண்டாங் காண்டம் ... ... | 132 |
| **ம** | |
| மச்சமுனி—800 ... ... ... | 98 |
| மருத்துவரிலகைகணம் ... ... ... | 28 |
| **ரோ** | |
| ரோமரிஷி சூத்திரம்—50 ... ... ... | 142 |
| ரோமரிஷி பூரண லேகியம் ... ... ... | 37 |
| ரோமரிஷி வாக்கியம் ... ... ... | 19 |
| **வ** | |
| வண்டுகடி குட்டத்துக்கு மருந்து ... ... | 106 |
| வயித்தியன் குணம் ... ... ... | 123 |
| **வா** | |
| வாகடத் திரட்டு ... ... ... | 47 |
| வாதநூல் முதலியன ... ... ... | 110 |
| வாதமுறைகள் ... ... ... | 101 |
| வாதம், ஜாலம் ... ... ... | 100 |
| வால்மீகர் உறுப்புச் சூத்திரம் ... ... ... | 23 |
| வால்மீகர் கயற்று சூத்திரம் ... ... ... | 22 |
| வால்மீகர் நனைசிலைச் சூத்திரம் ... ... | 21 |
| வால்மீகர் நாடி சூத்திரம்—72 ... ... ... | 150 |
| வால்மீகர் பலபிணி வாதநாடிச் சூத்திரம் ... ... | 20 |
| வால்மீகர் பலவிரல் சூத்திரம் ... ... ... | 22 |
| வால்மீகர் பூதநாடி ... ... ... | 24 |
| **வி** | |
| வியாக்கிரபாதர் ஞானம் ... ... ... | 139 |
| **வை** | |
| வைத்திய அட்டவணை ... ... ... | 17 |
| வைத்தியத்திரட்டு ... ... ... | 9 |
| ,, ... ... ... | 53 |
| ,, ... ... ... | 154 |

| | பக்கம் |
|---|---|
| வைத்தியத்திரட்டு பாகம்—I | 42 |
| வைத்தியத்திரட்டு பாகம்—II | 44 |
| வைத்தியத் திரட்டு வாகடம் | 87 |
| வைத்தியம் பலதிரட்டு | 63 |
| வைத்தியம் பலமுறை | 102 |
| ,, | 104 |
| ,, | 105 |
| ,, | 106 |
| ,, | 109 |


## இதிலடங்கிய இலக்கியச் சுவடிகள்


| | | |
|---|---|---|
| 1. | குத்தாலப்புராணம் | 4 |
| 2. | கௌளி சாத்திரம் | 5 |
| 3. | சங்கராச்சாரியார் பாடல் | 140 |
| 4. | சித்த நூல் | 139 |
| 5. | தனிப்பாடற்றிரட்டு | 85 |
| 6. | பழனி அறுமுகவன் திருவெண்ணீற்றுப் பதிகம் | 25 |
| 7. | மணவாள சதகம் | 61 |
| 8. | வாதவூரர் புராணம் | 14 |
| 9. | விசாலாட்சி அம்மன் பேரில் சோபனம் | 6 |

# தஞ்சை சரசுவதி மகால் நூலகம்

## தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

### 8-வது தொகுப்பு

மருத்துவப் பகுதி

வரிசை எண் : **532** சுவடி எண் : **301(a)**

## அகத்தியர் வைத்தியத் திரட்டு

*ஏடுகள் : 12 (175—186). ஏட்டின் நிலைமை ; ஓரங்கள் ஒடிந்து உள்ளன. பக்கத்திற்கு 11 வரிகள். அளவு : 32 × 4. செ.மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 700. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முதற்பகுதி இல்லை (100 முதல் 235 வரை செய்யுட்கள் உள்ளன).*

**தொடக்கம் :**

*............ யது யூனுருவித் தசையைச் சார்ந்து*
*பிணக்கித்து தற்ம மெல்லாம் பொன்றுட் கேட்டுக்*
*கங்குல்வந்த புழுப்போல தேகமெல்லாந் ...........*
*போலநீரை பங்கிலங்கே பருகியிட்ட நீரை*
*யெல்லாம் பாளாயன விச நரம்பைப் பத்திச் சாயும்.* -௱௨

**முடிவு :**

ஒருநூலா யடக்கிவைத்து விபர மாக
ஓகோகோ தேர்ந்துசொன்னேன் உலகோர் மெய்க்கக்
குருநாடி போலவொரு நூலுஞ் சொல்வார்
குறிப்புடனே இன்னூலைக் கூர்ந்து பார்த்தோர்
பெருநூலைத் தேடியங்கே யலைய வேண்டாம்
பின்னுமொரு சாத்திரத்தி லிதுபோ லில்லை
யிருநூத்து முப்பத்து அஞ்சு தானே
யேணிவைத்துக் குடுத்தாப்போ லிருக்கு முத்தே! -உ௱௩௫

குருவே முன்னிற்க வேணும்.

**குறிப்பு :**

இதில் நாடிக் குறிகள், தச வாயுக்கள் முதலானவை கூறப்பட்டுள்ளன. முதலேடு இன்மையால் தலைப்பு இல்லை. இது அகத்தியர் இருநூற்று முப்பத் தைந்து எனலாம். பிழைகள் மலிந்துள்ளன.

---

வரிசை எண் **533.** சுவடி எண்: **301 (b)**

## சித்தாரூடம்—நொண்டி

ஏடுகள் : *16 (187—202)* ஏட்டின் நிலைமை : சிறிது பூச்சியரித்து உள்ளது. பக்கத்திற்கு : *10—11* வரிகள் அளவு : *32 × 4* செமீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : *1000.* ஆசிரியர் : சித்தர்கள் பலர். முழுமை : முழுமையாக உளது.

**தொடக்கம் :**

அத்திமா முகவன் செய்ய வடியிணைக் கமலம் போற்றி
சித்தரா ரூட ந் தன்னில்ச் செப்பிய பொருளை யோர்ந்து
சுத்தமா யெவர்க்குந் தோன்றச் சுருக்கமாய் நொண்டிச் சிந்தாய்
வித்தக ரருளி னாலே தமியேனும் விளம்ப லுற்றேன்.

அகிலாண்ட நாயகி பாதாரவிந்தமே சரணம்.

குருபாதமே துணை. சிவமயம்.

திருமரு தூர்வாழும் நாகலிங்கர் சீர்பாத கமலமென் சிரத்தில் வைத்து
மருவுசித்த ராரூடப் பொருளினை வகுத்துச்சொல் லுகிறேனிந்த
[மகிதலத்தில்ப்
புண்டரீ கத்தி லுறைவோன் படத்தில் பொல்லாத விடஞ்சேர்ந்து
மெல்லாமுமே
விண்டுரைக்கக் கேளுமினி நல்லபாம்பு விரியன் வளலை கொம்பேறி
மூக்கன்
சாரைசு மூக்கன் புடையான் மண்டலி சவடி, மயக்கரவ மண்ணுளிச்
வாளைவ வட்டுஞ் செய்யான் மிருதலை மணியன் [சாரை
சிலந்திப்புலி முகப்பூச்சி

**முடிவு :**

மந்திர தந்திரத்தால்த் தியானத்தால்
மணியினுல் மருந்தினுல் யெந்தவித
முந்திடும் விடங்களெல்லாம் தீர்த்திடு
முதியவர் சிறியவர் யெனுமிந்த

தரைமிசை ஒருநூறு பருவமுஞ்
சரிவர வேயிருந்து தான்வாள்ந்து
திருமகள் விளங்கப்பெற் றுப்பதினறு
சிருவரைப் பெற்றுமுத்தி சேறலாமே.
குருபாதமே கெதி.

குறிப்பு :

இது 22, 23, 24 ஆகிய சுவடிகளின் வேறுபட்டது.

சிற்சிலவிடங்களில் இது சித்திராரூடம் எனவும் பெயர் பெறும். அச்சிடப் பட்டுளது. இதனைச் சர்ப்பாரூடம் எனவும் கூறுவர். (117-a-ன் விளக்கம் காண்க) இதனை அகத்தியர் இயற்றினுர் என்றும், சித்தர்கள் பலர் சேர்ந்து இயற்றினுர்கள் என்றும் கருத்து வேறுபாடுகள் உண்டு. சித்திராரூடச் செய்யுள், சீவகசிந்தாமணி பதுமையாரிலம்பகச் செய்யுளுரையில், உரையாசிரியர் நச்சினுர்க்கினியரால் மேற்கோளாக எடுத்தாளப் பெற்றுளது.

இதில் பாம்புகளின் பிறப்பு, அவற்றின் பிரிவுகள், நிறம், குறி, வயது, கடிவாய் விபரம், விஷம் போக்க மருந்துகள், நசியம், துவாலை, தைலம், புகை, பச்சிலை முதலானவைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 534 சுவடி எண் : 301 (c)

## நட்சத்திர உருவம், நாம நட்சத்திரம் முதலியன.

ஏடுகள் : 4 (203—206). ஏட்டின் நிலைமை : சிறிது பூச்சியரித்துளது. பக்கத்திற்கு : 6—10 வரிகள். அளவு : 32 × 4 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 400. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

அசுபதி ஆறும் குதிரைத் தலைபோல
பரணி மூன்று மடுப்புப் போலே
கார்த்திகை யாறுங் கத்தை போலே
ரோகணி பனிரெண்டும் ஊத்தாப் போலே,
... ... ... ... ... ...
ரேபதி பனிரெண்டுந் தோணி போலே.

முடிவு :

வார்த்துநீ யெறித்தயெண்ணை குடிக்க கேளு
மாதவிடை மூன்றுநாள் முழுகும் போது
காத்துவா பத்தியந்தா னென்று மாகா
கடினமென்ற வாய்வுவறுங் கெற்ப முண்டாம்

சாற்றுவாய்ச் சதாசிவத்தி ஞணை யிந்தச்
சண்டாளப் பயகழுக்குச் சாற்ற வேண்டாம்
குற்றமே யாகுமடா சித்தா தீயால்க்
கொடுஞ்சுருக்கா யண்டமுதல்ப் புவனம் வேமே!

**குறிப்பு :**

முற்பகுதியில் சோதிடங்களும், பிற்பகுதியில் வைத்தியங்களும் உள்ளன வைத்தியத்தில் கிரந்திப் புண்ணுக்கு இராமபாணச் சேர்வை, கண்ணுக்கு எண்ணெய், காமாலை குணம், கண்ணுக்கு மை, அகத்தியர் குழம்பு, தாளக பற்பம், கையான் தைலம், கருப்பமுண்டாக எண்ணெய் முதலியன உள்ளன.

வரிசை எண் : **535** சுவடி எண் . **301 (d**

## குத்தாலப் புராணம்

ஏடுகள் : 2(207, 208). ஏட்டின் நிலைமை : சிறிது பூச்சியரித்துளது. பக்கத்திற்கு : 8—10 வரிகள். அளவு : 32 × 4 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 100. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முழுமை இல்லை.

**தொடக்கம் :**

பரமுதல்ச் சுயம்பு அய்ந்து பலாமுதல் விசேட மய்ந்து
தெரிசினை யோர்பாலைந்து தேவரக சியமோ ரைய்ந்து
மருவுபூங் காரோ டைய்ந்து வாதலோ டைய்ந்து முத்தி
அருளய்ந்து திருக்குற் றலம் அற்புத மனந்தம் பின்னும். -க

**முடிவு :**

குருவுப தேச மாதர் கூடிய யின்பந் தன்பால்
மருவிய நிதியங் கல்வி வயசுகள் செய்த தற்மம்
மறிமந் திரம்வி கார மாண்மை ஆகஇவ் வகைஒன் பானு
மொருவரு மறியொண் ணாது உரைத்திடி லளிந்து போமே.

**குறிப்பு :**

குத்தாலப் புராணத்து 8 செய்யுட்களே உள்ளன. பின்னர் ஔவை-பாடிய பாடல்கள் 8 உள்ளன.

வரிசை எண் : **536** சுவடி எண் : **301 (e)**

## பரிபாஷைப் பாடல்

ஏடுகள் : 2 (209—210) எட்டின் நிலைமை : சிறிது பூச்சியரித்துளது. பக்கத்திற்கு : 8—10 வரிகள். அளவு : 32 × 4 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை ; 100. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முழுதுமில்லை.

தொடக்கம் :

பாத மருக்கி மகாநித் திரைபோக்கி
போத சிலத்தைப் போக்கிய சித்துணி
காத மிருசி கடுங்காரி கோபத்தி
வேத மிளகின் விளங்கிய நாமமே. -க

முடிவு :

அகத்துவைது செம்மரையாடு பன்றி யிரட்சி
அப்பனே பச்சைமீன் பூசனிக் காயுளுந்து
அகத்துவைது பத்தியங்க ளாறுதிங்கள்க் கடந்தால்
ஆதுமடா யெல்லாருந்தான் அசடொன் றில்லை
அகத்துவைது பத்தியங்க ளேக தேசம்
யாம்போது கால்கைய்க ளதைப்புண் டாகும்
அகத்துவைது மிதிபாகல் கிஷாயம் போட்டருந்த
அசடெல்லாந் தீர்ந்துவிடு மழகு சவுந்திரமே.

குறிப்பு :

நீரடைப்புக்கு, தலைவலிக்கு, சகலநோய்களுக்கு மருந்துகள், உருண்டைகள் முதலானவைகளுள்ளன.

வரிசை எண் : **537** சுவடி எண் : **301 (f)**

## கௌளி சாத்திரம் முதலியன

ஏடுகள் : 5 (211—215). ஏட்டின் நிலைமை : பூச்சியரித்துளது. பக்கத்திற்கு: 10—11 வரிகள். அளவு: 32 × 4 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை : 250. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முழுதும் உளது.

**தொடக்கம் :**

ஆச்சி மீனங் குடியொட்டு மாடு மெருதுங் கேடுசொல்லும்
சூச்சி மிதுனந் துயர்விளைக்கும் துய்ய நண்டோ டரியாகில்
காச்சிக் கினிய புதல்வர்பேறு கன்னி தன்னில் மிகவுரைக்கில்
ஆச்சி யுடைய மனைபாளாம் அமருந் தேளுங் கோல்கழுமே.

**முடிவு :**

பிரளிக்கு எண்ணெய்: ஆமையோடு 4 விராகனெடை, கருஞ்சீரகம் 3 விராகனெடை. கஸ்தூரி மஞ்சள் 2 விராகனெடை. ஓமம் 2 விராகனெடை, பெருங்காயம் 1 விராகனெடை, கடுக்காய் 2 விராகனெடை, வேலிப்பருத்திச்சார், மிளகு தக்காளிச்சார், கரிப்பான் சார்.

கடைமருந்தெல்லாம் பொடி செய்து உளக்கு விளக்கெண்ணெய்க்கு உளக்குச் சார் விதம் விட்டுக் கிண்டிக் காச்சி மெழுகு பதமாய் வரும் வரையில்ப் பதம் பார்த்து யிரக்கிக்கொண்டு ஒரு வேளைக்கு ஒரு நாளைக்கு சின்னக் கரண்டியால், ஒரு கரண்டி எண்ணெய் உள்ளுக்குக் குடுக்கவும்.

**பத்தியம் :** உப்பு, புளி புகையிலை ஒன்றுமாகாது.

**குறிப்பு :**

பல்லி சொல்லுக்குப் பலன், தனிய நாள் பாட்டு, மருந்தீட்டுக் குணம், மாடுவாங்க கிழமைகள், நட்சத்திரங்கள் முதலானவைகள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண் **538** சுவடி எண். **301 (g)**

## விசாலாட்சி அம்மன் பேரில் சோபனம்

ஏடுகள் : 2. (216, 217). ஏட்டின் நிலைமை : பூச்சியரித்துளது. பக்கத்திற்கு: 11—12 வரிகள். அளவு ; 32 × 4 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை : 100. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முழுதுமில்லை.

**தொடக்கம் :**

சோபனமே சிவகாசிச் சோதிவிசு வேசுரற்கு
நாபனற் றமிழ்க்கொடுத்த நங்கைவிசா லாட்சிக்கு—1
கங்கைசடை முடித்தார்க்குக் கையினின்மான் பிடித்தார்க்கு
மங்கைவிசா லாட்சியுடன் மகிழ்ந்தவிசு வேசுரர்க்கு—2

முடிவு :

மேருவன்ன புயத்தாட்கு விளம்புமரு ளயத்தார்க்கு
காருதவி தார்புரக்கும் நிருத்தர்விசு வேசுரர்க்கும் -உஉ
கைலைமலை யாளிக்குக் காம்பன்ன தோளிக்கு
மயிலைநிகர் தருசாயல் மாதுவிசா லாட்சிக்கு -உ௩

குறிப்பு :

முதல் ஏட்டில் மட்டும் 23 கண்ணிகள் உள்ளன. 2-ம் ஏட்டில்
"சொன்னமதைப் பாதிசெய்து சோராம லொன்றொழித்து
பின்னையுமோ வொவ்வொன்று பேர்த்திட்டு
திக்கீபலால் பாக்கிறித்தீயென் றெழுத உத்ததாம்
உம்பர்கோன் வீடு". என்றுளது. மேலும்

| | | | |
|---|---|---|---|
| 47 | 1 | 45 | 7 |
| 44 | 8 | 46 | 2 |
| 5 | 43 | 3 | 49 |
| 4 | 48 | 6 | 42 |

இந்த சக்கரமும் உளது. இதனை எப்படிக் கூட்டினாலும் 100 வரும்.

வரிசை எண் : 539. சுவடி எண் : 301 (h)

## அகத்தியர் ஆயிரத்தைந்நூறு

ஏடுகள் : 160 (218—376). ஏட்டின் நிலைமை : சிறிது பூச்சியரித்துளது. பக்கத்திற்கு : 10—11 வரிகள். அளவு : 32 × 4செ.மீ. எழுத்து : தமிழ். கி.எண்ணிக்கை : 10000. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

பாகுடன் கிணேசன் பாதம் பணிந்துமுக் குணங்களாய
வாகடச் சுவடி யெல்லாம் வகைவகை தொகுத்துப் பார்த்து
ஆகம விதியி னாலே அடந்திடும் நோய்கட் கெல்லாம்
போகநவ மருந்து சொல்வோம் புலத்தியா பொருந்திக்
கேளே ! க.

முடிவு :

ஆமப்பா வாகட சூத் திரத்தை யெல்லாம்
அறைந்திட்டேன் ஞமொன்று மடக்க வில்லை
வேமப்பா நோயெல்லாம் படுதீய்ப் பத்தி
வேகுமடா நூலுக்கெல்லாம் விபர மில்லை
சோமப்பா யிந்தநூல்த் துகையே தென்றால்
சொல்லுகிறேன் ஆயிரத்தினஞ்ஞூறு சொல்லும் வேதம்
நாமப்பா சொல்லிவிட்டோம் இந்த நூலை
நாதாக்கள் கடாட்ஸத்தால் சூத்திரந்தான் முற்றே !
தெட்சணாமூர்த்தி பாதார விந்தமே கெதி.

காலம் :

எட்டயபுரம் பட்டத்து ராஷலட்சுமி யானை மையதீன் மாவுத்தன் கையெழுத்து.

குறிப்பு :

வாகடசூத்திரம் எனப்படும் அகத்தியர் 1500, தலைப்பை நோக்க அகத்தியர் இயற்றியது எனலாம். ஆனால் காப்புச் செய்யுளை நோக்க இது அகத்தியருக்கு உபதேசித்தது போலத் தெரிகின்றது. இதில் வாத பித்த கப நாடி குணங்கள், நோய் லட்சணங்கள், அவற்றிற்கு மருந்து, மாத்திரை, எண்ணெய், செந்தூர முறைகள் முதலியன கூறப்பட்டுள்ளன. இது வைத்திய காட்டலாக்கு III ல் உள்ள 1, 2-வது சுவடிகளின் வேறு. இதில் 356-வது ஏடு 2 உள்ளன.

வரிசை எண். **540** சுவடி எண். **301—(i)**

## நீரிழிவின் குணம் 20 வகைக்கும் மருந்தும் குணமும் அறிய

ஏடுகள்: 3 (377—379). ஏட்டின் நிலைமை : பூச்சியரித்துளது. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 32×4 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 150. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

நீரளிவு உண்டாகிற காரணமாவது
மருதாதன பெத்த மதுரமாவது போத அருந்திலும் வழுதலங்காய்த்
தண்ணீர்போதக் குடிக்கிலும் நித்திரை கொண்டாலும்,

கொடையிடை காலமேற்க மத்தியான மிகுதி ஆத்திலே
செய்கையாலும் நேரங்கள் தப்பி உண்கையாலும்
ஸ்ரீபோகம் மிகுதி உண்டானாலும் முன் செய்த கற்மத்தினாலும்
யுண்டாம்
வாத பித்த சிலேற்பனத்தினாலு முண்டாம்.

முடிவு

பேய் நாய், பேய் நரி கடித்தால் மருந்து.

அவரிவேர்ப்பட்டை, துத்திவோப்பட்டை, கொல்லங் கோவைக் கிழங்கு, ருளப்பாலைவேர், இவை வகைக்கு விராகனிடை இ(½) அரைத்து வெள்ளாட்டுப் பாலில் குடிக்கவும். இப்படி மூன்றுநாள்ச் சாப்பிடவும்.

பத்தியம் ஆறுநாள்க் காற்கவும். உப்பு, புளி தவிற்கவும். கடும்பத்தியம் மூன்றுவருடத்துக்கு. நவ்வல்பளமாகாது. ஆறு மாஸத்தைக்குப் பெரும் பூசணிக்காயாகாது.

குறிப்பு :

இதில் 20 வகை நீரிழிவின்குணம், மருந்து, வெகு மூத்திரத்திற்கு, சரத்துக்கு சலக்கழிச்சலுக்கு, உடம்பெரிவுக்கு, வயிறு வீக்கத்துக்கு, இருமல், கிராணி வயிற்றுவலி, ரத்தகாசம், பேய் நாய்க்கடி, பேய் நரிக்கடி ஆகியவற்றிற்கு மருந்துகள் காணப்படுகின்றன.

வரிசை எண். 541 சுவடி எண். 302

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 51. ஏட்டின் நிலைமை : பூச்சியரித்தது. பக்கத்திற்கு : 8—11 வரிகள். அளவு : 27½ X 3½ செ. மீ. எழுத்து : தமிழ். கி.எண்ணிக்கை : 2000. ஆசிரியர் : இல்லை. முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

சுத்தி முறை

சாதிலிங்கம், இலுமிச்சம்பழச் சாற்றில் மு..............வைத்துப் பின்பு வேப்பிலைச் சாற்றிலூற வைக்கவும் சுத்தியாம்.

[illegible] சுத்தி. அகத்திப்பூச் சாற்றிலேழுநாளாருச் சாம முறவைத்து ஒருச்சாம முலரவைத்து யிப்படி யேழுநாள் வைக்கவும். பருத்தியிலைச் சாற்றில் சாம முறவைக்கவும் அதைக்காயவைத்து

முடிவு :

ஆனந்த வயிரவம்

இரசம், நாவி, கெந்தகம், அரிதாரம், திரிபலே, திரிகடுகு, நவச்சாரம், வெண்காரம் ஆகப் (?) பன்னிரண்டும் ஒருபங்கு, நேர் வாளம் ஒருபங்கு, இவை யிலுமிச்சம் பழச்சாரு வார்த்து, மூன்று நாளரைத்துக் குன்றுமணிப் பிரயாணம் உண்டை பண்ணி சருவ சுரத்துக்கும்.

குறிப்பு :

இதில் 1—102 ஏடுகள் ஏட்டெண்களாக இருப்பினும் இடையிடையே பல ஏடுகள் இன்றி 51 ஏடுகளே உள்ளன. (19-முதல் 27, 32, 33. 46, 47 62-69, 70, 72, 73, 75-101 ஆகிய 51 ஏடுகள் இல்லை), இதில் சுரம், வாந்தி, நேத்திரநோய், சிரங்கு, பெரும்பாடு, நீர்க்கட்டு, வலிப்பு, ஒருத்தலைவலி, மாந்தம், கண்புழு வெட்டு முதலானவற்றிற்கு மருந்தும், இரசக் குளிகை, அமுதசஞ்சீவி, நாசிப் பொடிகளும் உள்ளன.

வரிசை எண் : 542 சுவடி எண் : 303 (a)

## தட்சிணாமூர்த்தி பரிபாஷை—(2 காண்டங்கள்)

ஏடுகள் : 38, ஏட்டின் நிலைமை ; பூச்சியரித்துள்ளது. பக்கத்திற்கு ; 10—11 வரிகள். அளவு : 21X4 செ. மீ. எழுத்து ; தமிழ். கி. எண்ணிக்கை : 600. ஆசிரியர் : தட்சிணாமூர்த்தி. முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

தெட்சணாமூர்த்தி பரிபாசை-முதற்காண்டம்

பரிச்சுளி மீதில்க் சுயல்ச்சுளித்ததிப் பன்னீரொழுகி
அரிச்சுளி மூலத்தி லாடியசி ரந்தரங்க உண்மை
தரிச்சது முத்திரை உளச்சுளி வட்டதடவிடே.
கரிச்சுளி வாசித் துதிக்கை விநாயகன் காப்பதுவே.

குருபாதமே கெதி

பரம ஞானேதையத்தின் பரஞ்சுட ... ... குக் கெல்லாஞ்
சிரமென வுதித்த ஞானத் தெய்வநா யகனுள் போற்றி
வரமென வகார யோக மறைப்புநூல் பாண்டி யெல்லாங்
குருமுனி தமிழாற் செய்யக் குமரனருள் காப்பே. -சு

முடிவு :

யியம்புகின்ற பாசாணம் எட்டெட் டுந்தான்
என்மகனே சுண்ணமதா யிசைக்குஞ் சுண்ணம்
பயம்பெறவே உபரசங்கள் நூற்றிரண்டு பத்தும்
பம்பரமபோ லாட்டிவிக்கும் பரனார் சுண்ணங்
கயம்புறைகள் நவலோக மான தெல்லாம்
களிம்பத்துப் படிகமாய்க் காட்டுச் சுண்ணம்
செயம்புகளும் மலைமரஞ் செடிபூ டெல்லாஞ்
செம்பொன்னாய்ச் செய்கின் ... ... ...

குறிப்பு :

29—வது ஏடும் கடைசி ஏடும் இல்லாததால், செய்யுட்கள் 44 முதல் 47 வரையிலும், 95 முதல் 100 வரையிலும் இல்லை. வழலை மார்க்கம் வேதை முறைகள் பிரம்மகல்லின் மார்க்கம், வெடியுப்பு முடிக்கும் விதம் முதலியவை உள்ளன. அச்சாகவில்லை.

---

வரிசை எண் : **543** சுவடி எண் : **303 (b)**

# நந்திதேவ ரருளிச்செய்த நிகண்டு 300-க்கு சூத்திரம்—30

**(நிகண்டுக்குறி-சித்தர் சமரச நூல்)**

ஏடுகள் : 3. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை. பக்கத்திற்கு : 11-12 வரிகள். அளவு : 21X4 செ.மீ. எழுத்து : தமிழ். கி.எண்ணிக்கை 100. ஆசிரியர் : நந்தீசர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

பூரண மான பொன்னடி மூலம்
காரண மான கணபதி பாதம்
சாரணை மேலாய்ச் சார்ந்திடஞ் சோதி
ஆரணன் ஞானத் தடிமுடி காப்பே. -க

காற்பது மீசன் கருணையி னாலே
கூற்புடன் வாதங் குறிதெரிந் திடவே
சேற்பது வாதத் தெளிவு முன்னுறைப்
பாற்பவற் கல்லோ பலித்திடுஞ் சித்தியே. -உ

முடிவு :

கோலமி தென்னுங் குருவிது ஞலே
காலனு மில்லைக் கலிகளு மில்லை
பாலனு மமுர்தம் பானமு முண்டாம்
மூல மிதுதான் முப்பது முத்தே. -௩௰௩

நந்திதேவர் கிருபாகடாட்சம் பரிபூரணம்.

குறிப்பு :

இது சுவடி எண் 236 (J)ன் மறு பிரதி. பாடபேதங்கள் உள்ளன. "நந்தி தேவர் முப்பு சூத்திரம் முப்பது" என்பது அதன் பெயர். இதில் 3—ம் பாட்டு விளம்பி எழுதப்பட்டதனுல், ஐயம்தீர அதனைக் கடைசியில் 2—ம் முறையாக எழுதப்பட்டுளது.

இதில், மறைவு நூலால் அலைவது, முப்பு விவரம் நிறம், மூலாதாரப் பிராணுயாமம், யோக சமாதி, உடல் உயிர் நிகண்டில் வழலை சித்திக்க அறியாதவர், சவுக்காரத்தீனீர், சிங்கிக்குரு முதலியன உள்ளன. அச்சாகவில்லை

வரிசை எண் : 544 சுவடி எண் : 303 (c)

## பதஞ்சலி சுவாமி அருளிய வாதத்திறவுகோல் சுருக்கம் இருபத்தொன்று

ஏடுகள் : 4 ஏட்டின் நிலைமை : நன்றாக உளது. பக்கத்திற்கு : 11—12 வரிகள். அளவு ; 21X4 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 100. ஆசிரியர் : பதஞ்சலி முனிவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

பூமலியுங் கணனுதன் பாதம் போத்தி புகழ் பெரிய வாதத்தின் திறவு கோலை
நாமுரைப்போ மைனுன்கு பாட்டுக்குள்ளே நலமான வாத வித்தை ஞானமூாற்கஞ்
சோமனுத்த வெணியனு ருபதே சத்தால் துறையறியும் பதஞ்சலிதன் சூத்திரத்தில்
யேமவித்தைக் காதியென்ன வஸ்துவுப்பு யிதையறிய மாட்டாம லேன்னேரே ! -௧

முடிவு :

வாழவே நடுவெழுத்துக் காதா ரத்தை மாட்டிவைக்கத்
தலையெழுத்துப் பிரகாசிக்கும்
மீழவே கடையெழுத்து வோடாதப்பா விட்டெழுத்துந்
தொட்டெழுத்துந் தலைகீழாட்சுத்
தாழவேண் டாங்காண் பிராணவாயு சகஸ்திரயிதழ் பானமுண்டு
சாவு போட்சு
கோழுமே வாழுதுபரம்நீ யாவாய் கூறிய வாதத் திறவுகோல்
தான் முத்தே -(உ க)

பதஞ்சலி சாமி குரு கிடாட்சம் பரிபூர்ணம்.
முற்றிற்று.

குறிப்பு :

செகத்தினில் வேடமயக்கஞ் செய்து சீவனம் செய்கின்றவர்கள் புரட்டு, மௌனகுரு ஆசான் செய்கை, வஸ்துவுப்பு, ஏகதீட்சை சுத்தி பஞ்சீகரம் இடைபாகம்—உலகவாதி மாண்டது, ஆன்மாநிலை, பிராணயாமவஸ்து, வுப்புக்காண-முதலான பல செய்திகளுள்ளன. அச்சாகவில்லை.

---

வரிசை எண் : **545** சுவடி எண் : **303** (d)

## நந்தீசர் அருளிய வகாரச் சூருக்கம்

ஏடுகள் : 2. ஏட்டின் நிலைமை : சிறிது பூச்சியரித்துளது. பக்கத்திற்கு : 12 வரிகள், அளவு : 21X4 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 50. ஆசிரியர் : நந்தீசர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

சீர்பெருகும் வேதாந்தத் துள்மூ லத்தின்
செயலறிந்து மனமடங்குந் துரிய வீட்டின்
வீர்பெருகு காரமறிந் துண்டு வாசி
நொறித்துநின்ற செலுத்தி முனையி லேறி
பேர்பெருகுங் கேசரியைக் கண்டு போத்தி
பேசாம லொடுங்கிநின்ற பெரியோர் பாதம்
நேர்பெருகு நெஞ்சில்வைத்து தொழுதுபோத்தி
நிஷ்சயமாய்ச் சொல்லுகிறேன் முப்பைத் தானே. -க

முடிவு :

கைவென்பான் வாசியென்ற குதிரை மேலே
ஏங்குலிங்கு லகம்பூட்டி யோகி னேறை

மேவென்பாள் நாலையுந்தா னெட்டில் சேர்த்து
மெய்யென்ற சித்தனென்றால் வெளியைக் காட்டி
மாவென்பாள் துரியபணிப் பூரத் துள்ளே
வந்தமந்த ஞதசத்தி மஞனை மூலம்
ஓவென்பா ளுகாரத்தி னுளியைப் பாடு
உத்தொடுங்கி பன்னிரண்டு மொன்று முத்தே. -௰௨

முற்றிற்று.

குறிப்பு :

முப்புவினல் சகலமுஞ் சித்தி, முப்புவின் பிறவி, நிலம் அறிந்து, காலமறிந்து, நிறமறிந்து, எடுக்கும் பருவம், முப்பு மகிமை, அண்டபிண்ட உப்பின் வேகம், சத்தி, சிவ உப்புத் திட்சைப் பாடம் முதலியன. இதில் உள்ளன. அச்சாக வில்லை.

---

வரிசை எண் : 546. சுவடி எண் : 303 (e)

## வாதவூர்ப் புராணச் சுருக்கம்

ஏடு : 1. ஏட்டின் நிலைமை : நன்றாக இருக்கிறது. பக்கத்திற்கு : 11 வரிகள். அளவு : 21 X 4 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 15. ஆசிரியர் : தெரியவில்லை. முழுமை : முழுதுமுளது.

தொடக்கம் :

மாத்தியர் குலத்துதித்து வாதவூர் தனில்வளர்ந்து
சாத்திரம் வேதமெல்லாஞ் சகலமுங் கரைகண்டன்பாய்ப்
பாத்திப னென்னவோங்கும் பாண்டியர்க் கமைச்சாய்வாசி
சேர்த்திடப் பெருந்துரைக்கே சிறப்புட னெழுந்தாய் போற்றி -க

குருந்தடி யமைந்தன் ஞளில்க் குருபர ஞகி வந்தங்
கிருந்தடி சூட்டிக் கோயில் வேலைகள் முற்றுஞ் செய்து
திருந்துபாண் டியருக் காகச் செப்பிய பரியுஞ் சேர்த்து
வருந்திட நரியாய்க் கண்டு வைகையு மடைத்தாய் போற்றி. -2

முடிவு :

அப்பரம் வாத வூரி லன்னையர் விதிமு டித்துத்
தப்பறச் சிதம்ப ரத்தில் தவசிமா ஞகிப் பெண்ணை
ஒப்புடன் பேசச் செய்தங் குடுக்கையுந் தரித்துப் போதஞ்
செப்பமா யருளிச் செய்த தேவனே போற்றி போற்றி. -ரு

புத்தரை வாதில் வென்று பொருதிரு வாச கத்தை
இத்தலத் துருகிக் காட்டி யிலங்கிடப் பாவை கோவை
சத்திதீ பத்நா லய்யன் தன்கரத் தெழுதச் சொன்ன
வித்தகா கற்பூ ரத்தின் மேவிய நாதா போற்றி. -௯

குறிப்பு:

இது வைத்திய நூலல்ல. மாணிக்கவாசகரின் வரலாறு சுருக்கமாக்கூறப் பட்டுளது. அச்சிட்டிருப்பதாகத் தெரிய வில்லை. கடைசியில் பரிபாஷை மூன்றுங் கண்டத்தின் காப்புச் செய்யுள் மாத்திரம் காணப்படுகிறது.

---

வரிசை எண். **547** சுவடி எண். **304**

## குரு செயநீர் கட்டுமுறைகள் (இரசவாதத்திற்கு)

ஏடுகள்; *147*. ஏட்டின் நிலைமை: சிறிதுபூச்சியரித்தும் ஓடிந்தும் உளது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: $10 \times 3\frac{1}{2}$ செ,மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: *2000*. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

உவருப்பு பலம் $\frac{1}{2}$, சீனக்காரம் பலம் $\frac{1}{2}$, வெடியுப்பு பலம் $\frac{1}{2}$ ஆக இந்த மூன்றையும் ஒன்றாய்ச் சேர்த்து வெள்ளைக் கரு விட்டு நன்றாயரைத்து வில்லை செய்து காயவைத்து ஷெ வில்லையில் சுண்ணாம்புச் சீலை சுத்தி யுலரவைத்து. அதின் பிறகு ஒரு வட்டோட்டில் ஷெ வில்லையை வைத்து ஷெ யோட்டுக்குப் பொருந்தும் படியாய் மேலோடு மூடி ஷெ சந்து வாய்க்கு ரெண்டு சீலைமண் செய்து, பதினொரு யெருவில்ப் புடம்போட்டு ஷெ புடம் ஆறினதின் பிறகு யெடுத்துப் பார்க்கச் சுண்ணமாம்.

முடிவு:

நிதி சோதனை:

பொன்னரி தாரம், நெல்லிக்காய்க்கந்தகம், துத்தம், காந்தம் இது சரியெடை சேர்த்துப் பொடித்து இளைச்சீலையில்த் திரித்து நெய்யாவது நல்லெண்ணையாவது துவைத்து தீபமேத்த நிதியிருந்தால்க் கீழ்னோக்கும். இல்லையென்றால் மேல்னோக்கும்.

குறிப்பு:

இது ஒரு இரசவாதநூல். கட்டுமுறைகள், வங்கக்கட்டு, உப்புச் கன்ன மெழுகு, வெள்ளீயக்குரு, கருசேர்ந்த வெடியுப்புக்குரு, வெடியுப்புச் செந்தூரம்,

இரும்பியச்சிந்தூரம், கெந்திரசக்குரு, கௌரிபாஷாணச் செம்பு, பாஷாணக் கட்டு, தாளகக்கட்டு, அயச்செம்பு, கெந்திலிங்கம், லிங்கவீரம் முதலான முறைகள் இரசவாதிகட்கு உபயோகமான முறையில் உள்ளன. இது அச்சாக வில்லே. இதன்பின் 2 ஏடுகள் தாளகபற்பம், சங்குநீரில் கட்டிய பாஷாணக் கட்டு என்ற பெயரால் உள்ளன.

வரிசை எண். 548 சுவடி எண். 305

## போக நாயனுர் எழுநூற்றுத் திரட்டு

ஏடுகள்: 160. ஏட்டின் நிலைமை: பூச்சியரித்தது. பக்கத்திற்கு: 11—12 வரிகள். அளவு: 22X3½ செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 4000. ஆசிரியர்: போகநாயனுர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

ஆனந்த மாய்நின்ற வாயி பாதம்
அகண்டபரி பூரணமா மய்யர் பாதம்
ஆனந்த மாகிநின்ற கிணேசன் பாதம்
மருவியதோர் மூலத்தில் நந்தி பாதம்
தானந்த மாகியதோர் காலாங்கி பாதம்
சனகருடன் வியாக்கிரமா பதஞ்சலி பாதம்
போனந்த மாகியதோ ரிசிகள் பாதம்
போத்தியெழு நூத்திரட்டுப் புகலு வேனே!

முடிவு:

சொன்னதொரு யெழுநூற்றிற் பொய்யென்று மில்லேத்
துலங்கியதோர் மணித்தாயை யேழுதிரந் துதித்தேன்
சொன்னதொரு குருபதத்தை அனுதினமும் துதித்தேன்.
துலங்கியதோர் மூலகுரு பதத்தையென்றுந் துதித்தேன்
சொன்னதொரு காலாங்கி அய்யருட பதத்தைத்
தொழுதுகொண்டு எழுநூற்றுச் சிலவானஞ் சொன்னேன்
சொன்னதொரு சித்தருட பதங்களேயே போத்திச்
சூத்திரமா மெழுநூறுஞ் சொன்னேன் முற்றே.—760.

போகநாயனுர் எழுநூற்றுத்திரட்டு முடிந்தது முற்றும்.
ஆரணிய குருவே நமனா.

**குறிப்பு :**

இது எமது சுவடி எண் D/523—M/292-ன் மறுபிரதியாகும். அதைவிடச் சுத்தமான பிரதி. வாதிகளுக்கான ரசவாத முறைகளான பாஷாண வைப்பு, சூடன், கந்தக, லிங்க, பங்காளப்பச்சை, வெண்புற்று, கௌரி, பொற்றெட்டி, கற்பரி, மிருதாங்கி, ஏமசிங்கி, நாகப்பதங்கம், சிகப்புவீரம் முதலானவைகளின் வைப்பு முறைகள் உள்ளன.

---

வரிசை எண் : **549**. சுவடி எண் : **306**

## வைத்திய அட்டவணை

ஏடுகள் : 10. ஏட்டின் நிலைமை : பூச்சியரித்தது. பக்கத்திற்கு : 6—7 வரிகள். அளவு: 17 X 3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 150. ஆசிரியர் : இல்லை. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

வாதசுரத்துக்கு

வயிரு பொருமும் உள்ளங்கால் குளுந்து யிருக்கும். மயிற்குச்சரிக்கும். உடம்பு கடுக்கும். குளுந்து வரும். காயும். குற்றிருமல் வரும்.

இதுக்குக் கற்றூளை மடலை யரிந்துகொண்டு, இரண்டுன்னந் தண்டு, சிலந்தண்டு மெல்த்தொலியைச் சீவிப்போட்டு கடுக்காய் பொடி செய்து போட்டுப் பிசைந்து தெளியவைத்து யிறுத்து, கறுப்பட்டி கலந்து ஒரு படி கொடுக்க வயறு கழியும், சுரம் விடும். மோரும் சோருங் குடுக்கவும்.

**முடிவு :**

இதுக்கு மருந்து வயற்கொளிஞ்சியைத் துவைத்து புகையூரையும் கூட்டி வென்னீரில் துவளமிடவும். தீரும்.

வேகமார் நெரிசேருர் வளை நீழுதாப் போகமுபுரிமுந்தபூ.

**குறிப்பு :**

வைத்திய முறைகள் உள்ளன. வயிற்றுக்கடுப்பு, ரெத்தம் வீழல், வயிற்று வலி மருந்து, தேத்தங்காய் கற்பம் முதலானவைகள் உள்ளன. ஏட்டின் எண் 71—80 வரை உள்ளன. 79-வது ஏடு இல்லை. கடைசி 2 ஏடுகள் மாட்டு வாகடம் போல் தோன்றுகின்றது.

வரிசை எண் : **550.** சுவடி எண் : **307**

## அகத்தியர் நவக்கிரகக் கக்கிஷம் (கர்க்கசம்) 100

ஏடுகள் : 34. ஏட்டின் நிலைமை : பூச்சியரித்தது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு : 18x2½ செ. மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்கள் எண்ணிக்கை: **550.** ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

இந்துரவி தளலா யெட்டா வெளியொளியா
யந்தமுத லாகவரும் பொருளாய் — வந்தரிஞர்
திக்கு விஜையஞ் செலுத்தும் நவக்கிரக
கக்கிசத்துக் குன்னிருதாள் காப்பு.

**நூல்**

காற்பதற்கு நன்மை செய்தால் மோக்ஷமெய்துங்
கடும்பாவஞ் செய்தவர்க்கு நரக மெய்துங்
காற்பதற்குத் தன்னுயிர்போல் மன்னுயிரும் பேணும்
கயிலாச பதியானர் கடாட்சமெய்துங்
காற்பதற்குக் குருபூசை கினேசன் பூசை
கயிலாசச் சிவபூசை தேவி பூசை
காற்பதற்குக் குகன்பூசை வடுகன் பூசை
கற்றபெரி யோர்பாதப் பூசை செய்யே. -உ

**முடிவு :**

பண்டு சொன்ன குருமொழியை மறந் திடாதே
பாமரா ளுடன்வீண் வாய்பறைந்தி டாதே
விண்டு சொன்னேன் நவக்கிரக கக்கிஷத்தை
முற்றுமெய் யென்றூல்மெய் வேலுமயிலு முற்றே. -ரா

நவக்கிரக கக்கிஷநூறு முற்றிற்று.

சரவணபவ சண்முகநாத வேதாந்த குருபரன் துணை.

**காலம் :**

இஃது அலங்காபட்டி உவாத்தியாயர் பெரியசாமி கையெழுத்து குண்ணலைபட்டி சின்னய்யா பண்டாரமுடையது.

சற்குரு பாதாரவிந்த சரணஞ் சரணம்.

**குறிப்பு :**

இது சோதிடச் சுவடி, இதில் எந்திரதாபிதம், பஞ்சபூதநிறம், அக்ஷரம், குணம், அரைத்தொகை, கிரகநடுநின்ற பலன், உபக்கோள் சேர்க்கை, பட்சி சுபாசுப கர்மம், பூசைவிபரம், சடாக்ஷர, நாற்பத்து முக்கோணம், பூரணகும்பம்.

ஆசனம், பலகை, பூ, சமித்து முதலானவை கிரகிக்க, குருதோத்திரம், நூலிடக்கம் முதலானவைகள் உள்ளன. நூல் முழுமையாக உளது. கர்க்கசம் என்பது கக்கிஷம் என்றுயிற்று.

* *

வரிசை எண். **551** சுவடி எண். **308—a.**

## ரோமரிஷி வாக்கியம்

*ஏடுகள்: 6. ஏட்டின் நிலைமை: பூச்சியரித்துளது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். அளவு: 21X3 செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 100. ஆசிரியர்: ரோமரிஷி. முழுமை: முழுதுமுளது.*

**தொடக்கம் :**

நீதமுடன் ரோமரிஷி பூத லத்தில்
நெறிகெட்ட மானிடர்க்கு மருந்து சொல்வேன்
காதலுடன் கணபதியைத் தியானஞ் செய்து
கார்மேக நிறமுடைய தயிலப் போக்கை
ஆதரவாய் மருந்துவகை சொல்லக் கேளு
அப்பனே நிலவாகைச் சிவனார் வேம்பு
போதமுடன் விராலியுடன் மூலந் தானும்
புகழ்பெறவே கொண்டுவந்து உலத்திக் கொள்ளே!

முடிவு :

கேரப்பா முன்சொன்ன அஞ்சுங் கூட்டி
திறமாகப் பொடிசெய்து சீலையிற் பரப்பி
வாரப்பா திரியாக்கித் தயிலந் தோய்த்து
வளம்பெறவே திரிகொளுத்திப் பூத்தயிலம் வாங்கி
காரப்பா பூசைசெய்து சிவகா மிக்கி
களஞ்சிவெள்ளி யுருகையிலே தயிலந் தாக்குப்
பாரப்பா யேளரையாம் மாத்துக் காணும்
பரமன்பேரி லாணையிட்டோம் பசும்பொன் னுமே. -19

ரோமரிஷி வாக்கியம் முற்றும்.

சிவ சுந்தரந்துணை.

குறிப்பு :

வீரம், பூரம், பாஷாணங்கலந்த நிலவாகையெண்ணெய், தேங்காய் பாலெண்ணெய், பரங்கிப்பட்டைத் தயிலம், முதலான சித்தருக்கான தைல முறைகள் உள்ளன. வாதிகளுக்கும் உபயோகப்படுவன.

வரிசை எண். 552. சுவடி எண். 308 (b)

## அகத்தியர் பச்சை வெட்டு—16

ஏடுகள்: 6. ஏட்டின் நிலைமை: சிறிது ஒடிந்தது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். அளவு: 21 × 3 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 75. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

" அரிதாரம் பிரிதிவியே யாகி நிற்கும்
ஆனதொரு சைவீரம் அப்பு வாகும்
பெரிதான கெவுரிதான் தேயு வாகும்
பின்னையொரு வெள்ளையே வாயு வாகும்
பரிவான லிங்கமது ஆகாச மாகும்
அருந்தியே பட்டை யுடை ருடை லாகும்
தெரியாதே கயிலாச மின்னூ லப்பா
சித்தரையர் சொன்னவித்தை சகத்தில் பாரே!" -க

**முடிவு:**

யேத்திடச் சன்னிதீரும் எழும்பிடில் குட்டந்திரும்
பாத்திடப் பாங்கிதீரும் பார்வை சூலிய..........

**குறிப்பு:**

இதில் அரிதார (தாளக) பற்பம், வெள்ளைபாஷாண பற்பம், காந்தச் செந்தூரம், லிங்கச் சூரணம், மூலம் பவுத்திரத்திற்குப் புகை, முதலானவைகளுள்ளன. இது சுவடி எண் 185-b-ன் மறு பிரதி.

வரிசை எண்: 553. சுவடி எண்: 308 (c)

## வால்மீகர் பலபிணி வாத நாடிச் சூத்திரம்

ஏடுகள்: 3. ஏட்டின் நிலைமை: சிறிது பூச்சியரித்துளது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு 21x3 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 50. ஆசிரியர்: வால்மீகர். முழுமை: முற்றும்.

**தொடக்கம்:**

பலபிணி வாத னுடி பக்கமு மிட்டு மிக்க
தலமது கீழு மேலு தாண்டுருயுர் குதித்து மேலும்
உலையது நெருப்புப் போலும் லூடிய பிணிநோ யெல்லா
மலையது துயின்றே னுணை யரியநா லுளரப்ப தாமே! -க

**முடிவு :**

பலபிணி நாடி நோயைப் பரிவுடன் வகுத்திச் சொன்னோம்
பிலபிடி யாக நின்று பின்வரும் பணிக ளெல்லாம்
சிலையுறு மாலி ஞானை செகுதல மறியச் சொன்னோம்
மலையுறு புத்தில் மேவும் வால்மீக ருரைத்த வாறே. -மச

வால்மீக ரிசியருளிச் செய்த பிலபிணி வாத நாடிச் சூத்திர முகிந்தது முற்றும்.
தெட்சிணாமூர்த்தி வாலாம்பிகை ரெச்சிக்க வேண்டியது.

**குறிப்பு :**

இதில் நாடி நிதானம், வாதநாடி, துவந்தநாடி விபரம், சன்னி நாடிக் குறி குணம் முதலானவை கூறப்பட்டுள்ளன. நடைக்குத்தக்கபடி வியாதிக் குறிகளும் உள்ளன.

வரிசை எண் : **554** சுவடி எண் ; **308 (d)**

## வால்மீகரருளிய நனைசிலைச் சூத்திரம்

ஏடுகள் : 3 (4—6) ஏட்டின் நிலைமை : சிறிது பூச்சியரித்தது. பக்கத்திற்கு : 6-7 வரிகள். அளவு : 21x3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 40. ஆசிரியர் : வால்மீகர். முழுமை ; முற்றுமுளது.

**தொடக்கம் :**

சீலையை நனைத்து வெற்றித் திரமணிக் கிடையிற் சுற்றி
காலமே மூன்றே முக்கால் நாழிகை கடந்த பின்பு
சாலவே சீலை வாங்கித் தனிவிரல் வாத நாடி
கோலமாய்க் குறித்து வாங்கி யதிர்ந்திடில் மரண மொன்றே. -க

**முடிவு :**

ஆடையை நனைத்துச் சுற்றி யணிக்கிடைக் குறிப்பு நெய்யில்
ஊடவே சுற்றிப் பார்த்து வுள்ளதோர் நன்மை தின்மை
தேடியா ராய்ந்து பார்த்துச் செகதலம் விளங்க நாமே
நாடிவால் மீகர் சொன்னார் நானென்று மறிந்தி லேனே. -கக

நனையாடை நெய்ச்சூத்திரம் முற்றும்.

**குறிப்பு :**

மணிக்கட்டில், தண்ணீர் நெய் இவற்றில் நனைத்தெடுத்த சீலையை 1 முதல் 3¾ நாழிகை வரை சுற்றிவைத்து எடுத்தபின்னர் வாதநாடியைக் கூர்ந்து கவனித்து, மரணலட்சணத்தின் வகையினைக் கூறும் நூலிது.

வரிசை எண் : 555 சுவடி எண் : 308 (e)

## வால்மீகர் அருளிய கயிற்று சூத்திரம்

ஏடுகள் : 2 (7&8). ஏட்டின் நிலைமை : சிறிது பூச்சியரித்தது. பக்கத்திற்கு : 7 வரிகள். அளவு : 21x3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை: 30. ஆசிரியர் : வால்மீகர். முழுமை : முழுமையாக உளது.

**தொடக்கம் ;**

வெள்ளை வாரணன் பாதம் வாங்கியே
உள்ளங் கால்கயி றுச்சி வரைக்கு
மெள்ள வேயளந் துள்ளகுறிப் பெல்லாம்
வள்ளல் மாமுனி வால்மீகர் கூறுவார். -க

**முடிவு :**

சாத்திரக் கயிற்றை மேனி தன்னடி சிரசு மட்டும்
சூத்திர மளந்து பார்க்கில் சொல்க்குறி விளம்பக் கேளீர்
பாத்திர முழமு நாலு பணிவிர லிருபத் தெட்டு
காந்திரஞ் சாணு மெட்டு கண்டதால் சாவ தேளே. -யி

வால்மீகரருளி(ய) கயத்துச் சூத்திரம் முகிந்தது. முற்றும்.

**குறிப்பு :**

உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரை ஒரு கயிற்றினல் அளந்து, அதனை முழம், சாண்களாக்கிக் கணக்கிட்டுத் தெரிந்து கொண்டு, அதன்படி மரணம் ஏற்படுங் காலத்தைச் சொல்லக் கூடிய ஒரு நூலாகுமிது. ஆனல் இது சாமுத்ரிகா லட்சணமல்ல. நோயாளிகளுக்கு மாத்திரமே பார்த்து, மரண அறிகுறிகள் கூறக் கூடியவை.

வரிசை எண். 556. சுவடி எண். 308 (f)

## வால்மீகர் அருளிய பலவிரல் சூத்திரம்

ஏடு: 1. (9). ஏட்டின் நிலைமை: சிறிது பூச்சியரித்தது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 21X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 25. ஆசிரியர்: வால்மீகர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

பரிந்திடும் பாகம் பாதி பத்திய விரலும் பத்து
திரிந்திடு மிகுதி தோன்றுங் கைவிர லுள்ள பத்தும்
அறிந்திடுந் தலையிற் சூள அளந்திடுங் கயிற்றை நோக்கி
இரிந்திட வறியச் சொன்னேம் விரும்பிவால் மீகர் தாமே. -க

**முடிவு :**

பத்திய பாகந் தள்ளி சுத்திய விரலும் பத்து
சூட்சமாய்த் தன்று கண்டால்
வெத்திவித் தகாதம் மானே மேதினி யறியச் சொன்னேஞ்
சித்தியாய் மருந்துஞ் செல்லுஞ் சீக்கிரம் பிள்ளையன் றனே -ரு

பலவிரல் சூத்திரம் முற்றும்.

**குறிப்பு :**

நோயாளிக்குரிய நன்மை தீமைகளை அறிவிக்கும் கயிறு சாத்திரம். பத்து விரல்களின் மொத்த நீளத்தைக் கயிற்றினலளந்து, அவன் தலையைச் சூழ அளந்து பார்த்து மரணக் குறியை உணர்த்தும் நூல்.

வரிசை எண். **557**. சுவடி எண். **308** (g)

## வால்மீகர் அருளிய உறுப்புச் சூத்திரம்

ஏடுகள்: 2 (*10&11*). ஏட்டின் நிலைமை: சிறிது அரித்த நிலை. பக்கத்திற்கு: 5—7 வரிகள். அளவு: 21X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *30*. ஆசிரியர்: வால்மீகர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

இடதுள்ளங்கால் வெதும்பி இசைந்திடும் வளதுள்ளங்கால்
துடுவதுநீரதாக தன்றிய குளச்சுத்தண்ணீர்
விடுவது போலே கண்டால் மிகுபிணி தீராதென்றும்
படுபது திட்டஞ் சொன்னே னம்பதுநாள்ச் சாவுதானே. -க

**முடிவு :**

சூரிய திரேக மெல்லாஞ் சுடாது போலே தோன்றிப்
பாரியங் கையுங் காலும் பஞ்சதாய் வெதும்பு மாகில்
சீறிய முழங்கால் நெத்தி திரமுடன் காச்ச லுண்டாம்
ஆரிய மாலி ஞானே யவர்பிழைத் திருப்பர் திண்ணம்.

வால்மீகரிஷி யருளிச்செய்த வுருப்புச் சூத்திர முகிந்தது. முற்றும்.

குறிப்பு :

உறுப்புக்களின் நோய்களிலிருந்து மரணக் குறியறிதல்.

வரிசை எண். 558. சுவடி எண். 308 (h)

## வால்மீகி ரிஷி அருளிச்செய்த பூதநாடி

ஏடுகள்: 4. (12—15). ஏட்டின் நிலைமை: பூச்சியரித்தது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 21X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 60. ஆசிரியர்: வால்மீகர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

பகரமா முன்கைக் கீழே பகுத்தன ரைந்து ஞடி
அகரமா மதனிற் கிட்ட இகரமா மதனிற் கிட்ட
உகரமா மதனிற் கிட்ட எகரமா மதனிற் கிட்ட
ஒகரமா மதனிற் கிட்டவென் ளுேதினர் துய்ய நூலோர் -க

முடிவு :

நிறைந்திடு பூத நாடி நெருப்பது போலே சுட்டால்
சிறந்திடும் பில்லி யாகுஞ் செய்திடும் பரிச்சை கேளீர்
குறைந்திடிற் குரங்கு நாயுங் கூட்டமும் பயமுங் காட்டு
மறந்திட மயக்க முண்டாம் வால்மீக ருரைத்த வாறே. -22

பூத்திர நாடி முற்றும்.

குறிப்பு :

பூத நாடி நடக்கும் குறிகளிலிருந்து அதன் பலன்களைக் கூறும் நூல். பூனை நடை, காக்கை நடை, வெள்ளெலி நடை, முளே போன்ற நடை, ஒளிந்த நடை, பாம்பு போல் நெளிந்த நடை, சங்கு போல் ஊர்ந்து செல்லுதல், நண்டு போல் செல்லுதல், முதலானவை நாடியின் நடை பேதங்களாம்.

வரிசை எண். 559. சுவடி எண். 308 (i)

## பலதிரட்டு வைத்தியம்

ஏடுகள்: 26, ஏட்டின் நிலைமை; பூச்சியரித்த நிலை. பக்கத்திற்கு: 6—8 வரிகள். அளவு: 21X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை 450. ஆசிரியர்: இல்லை. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

இஞ்சிச்சூரணம்

வேதங்கமழ் மலையிஞ்சியின் மேலின் றேலி
தள்ளிவிட்டே தறியிட்டே பொடிபட்டே பலமெட்டே
சிதம்புரி தேசிக்கனி மூவைந்து பிளிந்து
சிலமேவிடு கிளரிக்கதிர் நிளல்மீ தினிலேசிதறிப்
போதன்றிய நெய்யில்ப்படி யரைவிட்டதில் வறுபின்
புரிவீரதி லிடுசீனியின் நிரையேதிரி பலமாங்
கோதன்றிய ரோகஙகையின் நீரேயொரு பலமாங்
கொடுசீரக நிரைசேரிரு பலமேசொல்லு மினமே. -1

முடிவு :

மேல் காட்டிய பலம் இருபத்தி நாலையும் தூளாயிடித்துக் கலசத்திட்டு தேன்மெழுகையுங் கூடப்போட்டு வாலுகா யந்திரம் பூட்டி உளுந்துச் சீலை செய்து திராவகம் யிறக்கு. சீனியில் அஞ்சு துளிவிட்டு சன்னியளுக்குக் கொடுக்கலாம்.

குறிப்பு :

இஞ்சிச் சூரணம், தேத்தான் விரை லேகியம், கடுக்காய் லேகியம், இருமலுக்கு, குஷ்டத்திற்கு, எட்டிக்கொட்டைத் தயிலம், மார்க்கண்ட மெழுகு, சாதிலிங்கக் குழம்பு, தாளீசாதி வடகம், பித்தக் கிறுகைக்கு மணிமாட்சிப் பிரயோகம், சாம்பிராணிப் பதங்கம் முதலான முறைகள் உள்ளன. பக்கங்கள் ஒரே சீராக இல்லை.

309-ம் எண்ணுள்ள சுவடி இல்லை.

வரிசை எண் : 560 சுவடி எண் : 310 (a)

## (பழனி அறுமுகவன்) திருவெண்ணீற்றுப் பதிகம்

ஏடுகள் : 4. ஏட்டின் நிலைமை : மிகப்பூச்சியரித்தும் ஒடிந்தும் உளது. பக்கத்திற்கு : 6—7 வரிகள். அளவு : 36x3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 150. ஆசிரியர் : அறியக்கூட வில்லை. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

... ... ... று வெகுரூபந் தனக்களகு கோலம் சமைந்த நீறு
கொடிய யெண்ணுயிரஞ் சமணரை ... ... ... ண்ட நீறு

துண்ட கண்டப்படக் குலவிய சூரரைத் துணிக்கவேல்
தொட்டநீறு
சொல்லரிய பூதப்பசாசு ... ... ... தொட்டநீறு
செண்டுகை மேருவில் பிடித்தவன் கூன்முதுகு செவ்வேள்
நிமிர்த்தநீறு
சிவநம்பில்லாத மூழுமூட ... ... ... கிடவடித்தநீறு
அண்டநவ கண்டபகி ரண்டபிர தாபனே ஆதியென வந்தநீறு
அடியவர்க் கருளுதவி தருகிருபை பளனிமலை அறுமுகவன் தரு
திருவெண்ணீரே. -சு

முடிவு :

பத்துத் திரம் மந்திரமும் நித்தியம் நினைப்பவர்க்குப் பாக்கியமான நீறு
பதினுயிரந் தீக்கூட்ட மாகவே பாண்டியயன் முன்சென்றநீறு
சித்திக்கும் சித்தர்க்கு வித்தாகி நின்றதிரு சரவணைகுமாரநீறு
சித்தசனன் மைத்துனன் வெத்திவே லாயுதன் செவ்வேள்
தந்தநீறு
கத்தூரி குங்குமம் களபமுலை வள்ளியை கவர்ந்துடன் மகிழ்ந்தநீறு
கார்த்தியென கடம்பனச விமலை காங்கயன் தந்தநீறு
முத்துமணி நவரத்தின தண்டையுங் காலுமென நித்தமுந்துணையாக
முழுநீல மரகத மயிலேறி யென்னுளு மென்முன்னிற்க
வேணுமுருகா
அத்தனர் பங்கினில் நித்திய கலியாணி அகிலமுயத் தலத்தியான
அரியயன் தேடறிய அரனுடைய பங்கான அலங்கார வெல்லதந்த
அடியவர்க் கருளிய கிருபை செறு பளனிமலை அறுமுகவற்
தரு திருவெண்ணீறே. -ம

குருபாதம் முன்னிற்க

குறிப்பு :

இது வைத்தியமல்ல, பழ்னி முருகன் மீது பாடிய திருவெண்ணீற்றுப் பதிகம். பிழைகள் அதிகம். அச்சாகியுளதாக அறியக் கூடவில்லை.

வரிசை எண். 561. சுவடி எண். 310 (b)

## பலதிரட்டு வைத்தியம்

ஏடுகள்: 20 (சீராக இல்லை). ஏட்டின் நிலைமை: ஓடிந்தும் பூச்சி யரித்தும் உளது. பக்கத்திற்கு: 5 வரிகள். அளவு: 36X3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை: 500. ஆசிரியர்: இல்லை. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

குளுந்தசிலுமத————————சுரத்தின் குணமிதுவே. -எ
உத்ததோர் வாயும் நாறும் உடம்பெல்லாம் மயிர்க்கூச் சாகும்
மெத்தவே யுடலுங் காயும் மேனியு மஞ்ச ளாகுங்
கத்தநீள் பித்த மாகில் காயவே முகங்கள் வேற்கும்
பித்தமே கோபித் தாக்கால் பேசுகை திண்ணந் தானே. -அ

முடிவு :

ஸ்திரீகளுக்கு மஞ்சள் வசியம்.

மஞ்சள் 2 பலம் கொண்டுவந்து. கண்டுகண்டாய் வெட்டி, ஒருபானையில் குறுணி தண்ணீர் விட்டு, அதற்குள்ளே ஒரு சாரைப் பாம்பை யடித்துப் போட்டு, அந்தப் பானைவாயில் ஒரு புதுச்சீலை வண்டு (வேடு) கட்டி வேட்டின் மேல் அந்த மஞ்சள் துண்டுகளை வைத்து அடுப்பிலேற்றித் தண்ணீர் வற்றும்வரை எரித்து. அப்பால் அந்த மஞ்சளை எடுத்துக்கொண்டு, அந்த மஞ்சள் குளிக்கவும். பெண்களே வேண்டா வெறுப்பாயிருக்கிற பேருக்கு இந்தப்படிப் பண்ணிக் குளித்தால் வசப்பட்டுப் போவார்கள்.

குமரன் துணை. மீனாட்சி துணை.

குறிப்பு :

இதில் பித்த சன்னி சுரச் சூரணம், மந்த பித்தகஷாயம். அதிசாரக் கஷாயம், சுரகேசரி, மோர் எண்ணெய், கெர்ப்பரோகக் குறி, வாதகபச் சுரமருந்துகள்' வசியம் முதலான வைத்தியமுறைகள் உள்ளன. பல ஏடுகள் இல்லை. பலவகை பான நல்ல மருந்துகள் உள்ளன.

வரிசை எண் : 562 சுவடி எண் : 311 (a)

## சாம்பிராணி குணமுஞ் செயலும்

ஏடு: 1. ஏட்டின் நிலைமை; ஒடிந்தும் பூச்சியரித்தும் உளது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 19X4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 10. ஆசிரியர்: இல்லை. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

துலைபெருகு வாதமுந் தலையெரிவு சூலையுந்
துடருமிகு சன்னி வலியுந்
துயரமுறு தலையிடியு மதிகசுர சாகமுந்
சுத்தசல தோஷ முதலும்

பகருமிரு நயனமுந் துயிலாத பித்தமும்
பலசன்னி தோஷ குணமும்
பானுகதி ருதயமதி லானதலை யெறிவும்
பயித்திய மகத்து மிதுவால்
முகமுடிய சன்னிவகை யநேசமும் ————
முத்திய சயித்திய விதமு
மூளுமொ (ரு) (மே)கமொடு கூத்துபல சோகமு
மோசமுறு காச வினையுஞ்
சகல (நோய்) தீரவே சுகமணுகு ஆகமுந்
தாஷ்ட்டீக மாகி விடுமே
சகலஅம ரர்புகழ மகிழுநற் றீபமொடு
சாம்பிராணி பசுங்க குணமே!

குறிப்பு :

ஓரேபாடல் மட்டுமுளது. இடையிடையே ஏடுசரியில்லாததால் சரியான பாடல் கிடைத்திலது.

வரிசை எண் : **563** சுவடி எண் . 311 (b)

## மருந்துவாரிலக்கணம்

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: பூச்சியரித்தது. பக்கத்திற்கு: 4—8 வரிகள். அளவு: 19X4 செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 25. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

குருடன் புகரா மாத்தாண்டன் குஷ்ட்டரோகியாமெஞ்ஞு
புருடன் றலைநோய் புரந்தாற்குப் புயத்தில்லா தந்தகற்கு
சுரநோயுண்டு க்ஷயரோகஞ் சோமனுக்கு நீரழிவு
வருணற் குலவார் மாற்கு நோயுண் டுண்டெ மருத்துவரே.

முடிவு :

கன்னெஞ்சன் வழிபறிப்போன் கண்டது பிறமே சொல்வோன்
மன்னெடுங் கோபஞ்செய்வோன் மகாதேவர் நிந்தைசெய்வோன்
பொன்னதைப் புதைத்துவைத்து புண்ணிதீர் மருந்து செய்யில்
இன்னெடுங் கொடிய பாவிக் கிடுமருந் தேருதன்றே.

குறிப்பு :

இரண்டேடுகளிலும், முதலிரண்டு பாடல்கள் மீண்டும் எழுதப்பட்டுள்ளன. அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

வரிசை எண் : **564** சுவடி எண் : **311** (c)

## அகத்தியர் முப்பு பதினாறு

ஏடுகள்; 5. ஏட்டின் நிலைமை: பூச்சியரித்தது. பக்கத்திற்கு: 9—12 வரிகள். அளவு: 19X4 செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 100. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்து.

தொடக்கம் :

பூரணமாய்த் திரண்ட கன்னி யாளேருமல்
புதுமையாய்ச் சொல்லிட்டேன் முப்பூவப்பா
காரணமாய் அளவிளக்க மூன்று நாளுங்
கனமான பீங்கானிற் சேரவாங்கி
வாரணமா யதையெடுத்து வைத்துக் கொண்டு
வளமான அவளவனும் அமுரிவாங்கி
காரணமா யறுநா ளானபின்பு
கனமான சட்டியிலே விட்டுக் காச்சே.

முடிவு :

பாரப்பா யிப்படியே வந்த மூலம்
பரதேசிக் கன்னமிட்டுக் குளங்கள் வெட்டி
பகபட்சி முதலான தற்மஞ் செய்து
காரப்பா குரு

குறிப்பு :

சுவடி எண் 236-ன் வேறுபட்டது. பெயர் ஒன்றே யாயினும் பொருள் வேறுபாடுளது. இதில் காயசித்தி முறைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண். **565.** சுவடி எண். **311** (d)

## தக்ஷிணாமூர்த்தி பூர்ண சந்திரோதய வாலை

ஏடுகள்: 24. ஏட்டின் நிலைமை: பூச்சியரித்தது. பக்கத்திற்கு: 10—12 வரிகள். அளவு : 19X4 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை: 600. ஆசிரியர்: தட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

மூச்சுவிடும் போதிருந்த ரசவா தப்பெண்
மோகனபூ ரணசந்திர னுதைய வாலே
ஆச்சரியம் ஆயிரத்தி யிருநூ றுய்ந்து
அரன்சொன்ன ரதிலிந்த யிருநூ றப்பா
நீச்சில்லே நிலேயில்லே கரையுங் காமேலு
நெடுந்தூர மலைரைகொடி நெளித மில்லே
பேச்சரிய ஆயியுட பதத்தைப் போற்றிப்
பிதத்துகிரேன் குமரகுரு பரன்காப் பாமே. -க

முடிவு :

வொருரை சந்திர வாலே மெய்நூலேப்
பேருரை செய்யப் பெரியோ ரெனனுடி
சீருரை செய்தொழில் தேவாதி சித்தி
ஏருவ ரீதிரு நூருரை முற்றே -200

ஆகப் பூரண சந்திரோதைய வாலே எழுதி முகிந்து முற்றும்.

சரஅணெற்பவ சாமிநாதா சண்முக நாதா ரெட்சி.

குறிப்பு :

இதில் சாதி நாலினுஞ்சேர, துருசுச்சுன்னம், சாதிலிங்க மெழுகு, மை வகைகள், மந்திரம், சிவமணி, மாரணமந்திரம், பேய்ஓட்ட, பணம் போக, குழித்தைலம், முப்புமுறை, கெந்தகச் செந்தூரம், அதனல் வேதை. வைத்தியம் முதலியன உள்ளன.

வரிசை எண். 566. சுவடி எண். 311—(ஆ)

## அகத்தியர் இருநூற்றைந்து

ஏடுகள்: 35. ஏட்டின் நிலைமை: பூச்சியரித்தது. பக்கத்திற்கு: 10—13 வரிகள். அளவு: 19X4 செ. மீ. எழுத்து: தமிழ். கி, எண்ணிக்கை: 900. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

பூரணமாய் மும்முலப் பொறியிற் சூடாய்ப்
புகையெழும்பி மேகமதாய்ச் சிரசிற் சூடாய்
காரணமாய் நீர்க்கலந்து கன்னி ரோகங்
கனலெழுந்து வாயுவினற் சூலே ரோக

வராணமாம் வாதத்தி லெழுந்த மேகம்
அதியதொரு பித்தத்தாற் கிரணி யாச்சுத்
தாரணமாம் வாயுவினற் குன்ம மாச்சு
சார்ந்தசிலேற் பனங்கூடில்ச் சயம தாமே! -௫

முடிவு :

ஈய்ந்ததினற் றேசமில்லை கொடுக்க லாங்கே
ளின்னூலிற் சொன்னதெல்லாஞ் செய்வா ருனல்
ஆய்ந்ததின லென்னபலன் பார்த்தா லென்ன
அப்பனே குருமுடிக்க அறியா மாண்பர்
மாய்ந்ததின லென்னபலன் மனமருண்டு
மகத்தான நூல்களெல்லாம் பொய்பொய் யென்பார்
காய்ந்ததினற் குற்றமில்லை முப்புக் கெல்லாங்
கைமுறையாய் செற்கூறிந்தோன் கர்த்தா வாமே. -உ௱சு

இருநூற்றஞ்சு முகிந்தது முற்றும்.

சரஅணேற்பவ சாமிநாதா சண்முகநாதா. லெட்சி வாலாம்பிகை

குறிப்பு :

இது 294-hன் மறுபிரதியாகும். இதில் ஒரு செய்யுள் அதிகமாயுளது. பாடபேதங்கள் மிகுதியாயுள்ளன. இதில் தாமிரபற்பமுறை வெண்வங்கபற்பம், கல்நார் பற்பம், மண்டுரபற்பம், சாதிலிங்கம், தாளகம், சாத்திர பேதி பற்பம், வெள்ளைக்குந்துருக்க பற்பம், பாஷாண நவச்சாரம், உப்பு, துருசு, தங்க பற்பம் செய்முறை, குறுந்தொட்டிவேர்த் தயிலம், சூரித்தயிலம், சென்னகரப் பட்டைத் தயிலம், முசுறு முட்டைத் தயிலம், சுரவாயு, சாரதோஷத்திற்கு புட்டவியல், வேம்புத் தயிலம் முதலானவை உள்ளன.

வரிசை எண். 567 சுவடி எண். 311 (f)

## (அகத்தியர்) முன்னூற்றுக்குச் சுருக்கம் முப்பத்தாறு

ஏடுகள்: 6. (69—74) ஏட்டின் நிலைமை: பூச்சியரித்தது. பக்கத்திற்கு: 12—13. அளவு: 19X4 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 250. ஆசிரியர்: (அகத்தியர்). முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

அருள்விளைந்து அகண்டபரி பூரணமாய் நின்ற
ஆதியந்த மில்லாத அம்பரத்தைப் போற்றி

துருவமாய் முன்னூற்றில் வயித்திய வாத
மதைக்குறுக்குச் சொல்லிவிட்டேன் முப்பத் தாறுய்
கருவடக்க மில்லாமல் ………… …………
………… ………… ………… …………
ஒருமனதாய் வாதிமக னிதனைச் செய்ய
உலகத்தில் நோய்களெல்லாம் ஓடும் பாரே! -க

முடிவு :

ஆமப்பா இந்தமுறை வயித்தியம் பாரு
அட்டதிசை மெய்க்கையிலே நோய்க ளோடும்
நாமப்பா வைத்தியத்தின் மருந்தை எல்லா
நலமாகக் குறுக்கிவைத்தேன் முப்பத் தாறு
வாமப்பா யிந்தவகை மருந்தை வைத்தால்
வயித்தியன்பே ருரைக்கையிலே நோய்க ளோடுந்
தாமப்பா எடுரெண்டு மிருபத் தாறுந்
தடையாலே யுருவேரச் சித்தியாமே. -நஎ

முப்பத்தாறு முகிந்தது முற்றும்.
சண்முகநாதா ரெட்சி.

குறிப்பு :

இது சுவடி எண். 276-a—அகத்தியர் முப்பத்தாறின் மறுபிரதியாகும். பாட பேதங்கள் மிக்குள்ளன. இதில் தாமிர வெள்ளை, லோகவெள்ளை, காந்த வெள்ளை, தங்கபற்பம், பூபதி மாத்திரை முதலானவைகள் உள்ளன. இதில் முதற்பாடல் அதிகமாக உள்ளதால் செய்யுள் எண் 37 ஆக உள்ளது.

---

வரிசை எண் : 568 சுவடி எண்: 311 (g)

## (அகத்தியர்) பூரண சூத்திரத்துக்குச் சுருக்கம் நாற்பத்தெட்டு

ஏடுகள்: 8. ஏட்டின் நிலைமை: பூச்சியரித்தது. பக்கத்திற்கு: 12—13 வரிகள். அளவு: 19 × 4 செ.மீ. எழுத்து; தமிழ். கிரந்தங் களின் எண்ணிக்கை: 200. ஆசிரியர்: (அகத்தியர்). முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

நாடியதோர் பூரணமாம் வேதாந் தத்தில்
நடனதிரு சூத்திரத்தைப் பாடுதற்கு

ஆடியதோர் கணபதியுங் கந்தன் காப்பு
அருள்பெருகு சித்தர்முதல் ரிஷிகள் காப்புக்
கூடியதோர் ஞானபர வாலை யாலே
கூறுகிறேன் யகாரமுடி ஸ்ரீங்கா ரத்தால்
பாடியதோர் பலநூல்கள் பொய்யாய்ப் போக
பாலர்க்கு மெந்தனுட நூலில் தானே. -௧

முடிவு :

பாகமாய்ச் செய்துநீ யனுப்பா னத்தில்ப்
பரிந்திடுநீ நோய்களெல்லாம் பறந்து போகுந்
தேகமே வச்சிரமிட்ட (வச்சிர)காய மாகும்
சிவசிவா சிவஞான ரிஷிகள் சித்தர்
ஆகமே பூரணசூத் திரத்தைப் பாடி
யடக்கிட்டே னப்பாகேள் தாளகத் தினிமுல்
நாடினே னிந்தனூல் நாற்பத் தெட்டு
நன்றான வைத்தியமு மாகு முற்றே. -௪௫

குறிப்பு :

இது, சுவடி எண் 289-bன் மறுபிரதி. இந்த 289-bல் 48 செய்யுட்கள் உள்ளன. இதில் கடைசிப் பாடலில் நாற்பத்தெட்டு என்ற சொல் காணப் படினும் செய்யுட்கள் 45-ஏ உள்ளன. கடைசிச் செய்யுளும் சரியில்லை. பாட பேதங்கள் மிக அதிகமாக உள்ளன.

இதில் அரிதாரக்கட்டு, கெந்தகக்கட்டு, நாகசுத்தி, நாகக்கட்டு, லேகியம், பைரவபூசை, வசியத்திலதம், அய லேகியம், வாடைப்பொடி, அரப்பொடிச் செம்புச் செந்தூரம் முதலான முறைகள் உள்ளன.

வரிசை எண் 569. சுவடி எண். 311 (h)

## அகத்தியர் வைத்தியம் ஐந்நூறு

ஏடுகள்: 9. ஏட்டின் நிலைமை: பூச்சியரித்தது. பக்கத்திற்கு: 10-12 வரிகள். அளவு: 19 × 4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 225. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

நாடியதோ ரகண்டபூ ரணமாய் நின்ற
நாதமுற்றுங் கெணெசனொடு கந்தன் காப்பு
சூடியதோர் சிவனொரு மெனைப் பெற்ற
ஆத்தாளுமென் நாவுதனில் குடிகொண் டேதான்

பாடியதோர் வைத்தியமன் பதுதான் சொல்வேன்
பண்பான புலத்தியனே யிந்நூ லோடே
தேடியதோர் பூரணசூத் திரத்தில் நன்றாய்
தீட்சையொடு கருக்குருவின் திறம தாயே. -க

முடிவு :

கண்டாக்கால் வாதமெல்லா மடிக்கீழ்ப் போற்றும்
கருவான சவுக்கார மகிமை தன்னை
விண்டாக்கால் நசித்திடுவாய் நூல்கொடாதே
வேதாந்த ஞானியென்று லீயான் பாரு
தொண்டுசெய்து பதினாறு வருடங் காத்தால்ச்
சோதிச்சுப் பின்பவர்க்கு ஈய்வா யப்பா
சண்டமா ருதம்போலே வளிய தாகச்
சாத்தியதோர் வயித்தியமன் பதுதான் முத்தே. -ருய

வயித்தியம். ருய முகிந்தது முற்றும்.

குறிப்பு :

இது, சுவடி எண் 121-h-ன் மறுபிரதியாகும். பாடபேதங்கள் மிகமிக அதிகமாக உள்ளன. இதில், பூனீறு வித்தை, வெள்ளீய பற்பம், அரையாப் பிற்குச் சூரி எண்ணெய், சித்தர் பெருமை, வெள்ளைப் பாஷாணபற்பம், பாஷாணக் களங்கு, மூதண்டக் கஷாயம், சவுக்கார வைப்பு, முதலானவைகள் அடங்கியுள்ளன.

வரிசை எண் : 570. சுவடி எண் : 312.

## அகத்தியர் கருமானம் 1200

ஏடுகள்: 127. ஏட்டின் நிலைமை: பூச்சியரித்தும் ஓடிந்தும் உள்ளன. பக்கத்திற்கு: 8—11. வரிகள். அளவு: 28X4½ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 3000. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

ஆதிபரா பரத்தினுட கிருபை கூர்ந்து
அன்பான மனோன்மணியை த் ..............
........யெனுங் கமலமல ரமுதங் கொண்டு
சுந்தரம்போல் வாதத்தில் ........ ........
........ ........ யத்தில் ரெண்டு லெட்சம்
நிலைத்ததொரு சூத்திரத்தில் கோடா கோடி.

......... ......... படைத்த பெரியோர்க் கெல்லாம்
மனமகிழ்ந்து கருக்குருவாய் வசனித் தேனே !

முடிவு :

ஆச்சப்பா சேட்டுமந்தான் மீறித் தானுல்
அப்பனே தோஷத்துக் குறுதி யாச்சு
நீச்சப்பா தோஷத்துக் கமுதா னென்ன
நிலையான வாதமதில்ப் பித்த மீறிப்
போச்சப்பா ............ .............. -அசரு

குறிப்பு :

ஏடுகள் தொடர்ச்சியாக இல்லை. இடையிடையே சில ஏடுகள் இல்லை. இதில் மானச பூசை, சோதிகரி, கவுனசரக்குளிகை, பொதிகையின் பெயர், சகல ரோகந்திர, சரபநிவிருத்தி, சித்திரத்தின் சித்து, தாமிர சித்து, அதிமோகச் சித்து, மாரணத்தின் சித்து, வாடைச்சித்து, வாயுஸ்தம்ப சித்து, விநோத வித்தை சித்து, ஞானமார்க்கம், சரக்குவைப்பு, துருசு, துருசுக்குரு, பாடாண வைப்பு, சவ்வீரவைப்பு, சிங்கிவைப்பு, தாளகக்கட்டு, முதலானவைகளுள்ளன.

---

வரிசை எண் : **571** சுவடி எண் : **313**

## அகத்தியர் நவகண்டமாலை

ஏடுகள் : 10. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை. பக்கத்திற்கு : 8—10 வரிகள். அளவு : $16\frac{1}{2} \times 3$ செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 200. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : தொடக்கம் (8 பாடல்கள்) இல்லை, கடைசி உளது.

தொடக்கம் :

... ... ... ... ... ... ... ... ... ...
... ... திடுமவுன மவூணி யிலங்கிய முப்பாழ்க் கப்பால்
சேத்திடு அறிவு மேலே சிதம்பத்த கயிலை மேலி
போத்திடு தீப மேத்தி பூரணக் காட்சி பாரே. -க

முடிவு :

வாங்கிடில் மோக முண்டாம் மழைபொழி யழைப்பு வித்தை
தூங்கிடல் செய்யலாகா சொற்க்கப்பேர் முத்தி யாமே. -கூஅ

அகஸ்தியர் நவகண்டமாலை முற்றும்.
குரு கிருபை மீனுஷியம்மன் துணை.

குறிப்பு :

இது, மந்திர சாத்திரமாகும். இதன் பின்னர், தொடக்கம் முடிவில்லாத 13 ஏடுகள் உள்ளன. இதில் விநாயக சித்தி, பிரம சித்தி, விஷ்ணு சித்தி,

மகேசுவர சித்தி முதலானவைகள் உள்ளன. சிவதீட்சை விதிகளும் சக்கரச் செய்யுட்களும் உள்ளன.

வரிசை எண் : 572. சுவடி எண் : 314 (a)

## பிரம்மமுனி கருக்கிடை சூத்திரம் 400

ஏடுகள் : 2 + 105 + 2. ஏட்டின் நிலைமை : பூச்சியரித்தும், ஒடிந்தும் உள்ளன. பக்கத்திற்கு : 8 வரிகள். அளவு : 28 × 3½ செ. மீ. எழுத்து : தமிழ். சி. எண்ணிக்கை : 2100. ஆசிரியர் : பிரம்மமுனி. முழுமை : முழுதுமுளது.

**தொடக்கம் :**

சீரணி சோதி யான சின்மய ஞான மூர்த்தி
யாரணி கொன்றை சூடி யாரணிந் தரனைப் போற்றி
வாரணி ரிஷிகள் பாதம் வணங்கிய வயித்திய நூலை
காரண மாகப் பாடக் கணபதி காப்புத் தானே.

**முடிவு**

தெளிவான ஆயிரத்தைக் குறுக்கி நன்றாய்ச்
செப்பினேன் நானூற்றில் திறமாய் மைந்தா
களிவான கருவெல்லாம் வெட்டவெளி யாகக்
கருவாகச் சொல்லிவிட்டேன் கண்டு பாரு
வழியான முறையெல்லாம் வகையாய்ச் சொன்னேன்
வாதமொடு வயித்தியமும் நன்றாய்த் தோணு
மழியாத பொருளையெல்லா மிதிலே சொன்னே
னடங்கிநின்ற கருக்கிடைச்சூத் திரந்தான் முற்றே ! -403

பிரமமுனி கருக்கிடை சூத்திரம் நானூறு முற்றிற்று.
சண்முகநாதன் துணை.

**காலம் :**

1317-ம் வருடம் ஆவணிமீ 5்ல பூருவபட்சம் சதுர்த்தசியுந் திருவோண நட்சத்திரத்தில் எழுதினது.

கடவுடுணை.

(முகப்பு ஏட்டில் க. ப. சங்கரலிங்கம் சுவடி என்றுளது.)

**குறிப்பு :**

இதில் மேகம், குட்டம் இவைகளுக்குச் செங்கொட்டை (பல்லாதி) மேக ராஜாங்க எண்ணெய், வாதத்திற்கு அஞ்செண்ணெய்த் தைலம், வில்வாதிக்குழம்பு, சுத்த

வல்லாதி எண்ணெய், மகாமேககிருதம், விஷமுஷ்டித்தைலம், க்ஷயத்திற்கு ஆடாதோடை லேகியம், அரிதாரபற்பம், தந்த நோய்க்கு உப்பு, பல்வலிக் கஷாயம், சூசிகா வாயுவிற்கு லேகியம், காரசாரம் முதலானவைகளுள்ளன.

இது 162-ன் (பிரம்மமுனி 360 என்ற சுவடியின்), மறு பிரதியாகும். ஆனால் இந்தச் சுவடியில் செய்யுட்கள் முழுமையும் உள்ளன. அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை. முன் இரண்டு ஏடுகளில் வாந்திபேதிக்கு மருந்து முதலியன உள்ளன. கடைசி இரண்டு ஏடுகளில் கருங்காலி லேகியம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 573. சுவடி எண் : 314 (b)

## ரோமரிஷி பூரண லேகியம்

ஏடுகள்: 3+2. ஏட்டின் நிலைமை; மிகவும் பூச்சியரித்தும் ஒடிந்தும் உள்ளன. பக்கத்திற்கு: 6-8 வரிகள். அளவு: 28X3½ செ. மீ. எழுத்து; தமிழ். கி. எண்ணிக்கை: 50. ஆசிரியர்: ரோமரிஷி. முழுமை: முற்றுமுளது.

நோக்கம் :

போச்சென்று சொல்லிவைத்தே னின்னங் கேளு
பேர்க்கோடே பூரணத்தின் லேகியந்தான் மைந்தா
போச்சென்ற சடைக்கஞ்சா கொண்டு வந்து
பிசைந்தெடுத்துக் குச்சிவிரை தன்னைப் போக்கி
ஆச்சென்ற திருநீற்றுப் பச்சை தன்னை
அப்பனே கொண்டுவந்து சாறு வாங்கி
நீச்சென்ற வதைத்துவைத்துக் காயப் போடு
நீதிபெறச் சூரணமாய்ச் செய்து கொள்ளே. க

முடிவு :

கார்க்கவே பத்தியந்தான் தவறிக் காக்கார்
கண்கேடு மதிகேடு காயம் பாழாம்
ஏர்க்கவே காயம் தனித்து விட்டா
லென்னசொல்வேன் காயமது காண வாமோ
பார்க்கவே யொந்தநுட நூலைப் பார்த்து
பாழாகப் போகுக்கா லெனக்குக் கொஞ்சமுந்
சேர்க்கவே மனமதுதான் சொல்லா விட்டால்
தீர்க்கமாய் யென்னூலைப் பார்க்கொண் ணாதே

குறிப்பு :

இதில் பன்னிரண்டு ஏடுகளில் தாம்பிரகுரு பற்பம், பிரபமுனி இஞ்சி லேகியத்திற் சேர்க்கவேண்டியது ஆகியவை உள்ளன.

வரிசை எண் 574. சுவடி எண்: 314 (c)

## போகநாதர் 700—பூரணாதி

ஏடுகள்: 10. ஏட்டின் நிலைமை: மிகவும் சிதிலமாகவும் ஓடிந்தும் உள்ளன. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 28X3½ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 150. ஆசிரியர்: போகநாதர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

வணங்கிய பூரணாதி வழுத்தக் கேளு
மாசடையா வன்னிகர்ப்ப மாயி ரப்பா
இணங்கியே விரைபோக்கி யாவின் நெய்யில்
ஏழுதரம் சுத்திசெய்து பப்பத் தாக
இணங்கிருத் திளவறுப்பாய்ச் சூர ணித்து
குமுரவைத்துப் பின்கூற கேளு மைந்தா
சுணங்கின் றிக் கடைச்சரக்கு வகையின் செய்தி
சொல்லுகிறேன் லோகாகர் சூழ்ந்து கேளே. -சு

முடிவு :

எடுத்திடவே அரிதாரச் சங்கு போலாம்
எழில்செப்பில் வைத்துப்பல வேடையெ டுத்து
அடித்திட்ட ஆவின்பால் நெய்தே னுண்ண
ஆர்ந்தசா மீளமந் தார காசம்
தொடுத்திட்ட சிலேற்பனங்கள் தொண்ணூற் றிரும்
சூலைமூத லளுகண்ணி குஷ்ட ரோகம்
கடுத்தகாப் பான்சிரங்கு கபநோய் கிரந்தி
கனத்தவரை யாப்புமுதல் அனைத்தும் போமே. -32

குறிப்பு :

இதில் பூரணாதி லேகியம், தேங்காய்த்தைலம், அரிதாரவெள்ளை, இரசவெள்ளை. கிராணிக்கு வச்சிரக பாடம், அரிதாரச்சுன்னம் முதலான மருந்து முறைகள் உள்ளன.

****

வரிசை எண் : 575 சுவடி எண் : 315

## நந்தீசர் கர்ப்ப வாகடம்

ஏடுகள் : 34+3+4. ஏட்டின் நிலைமை : ஓடிந்தும் பூச்சியரித்தும் உள்ளன. பக்கத்திற்கு : 5 வரிகள். அளவு : $21 \times 2\frac{1}{2}$ செ. மீ எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 400. ஆசிரியர் : நந்தீசர். முழுமை : முற்றுமுளது (தொடக்க ஏட்டில் உள்ள 4 செய்யுட்கள் இல்லை.

தொடக்கம்:

(1 முதல் 2 ஏடுகள் இருபுறமும் ஒடிந்துள்ளன.)
கொண்ட நல்வாயுவு பிருவற்கு மொற்றிடில்க்
கொண்ட குளவியும் கோமள மாயிடும்
கொண்ட யிவ்வாயுவு யிருவற் குளறிடில்க்
கொண்டது மில்லையாங் கோலுமுன் னைதே. -13

முடிவு :

தின்றிடே நோயெல்லாம் திசைகெட்டு ஓடிடும்
பன்றிட வாய்வும் பதத்தில் சேருது
தன்றிட போகற்குத் தானுகர் செய்முறை
மன்றிய சித்தர்க்காம் மகாவியாதி போகுமே. -123

நந்தீசுபரர் அளித்த கர்ப்ப வாகட முற்றும்.

காலம் :

விய வருடம், வைகாசிமீ 27-ம்உ குளந்தைவேலு திருமந்திர ஏடு நிறைந்தது முற்றும்.

குறிப்பு :

இதில் வாதபித்த தோஷங்களால் கற்பந்தரிக்கும் விதம், மலட்டுக் குணம் பூர்வஜன்ம பலன்கள் முதலானவைகள் உள்ளன. இதன் கடைசி 3 ஏடுகளில் சிவவாக்கியர் பாடல்கள் உள்ளன, மற்றைய 4 ஏடுகளில் தோற்றம் என்ற தலைப்பில், "திருவாவடுதுறையைப் பார்க்கச் சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே" என்ற ஈற்றடியுடன் 6 செய்யுட்கள் உள்ளன. முற்றுப்பெறவில்லை.

வரிசை எண் : 576 சுவடி எண் : 316 (a)

## அகத்தியர் 1500

ஏடுகள் : 186. ஏட்டின் நிலைமை : பூச்சியரித்துள்ளது. பக்கத்திற்கு : 8—10 வரிகள். அளவு : $30 \times 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து : தமிழ்.

கி. எண்ணிக்கை : 7500. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : தொடக்கம் முடிவு இல்லை.

தொடக்கம் :

(துவைத்திடுவாய் ஏ) முதர மெருக்கம் பாலில்
சொல்லுறேன் நல்லெண்ணெய் கோமியத்தில்
துவைத்திடுவாய் பழச்சாற்றி லாவின் பாலில்
சுருக்கான கற்றுழை பொன்னாங் கண்ணி
துவைத்திடுவாய் இலைகளிலே காச்சிக் காச்சிச்
சுத்தியாந் தாம்பிரத்தைச் சூட்டு சூட்டு
துவைத்திடுவாய் காந்தசுத்தி சொல்லக் கேளு
தூசியத்துங் காந்தத்தைத் துண்டாய் வெட்டே. -109

முடிவு :

ஊட்டுவாய் பணவிடைசெந் தூரங் கூட்டி
யிருநாளைக் கிருபோது வொடுங்கு மட்டும்
ஊட்டுவாய்ச் சந்திசூற்மபூத லட்ட குற்ம
முளங்குபதி னெட்டுவகைக் குற்ம ரோகம்
நாட்டுவாய் வாதவகை யெண்பதோடும்
நலங்கொடுக்கும் பலசூலை வாய்வுக் கெல்லாம்
தீட்டுவாய் சுரசன்னி தோஷத் துக்கு
நெறிஇஞ்சி முருங்கைத்தோல் முலைப்பாலுஞ் சேறே. -1364

குறிப்பு :

இதில், உருக்குச் செந்தூரம், மிருக சஞ்சீவி மாத்திரை இரதபூபதி, சூதிகாபரண ரசம், பித்த குன்மத்துக்கு சோமரசம், வித்யா ரசம், குன்ம குடோரி, கிரச்சிரத்திற்கு நீர் வள்ளி நெய், நேத்திர ரோகங்களுக்குக் கருடாஞ்சனம், கோடாசூரிக் குளிகை, கந்தகத் தைலம், சௌவீரக்களிம்பு, பட்டைப் பதங்கம், வங்கச் செந்தூரம், அப்பிரகச் செந்தூரம் முதலியன உள்ளன. ஏடுகள் 1—13, 91, 111, 120, 166 ஆகிய ஏடுகள் இல்லை. எழுத்துக்கள் நன்றாக உள்ளன.

---

வரிசை எண். 577. சுவடி எண். 316 (b)

## இராமதேவர் பட்சணி—50

ஏடுகள்: 9. ஏட்டின் நிலைமை: சிறிதுபூச்சியரித்தது. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 30 × $3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 380. ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஆதியிலே வாலைமனோன் மணிதான் கூவி
அழைத்திட்டு ஆதியந்தம் அறியச் சொன்னான்
சோதியிலே கருவூரா வுன்னிப் பாரு
சொல்லவொண்ணு அதிசயங்கள் சொல்லத் தோத்தும்
நீதியிலே சதா நந்தி யென்னைப் பெற்றான்
நின்றிசையா லுள்ளசித்தர் மெச்சக் கொள்ள
வாதியென்று வந்தோர்க்குத் திறவுகோல் போல
வசனித்தேன் அன்பதுமொரு யெட்டு ரெண்டாய். -க

**முடிவு :**

மணியான நவமணியைத் தகடாய்த் தட்டி
வளமான தயிலமதை மேலே பூசி
பணியான அகலில்வைத்துப் புடத்தைப் போடு
மர்மகுரு செந்தூர மாகும் பாரு
கனியான கனிபோல செந்தூரம் வாங்கி
கமலரசச் சிமிழ்தனிலே பதனம் பண்ணி
வணிகரமாய் மதிதனிலே தாக்கிப் பாரு
மக்களே ஆயிரத் தெட்டு மாத்தே. -50

**குறிப்பு :**

இது ஒரு இரசவாத நூலாகும், பரிபாஷைகளுள்ளது. சயநீர்வகை, அஞ்சன முறைகள், வசிகரணத் திலதம் முதலானவைகள் உள்ளன.

சுவடி எண் 228-c-ன் மறு பிரதியாகுமிது. 51 செய்யுட்களுள்ளன. அது 'இராமதேவர் அஷ்டாங்க பட்சணி' என்ற பெயருடையது.

---

வரிசை எண். 578. சுவடி எண். 316 (c).

## இராமதேவர் கருமானச் சுருக்கம் முப்பது

ஏடுகள்: 4. ஏட்டின் நிலைமை: பூச்சியரித்து, ஒடிந்துளது. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 30X3½ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை; 120. ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

ஆதிகுரு வானதொரு பரமன் பாதம்
அனுதினமும் நெஞ்சில்வைத்து அருளை நோக்கிச்

சோதிவெளிக் கப்பாலே துலங்கும் சத்தி
துணையெனவே கருமானச் சுருக்கஞ் சொல்ல
நீதியுள்ள வாலைமனோன் மணிதான் வந்து
நினைத்தாப்போ ருள்க்கருமாப்பை நிலத்திலோர்க்குஞ்
சோதினையாய்ச் சொல்லுவை ராமா வென்று
சொல்லிமனக் கசடகத்தித் துதித்தாள் பாரே. -க

முடிவு :

கண்டுபா ரின்னமொரு கருவைக்கேளு
கருத்து — —— ——— ————
———— ———— டுப்பாரே. -26

குறிப்பு :

இதில் முப்புச் சுன்னம் செய்முறை, துருசுச் சுன்னம், வெள்ளீயச் சுன்னம், மதியமுர்த பற்பம் முதலியவைகள் உள்ளன.

இது 228-ன் மறுபிரதி பாடபேதங்களுள்ளன. கடைசி இரண்டு ஏடுகள் சிதைந்துள்ளன. ஆனால் அந்தச்சுவடிக்கு "இராமதேவர் சூத்திரம் 30" என்று பெயர்.

இதன் பின்னர் 4 ஏடுகளில் வேறு வைத்தியங்கள் உள்ளன.

❖❖❖❖

வரிசை எண் : **579** சுவடி எண் : **317 (a)**

## வைத்தியத்திரட்டு பாகம்—I

ஏடுகள் : 9. ஏட்டின் நிலைமை : பூச்சியரித்துளது. பக்கத்திற்கு : 10 வரிகள் வீதம் 2(அ) 3 கூறுகள். அளவு : $27\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 400. ஆசிரியர் : பலர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

பிளாஸ்திரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாதிலிங்கம் | விராகனெடை | 2. | துரிசு | விராகனெடை | $\frac{1}{2}$ |
| வீரம் | ,, | $\frac{1}{2}$. | வெள்ளைக்குங்கிலியம் | ,, | 3 |
| மஞ்சள் மெழுகு | ,, | 3. | காசுக்கட்டி | ,, | 2 |

ஆக யிவளவும்.

ஒன்றாய்ச் சேர்த்துக் கல்வத்திற் பொடிபண்ணி தேங்கா யெண்ணெய் விட்டரைத்து சலமும் விட்டரைத்து டப்பியில் வைத்துக் கொள்ளவும். பவுத்திரமு சகல ரணங்களுக்கும் போடத் தீரும்.

முடிவு :

நாய் குட்டி போட்ட அன்று தொப்புள் கொடியை அறுத்துச் செம்பு மோதிரத்திலடைத்துச் சீலையையுசர யெரிய கைய்க்காட்ட நிற்கும். விரல் வளையா விழும். சங்கம் லேர்த்தூள் பண்ணி மோரில் போடத் தயிராம்.

குறிப்பு :

ஏடுகள் வரிசையாக இல்லை. உதிரி ஏடுகளாக உள்ளன. இதில் நீர்க் கடுப்பிற்குக் கவி, விஷக் குளம்பு, கவி கொச்சகம், உள் மாந்தை எண்ணெய் இரத்த வாந்திக்கு. கைகால் முடங்கினவர்க்கு, நரம்புச் சிலந்திக்கு, மூக்கு, வாய், வீணுதண்டிலிருந்து இரத்தம் விழுந்தால் மருந்து. மண்டை வியாதிக்கு. குளிர் சுரத்திற்கு நீர்கட்டுக்கு மருந்து முறைகள் உள்ளன.

வரிசை எண் : **580** சுவடி எண் : **317 (b)**

## திருமந்திர வாகடம்—10

ஏடு : 1. ஏட்டின் நிலைமை : பூச்சியரித்தது. பக்கத்திற்கு : 8—10 வரிகள். அளவு : $27\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 40. ஆசிரியர் : தெரியவில்லை. முழுமை : முற்றும்.

தொடக்கம் :

ஆதியந்த மில்லானைச் சர்வ சிவ
மனைத்துயிரும் படைத்தோனை யளவில் லாத
நீதிகிரு பாகரன் விமலன் றன்னை
நிதந்துதித்து நினைவாக நேசிப் போர்க்கு
மேதினியிற் சகலசௌ பாக்ய மெல்லா
மென்மேலு மிகப்பெருகி மிகவே வாழ்ந்து
சாதனையாய்ச் செய்தொழிலு வளமை யாகச்
சர்வேச னுதவிநிதந் தயைசெய் வாரே. -க

முடிவு :

உணர்ந்த வபானமு முறுமந்த வாதத்திற்
புணர்ந்த பிராணன் புகுமந்த பித்தத்தில்

அணைந்த சமானன் அடங்கும் கபத்தொடு
இணையிது மூன்றுங் கெடுத்த குறியிதே. -ய

குறிப்பு :

இந்நூல் பரிபாஷையாக உளது.

வரிசை எண் : **581** சுவடி எண் : **317 (c)**

## வைத்தியத்திரட்டு பாகம்—II

ஏடுகள் : 63 (வரிசையாக இல்லை) ஏட்டின் நிலைமை : பூச்சியரித்தது. பக்கத்திற்கு : 10 வரிகள். அளவு : $27\frac{1}{2}X3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 300. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

நீலகாசம், பித்தகாசம் இரக் குழம்பு, மாத்திரை.

புளியின் மேற்புல்லுருவியை யெடுத்துப் புளியஞ் சாறு விட்டரைத்துத் திப்பிலி மிளகு கூட்டியரைத்து உருண்டை செய்து நிழலிலுலர்த்திக் கண்ணிலிடத் தீரும்.

**முடிவு :**

கல்நார் பலம் ஒன்று, வேப்பங் கொழுந்து அரைத்துக் கவசம் செய்து ரெண்டு புடம் போட்டு அப்பரமெடுத்துக் கல்வத்தில்வைத்து நொருக்குச் சுண்ணும்புத் தெளிவுத் தண்ணீர் விட்டரைத்து வில்லை செய்து முழப்புடம் போடச் செந்தூரமாம். அனுப்பானத்தில் மேகம் முதலான வியாதிகளுக்குப் பணவெடைச் செந்தூரம் கொடுக்கவும். தந்த அலைவு முதலானதுக்குந் தேய்க்கலாம்.

உ சிவமயம். முற்றிற்று.

**குறிப்பு :**

இதில் வைத்திய அகராதி காணப்படுகிறது. இதில் அசுவகந்திச் சூரணக் கவி, வெள்ளைப்பாஷாணச் சாதிலிங்க மெழுகு, சன்னிக்கு மாத்திரை, பரங்கிப் பட்டைச் சூரணம், கோரோசனை மாத்திரை, பாஷாணக்கட்டு, வாலை ரச மெழுகு, சத்திமுறைகள், அமுதாதிக் குளிகை போன்ற மிகச்சிறந்த முறைகள் காணப்படுகின்றன. பதிப்புக் கேற்ற சுவடி.

வரிசை எண் ; **582** சுவடி எண் : 317 (d)

## தோஷநூல் சாத்திரம்

ஏடுகள்: 7. ஏட்டின் நிலைமை: பூச்சியரித்துளது. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 27½X3½ செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 350. ஆசிரியர் : நந்திதேவர். முழுமை: முற்றுற்றது.

**தொடக்கம் :**

........ குறியாம் வலக்கரங் குவிந்த பெருவிரன்
மறியாத்தன் கீழே வைத்திடு மூவிரல் பிறிவாய் மேலேகிப்
பிலத்தது வாதங்காணறியாய் நடுவிரலறைந்தது பித்தமே. -௧

**முடிவு :**

நாள் முறையறிதல்

மாதமொன்றும் ஞாயறென்ற றிங்களாகின்
மாதமொன்றும் மாதத்திற் பாதி நாளாந்
தீதுசெய்யும் காணுமப்பாற் செவ்வா யாகிற்
சிறந்ததொரு புதனாகிற் றினமெட் டாகு
மோதுகுரு வாரமெனில் லஞ்சு நாளா
மொள்ளியதோர் வெள்ளிதனி லாறு நாளாம்
போதுசனி வாரமதில் மாத மிரண்டாம்
பொருந்துசுரம் விடுமிலக்கஞ் சொல்லு வீரே.

**குறிப்பு :**

இதில் தோஷசாத்திரம் என்று கடைசியில்தான் எழுதப் பட்டுளது. முதலில் வாத, பித்த, சிலேத்துமத்தின் குணம், தோஷக் குறியறிதல், சுகஜன்னி வகை, மூலம் பிறக்கும் வகை, கிராணி, குன்மம், சூலை, பிறக்கும் வகை, கர்ப்ப ரோக வகை, கர்ப்பசன்னி வகை, கண் நோயின் வகை, குஷ்டத்தின் வகை, முதலானவைகள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண். **583.** சுவடி எண். 317 (e)

## சுர சாத்திரம்

ஏடு : 1 பக்கம். ஏட்டின் நிலைமை: பூச்சியரித்த நிலை. பக்கத்திற்கு: இது மட்டும் 10 வரிகள். அளவு: 27½X3½ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 30. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

ஆனதொரு கார்த்திகைநா ளொன்ப தாகும்
அடுத்ததொரு ரோகிணிநாள் மூன்ற தாகும்
தானதொரு மிருகசீரிட மஞ்ச தாகுந்
தனித்ததிரு வாதிரைநா ளுயிரே போகு
மூனமிலாப் புனர்பூச மெட்டு நாளா
முகந்ததொரு பூசமென லேழு நாளாந்
தேனனையா யாயிலிய மொன்ப தேநாள்
செப்புமக முயிர்போகுந் திண்ணந் தானே. -க

முடிவு :

மின்னிவரு ரேபதிநாட் பத்த தாகும்
விதமுடைய யசுபதிநா ளொன்ற தாகு
முன்னியதோர் பரணியெனி லுயிருக் கீன
முளப்படிதப் பாதென்று உரைப்பாய் தானே
நன்னயமா யிருபத்தேழு நட்சேத்திரமும்
நலமுடனே பார்க்கவரு மிலக்கஞ்சொல் வீரே. -௨

சுர நூல் முற்றும்.

குறிப்பு :

27 நட்சத்திரங்களில் ஏற்படும் சுரங்களின் தன்மையைக் கூறும் நூலிது. இது 'சுரகெண்டிகை' எனும் பெயரில் அச்சாகியுளது.

வரிசை எண் : 584. சுவடி எண் ; 317 (f)

## தன்வந்திரி சிந்தாமணி — நாடி சாத்திரம்

ஏடுகள் : 6. ஏட்டின் நிலைமை : மிகப் பூச்சியரித்த நிலை. பக்கத்திற்கு : 10 வரிகள். அளவு : 27½x3½ செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 400. ஆசிரியர் : தன்வந்திரி. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் ;

செய்ய மாதுக் கிறைவன்முன் செப்பிய
துய்ய வாயுண் மறையுட் டுலங்கிய
மெய்ய மாதவர்க் கோதிய விறபொரு
ளய்யன் றன்மந்தி ரர்க்கரு ளோதினன், -க

முடிவு :

விளம்பிய வாதரோகத் தந்தமே மிகக் கருக்கும்
வளம்படும் பித்தரோக பல்லுமஞ் சனிக்குமானே
யுளங்கொளாச் சிலேர்ப்பன ரோகிப்பல் வெளுத்திருப்ப துண்மை
துளங்கிடா தறிந்துகொண்டு சொல்லுமிக் குணங்கள்தானே. -ருசு

குறிப்பு :

நாடி முதலான அஷ்டபரீட்சைகளையும் விளக்கும் நூல். இது 186-ம் எண் சுவடியின் மறு பிறதியாகும். பாடவேறுபாடுகள் உள்ளன. கடைசி ஏட்டின் பின்புறம் அமுதநிலை சொல்லுகிற சாத்திரம் (திதிக்களின்படி) கூறப்பட்டுளது. அமுதம்—உடலில் அமுதம் நிற்குமிடம் ஆகும். அச்சில் உள்ளதாகத் தெரியவில்லை.

---

வரிசை எண் : **585**. சுவடி எண் : **317 (g)**

## வாகடத்திரட்டு

ஏடுகள் : 5. ஏட்டின் நிலைமை : மிகப் பூச்சியரித்து, ஒடிந்த நிலை. பக்கத்திற்கு : 9—10 வரிகள். அளவு : $27\frac{1}{2}$ x $3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து ; தமிழ். கி. எண்ணிக்கை : 300. ஆசிரியர் : பலர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

வாதந்தா னென்ப தற்கு வருகின்ற பக்க வாதம்
சீத்மே நடுக்கு வாதஞ் சிறந்திடு முடக்கு வாதஞ்
சூதமே சார்ந்த வாதந் தோன்றிய முகத்தில் வாதம்
போதமா வாதந் திர பெருத்திடு மருந்து கேளே. -க

முடிவு :

போமிது பொன்னுங் காணி புகழ்சிறு கீரை முத்தம்
... ... .. ... ... ா ரத்தங் கோட்ட
மாமிது மதுர மேல மடருசெண் பகப்பூ வங்கம்
நாமிது சொன்னோமெ ... ... ... ... ாமே ! -ருய.

வாகடத் திரட்டு முற்றும்.

குறிப்பு :

இதில் கிராணி, குன்மம், மேகம், வாதரோகம், சூலை, வாயு. சன்னி, கரப்பான் விடங்கள் முதலானவைகளுக்கு மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இது 25-f, 186-g ஆகிய சுவடிகளின் மறு பிரதியாகும். கடைசி ஏடு ஒடிந்துள்ளது. அச்சாகியுள்ளது.

வரிசை எண் : **586** சுவடி எண் : **317 (h)**

## அகத்தியர் வைத்தியத்திரட்டு

ஏடுகள் ; 7. ஏட்டின் நிலைமை : மிகவும் பூச்சியரித்த நிலை. பக்கத்திற்கு : 10 வரிகள். அளவு : 27½x3½ செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை : 350. ஆசிரியர் : அகத்தியர் ? முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

... ... ... ... ... வரும்பொருளை யாராய்ந்த
சீதமிகு செந்தமிழா ற் செப்புவேன்கேள் — நீதியுறு
... ... ... ... ... யோ தூவே னென்தேசு
வள்ளலே யென்மனதில் வாழ். -க

**முடிவு :**

சுருள்ளிச் சாருழக்கோ டேத்தசகா ரங்களஞ்சி
சாரக் குடத்தின் சந்தனங் களஞ்சி — வார்முலையா
யொன்றுய் விரலி யுணர்வே கல்லடைப்பன்
சென்றேடும் நீரடைப்புந் தேடி. -எரு

**குறிப்பு :**

இது, முன் சுவடியின் 5-ம் ஏட்டின் பின்புறம் நடுவிலிருந்து தொடர்ச்சியாக எழுதப்பட்டுளது. அதனுல் தலைப்பும் காண இயலவில்லை. அசீரணம், பித்தம் பீலிசை, சுவாசகாசம், சுரம், கரப்பான், கிரந்தி, மேகரோகம், கெர்ப்பவிப்புருதி, மூலம், எரிச்சல், பூத சன்னி, அதிசாரம், கல்லடைப்பு ஆகியவைகட்கு மருந்துகள் கூறப்பட்டுள்ளன. அச்சில் இருப்பதாகத் தெரியவில்லை.

---

வரிசை எண். **587** சுவடி எண்: **317 (i)**

## பலதிரட்டு வைத்திய அட்டவணை

ஏடுகள்; 13. ஏட்டின் நிலைமை: மிகவும் பூச்சியரித்த நிலை. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 27½ × 3½ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 350. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: இல்லை

**தொடக்கம் :**

தாது விர்த்திக்கு லேகியம்

நிலப்பனைக் கிழங்குப் பொடி, பூனைக்காலி விரைப் பொடி, நத்தைச் சூரி வித்து, துத்தி வித்து, கொளியலரிசி, இதுகள்

சமமெடுத்து சர்க்கரை ரு பலம் தண்ணீரில் கரைத்து வடிகொண்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சிப் பின் பொடி முன் ரு போட்டுக் கிண்டிக் குழம்பாகிறபோது முன் பொடியும் போட்டுக்கிண்டி யரைக்காற்படி பசுவினெய்யும் விட்டுக் கிண்டி லேகியமாக்கி வைத்துக் கொள்ளவும்.

முடிவு :

காத்துப்படாமல் அஞ்சுநாள்ப் பொட்டிளில் வைத்து ஆரு நாளெடுத்துப் பார்க்கச் சுண்ணமாகு மனுப்பான விசேஷங்களிற் கொடுத்தால் சயம், காசம், இருமல், ஈளை முதலான ரோகங்கள் நீரும். இச்சாபத்தியம்.

குறிப்பு :

வைத்திய முறைகள் மட்டுமே உள்ளதால் பலதிரட்டு வைத்திய அட்டவணை என்று பெயர் கொடுக்கப்பட்டுளது. இதில் நயன சஞ்சீவித் தயிலம், இரச செந்தூர பூஷண கவி, சமமாதிச் சூரணம், பரங்கிப்பட்டை ரசாயனம், தாளிசாதிச் சூரணம், தாதுபுஷ்டிக்கு, கண்டாத்திரி லேகியம், நீரடைப்புக்கு, கல்லடைப்புக்கு, நஞ்சுக்கு மாற்று, கந்தாதி லேகியம், கிரந்தி உருண்டை, சிரநோய்த் தைலம், பிளாத்திரி, கெந்தகத்தைலம் முதலிய முறைகள் உள்ளன. அச்சானது.

வரிசை எண். 588. சுவடி எண். 317 (j)

## பிரம்மமுனி கருக்கிடை சூத்திரம் 400

ஏடுகள்: 57. ஏட்டின் நிலைமை: மிகப் பூச்சியரித்த நிலை. பக்கத்திற்கு: 9-11 வரிகள். அளவு: $27\frac{1}{2}X3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 3600. ஆசிரியர்: பிரம்மமுனி. முழுமை: முற்றும் உளது. (தொடக்கம் இல்லை).

தொடக்கம் :

............ ............ ............ ண்டு லட்ச
முரைத்திட்டார் செந்தூர முன்னேசொன்ன ருத்தமனே
வாதமுதல் வயித்தியந் தோறு
மறைத்திட்டார் வயித்தியத்தி லாறுநூறு
வப்பனே வழிதிறந்து சொல்லிவிட்டார்
கரைத்திட்ட வயித்தியத்துக் கெந்நூல் வேணுங்
கண்ணாடி முகம்பார்த்தாற் போலே காணே! -சூ

முடிவு :

தெளிவான வயிரத்தைக் குறுக்கி நன்றாய்
செப்பினேன் ஞானூற்றிற் றிரமாய் மைந்தா
கழிவான கருவெல்லாம் வெட்டவெளி யாகக்
கருவாகச் சொல்லிவிட்டேன் கண்டு பாரு
வழியான முறையெல்லாம் வகையாய்ச் சொன்னேன்
வாதமொடு வயித்தியமு நன்றாய்த் தோணு
மழியாத பொருளை யெல்லா மிதிலே சொன்னே
னடங்கிநின்ற கருக்கிடைசூத் திரந்தான் முற்றே. -401

பிரமமுனி கருக்கிடை சூத்திர நானூறு, முற்றிற்று.

பாலாம்பிகை சகாயம். ஷண்முகநாதன் றுணை.

காலம் :

1317-ம் வருஷம் ஆவணி மீ 7-ம்வ. வியாழக்கிழமையும் சதய நட்சத்திரமுங் கூடின சுபதினத்தில் முற்றுப் பெற்றது

கடவுடுணை.

குறிப்பு :

சுவடி எண். 36 (a) பிரம்பமுனி சூத்திரம் 360 என்ற சுவடியில் 365 செய்யுட்களும், சுவடி எண் 162(a)யில் 365 செய்யுட்களும் உள்ளன. இதில் 400 செய்யுட்கள் உள்ளன. இடையிடையே ஏடுகள் இல்லை. இதில் முப்பு விபரம், மேகராஜாங்க லேகியம். மேகராஜாங்கத் தைலம், மேகம், குட்டம், கரப்பான், வாயுவுக்குச் செந்தூரம், சண்டமாருதக் குழம்பு, வில்வாதிக் குழம்பு, சுத்த வல்லாதி எண்ணெய், புண்களுக்குப் பொடி, விஷ முஷ்டித் தைலம் ஆடாதோடை லேகியம், பவள, ஆமையோடு பற்பம், சிங்கி பற்பம், கர்ப்பநோய்க்கு எண்ணெய், பிள்ளையில்லாதவர்களுக்கு யந்திரம், அமுக்கிராச் சூரணம், பாஷாண மெழுகு சாதிலிங்க மெழுகு முதலியன உள்ளன.

அச்சில் இருப்பதாக அறியக் கூடவில்லை.

---

வரிசைஎண். 589. சுவடி எண் 317 (k)

## அகத்தியர் அருளிச் செய்த வாகடம் 205

ஏடுகள் : 29. ஏட்டின் நிலைமை: மிகவும் பூச்சியரித்த நிலை. பக்கத்திற்கு : 10 வரிகள். அளவு: $27\frac{1}{2}\times3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை : 1800. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

பூரணமாய் மும்மூலம் பொறியிற் சூடாய்
புகையெழும்பி மேகமதாய்ச் சிரசில் சூடாய்
காரணமாய் நீர்கலந்து கண்ணில் ரோகங்
கனலெழும்பி வாயுவினூற் சூலை ரோகம்
வாரணமாம் வாதத்தி லெழுந்த மேக
மதியதொரு பித்தத்தாற் கிராணி யாச்சு
தாரணமாம் வாயுவினாற் குன்ம மாச்சு
சார்ந்தசிலேற் பனத்தாலே க்ஷயம தாமே, -க

**முடிவு :**

செய்ய வேதியன் செகத்திற் றுணையதா
மைய மில்லை யானருள் பாலிக்கும்
வைய கந்தனின் மானிடர்க் காகவே
செய்ய நூனிரு நூற்றஞ்சுமே முற்றுதும். -205
அகத்தீச நருளிச் செய்த வயித்திய மிருநூற்றஞ்சு முற்றும்.
ஸ்ரீ வள்ளி மனோகரன் துணை.

**காலம் :**

*1317*-ம் வருஷம், ஆடிமீ, 25உ.

**குறிப்பு :**

இது சுவடி எண். *311*-b, *294*-h ஆகியவைகளின் மறு பிரதியாகும்.

இதில் தாமிரம், இரசம், வெள்ளீயம், காரீயம், வெண்கலம், பித்தளை, கருடக்கல், கல்நார், நரகம், வெள்ளி, தங்கம், மண்டூரம், கெந்தகம் முதலான பற்பங்கள் செய்முறைகள், சூரிவித்து, கீழா நெல்லித் தைலம், சங்கம் வேர்த் தைலம் கரிப்பான், கொடுப்பைத் தைலம், கிருமிக்கும், கெர்ப்ப நோய் முதலானவைகளுக்கும் மருந்துகள் உள்ளன. அச்சானது.

வரிசை எண். **590** சுவடி எண்: **317** (1)

## அகத்தியர் இருநூற்றைந்துக்குச் சூத்திரம்

ஏடுகள்; 2. ஏட்டின் நிலைமை: மிக பூச்சியரித்த நிலை. பக்கத்திற்கு: 9 வரிகள். அளவு : $27\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 100. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றறறது.

**தொடக்கம் :**

கேளப்பா நவலோக மாற ணந்தான்
　　கெடியான வைத்தியமா மிருநூற் றஞ்சு
தேளப்பா கொட்டுதல்போ விந்தச் சூத்திரந்
　　திரஞ்சொல்வே னிரும்புக்குத் தாரங் கெந்தி
வாளப்பா வெள்ளியிரு வங்கத் துக்கு
　　மால்தேவி வெடியுப்பு வெள்ளைச் சீனஞ்
சூழப்பா செர்பிற்குக் கெந்தி வங்கஞ்
　　சூதமொடு துருசு வெள்ளை சாரமுன்றே 1

**முடிவு :**

பாச்சப்பா வகைக்குக்கால் படியு தாகப்
　　பருவமாய்ச் சேர்த்துநீ காச்சிக் கிண்டு
நீச்சப்பா விஞ்சியுட தயிலத் துக்கு
　　நிண்ணயமாய் நொச்சிச்சார் பசுவின்பாலுங்
காச்சப்பா வகைக்குஅரைப் படியாய்விட்டு
　　கசடெல்லா யெண்ணையுடன் காச்சிக் கொள்ளு
ஆச்சப்பா செம்முள்ளித் தயிலத் துக்கு
　　அடவான கருஞ்சீரகங் கற்றூளை வேரே ! -10

**குறிப்பு :**

இதில் சந்துரு மித்துரு சரக்குகள், ஆவாரை வேர்த்தைலம், கொடுவேலித் தைலம், சங்கம் வேர்த்தைலம் முதலானவை உள்ளன. இது அச்சானதாகத் தெரியவில்லை.

வரிசை எண் : **591** சுவடி எண் : **317 (m)**

## கர்ப்ப சாத்திரம்

ஏடுகள் : 4 (284—287) ஏட்டின் நிலைமை : சிதிலம். பக்கத்திற்கு : 9 வரிகள். அளவு : $27\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 120. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

பாரப்பா பெண்மலடின் கெர்ப்பக் கோளின்
　　பக்குவத்தைச் சொல்லுகிறேன் பண்பாய்க் கேளு

ஆரப்பா ஆண்மலடே யாகு மல்லால்
அப்பனே பெண்மலடா யாரு மில்லை
நேரப்பா பொருளீந்து பார்ப்பனுமில்லை
நிலைக்கமக வில்லையறு சூலை யாலே
வேரப்பா தேவதையா லேழாங் கர்ப்பம்
விரித்துநன்ருய்ப் புகலுகிறேன் விரும்பிக் கேளே! சு

முடிவு:

மதுவாகுங் குளிர்ந்தஜலங் கிட்ட வாகா
மைந்தனே கொதிவென்னீர் தானு மாகும்
அதுவாகு மிதுவாகு மென்று யெண்ணி
யலைந்தலைந்து வேதத்தைநான் கண்டு சொன்னேன்
பதபாக மாகவங்கே யிருந்து கொண்டு
பார்வதியைப் பூசித்துப் பணிந்து கொள்ளு
பொதுவாகு நினைவுகொண்டு விருந்தா யாகிற்
புத்திசித்தி முத்திதரப் புனித மாமே. -சுசு

கெர்ப்ப சாஸ்த்திர முற்றிற்று.
அம்பிகா தேவி சகாயம்

குறிப்பு:

பெண்மலடு இல்லையென்றும், ஆண்மலடே மலடென்றும், அதிற்குரிய காரணங்களும், மருந்துகளும் கூறப்பட்டுள்ளன. அச்சிடப்பட்டுளது. இது 243-ஆ-ன் மறுபிரதியாகும். "கர்ப்பகோளம் 16" என்ற பெயரிடப்பட்டிருக்கிறது. இச்சுவடியின் கடைசியில் திமிர் வாயுவு, கீல் வாயுவு முதலானவைகட்கு மருந்து கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண். **592**. சுவடி எண். **317** (n)

# வைத்தியத்திரட்டு

ஏடுகள்: 40. ஏட்டின் நிலைமை: பூச்சியரித்தது. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: $27\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1600. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

லகு பூர்ணாதிலேகியம்

கோதுமை மாவு அரைக்காற்படி, சர்க்கரை நாற்பது பலம், நெய் பத்து பலம், தேன் அஞ்சு பலம், கோரக்கர் மூலியும், ஆனந்த மூலியுங் கஞ்சா வெனப்பட்டது. ஷெ மூலிகை பத்து பலம், சோம்பு

பலம் அஞ்சு. கோரக்கர் மூலியுஞ் சோம்பையும் வெவ்வேறே வறுத்துப் பொடி பண்ணி தெள்ளி வைத்துக் கொண்டு,

முடிவு :

குளிர் சுரமாத்திரை

பச்சைக் கற்பூரம், சன்ன லவங்கப்பட்டை, சாதிக்காய் வகைக்குக் கழஞ்சு 2 சுத்திசெய்த வாழம் கழஞ்சி 6. இவைகளைக் குமரிச் சாற்றாலாட்டி உருந்திடை மாத்திரை செய்து ஒரு மாத்திரையை அனுபானங்களில் கொடுக்க மூன்றேமுக்கால் நாழிகைக்குள் விரேசன மாகிச் சுரம் நிற்கும்.

குறிப்பு :

இதில் சுகபேதி முறைகள், சாந்த ரசாயனம், நாரிகேளாஞ்சனம், கண் மாத்திரை, சாரீர மாத்திரை, சன்னிக்கலிக்கம், கல்நார் பற்பம், உருக்குச் செந்தூரம், மதுமேக ரசாயனம், பற்ப வகைகள், கௌரீ சிந்தாமணி, நெல்லித் தைலம், இஞ்சி குழம்பு, வாயுவிற்கு விரேசன முறைகள் முதலானவைகள் உள்ளன. அச்சில் உள்ளதாகத் தெரியவில்லை.

வரிசை எண். 593. சுவடி எண். 318 (a).

## கைலாச சட்டைமுனி சுவாமிகள் அருளிய வகாரச் சூத்திரம் ஆயிரம்

ஏடுகள்: 183. ஏட்டின் நிலைமை: சிதைந்தும், முறிந்தும் பூச்சியரித்தும் உளது. பக்கத்திற்கு: 11—12 வரிகள். அளவு: 25X 4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 5200. ஆசிரியர்: சட்டை முனி சுவாமிகள். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

அகண்டபரி பூறணமா முமையாள் பாதம்
அப்பிறத்தே நின்றதொரு அய்யர் பாதம்
புகண்டுநின்ற கிணேசனொடு நாதாக்கள் பாதம்
புகழான வாக்குடைய வாணி பாதம்
நிகண்டனவே யென்னையாண்ட குருவின் பாதம்
நிறைநிறையாய் சொருபத்துல் நின்றோர் பாதம்
மூகண்டுயென்னை யீன்றெடுத்த சின்மயத்தின் பாதம்
மூவுலகு மெச்சுதற்குக் காப்புத் தானே ! —க

முடிவு :

ஒன்றான சின்மயத்தின் பதத்தைப் போத்தி
உத்ததொரு கையிலாச தேக மாகி
நன்றாக யீன்றதொரு உண்மனையைப் போத்தி
நலமான நாதாக்கள் பதத்தைப் போத்தி
தன்றான கைலாச தேக மாகிக்
காறணமாய் செஷ்ட்டருட பதமும் போத்தி
தன்றான வாதநூ லாயிரமுஞ் சொல்லி
சாதகமாய்ப் பாடிவிட்டேன் வாத முத்தே. -சூம்சு

சட்டைமுனி சுவாமிகள் அருளிச் செய்த வகார நூல்யெழுதி நிறைந்தது முற்றும்.

சின்மயந்துணை.

நாதாக்கள் முன்னிற்க. தேவி சகாயம். சிவமயம். திருச்சிற்றம்பலம்.

வெலசுப்பிறமணிய பிற்மாத்துணை அடியார்க்கபாதம் யென் சிற .........

குறிப்பு :

இது 26-b-ன் சட்டைமுனி வாதகாவியம் 1000 என்னும் பெயரில் உள்ள நூலாகும். ஏடுகள் முன்பின்னாக உள்ளன. மிகச் சிதிலமாக இருக்கிறது. 27-ம் எண்ணுள்ள சுவடியும் இது போன்றதே.

---

வரிசை எண் : **594**. சுவடி எண் : **318** (b)

## கைலாசச் சட்டைநாதர் அருளிய நிகண்டு 1200

ஏடுகள்: *(184-286) 91*. ஏட்டின் நிலைமை: சிதிலமாகவும் ஒடிந்துமுள்ளது. பக்கத்திற்கு: *10-12* வரிகள். அளவு: *25X4* செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *2500*. ஆசிரியர்: சட்டை நாதர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

ஆதிஅந்த மில்லாத பூரணத்தை நோக்கி
அடுத்துநின்ற உன்மனத்தாய் பதத்தைப் போற்றி
பாதிஅந்த மாகின்ற உமையாள் சொல்லப்
பாங்கான சின்மயத்தின் கருணை யாலே
ஓதியதை வாதமென்ற நூலுக் கெல்லா
முயரவைத்த நாகமணி கிரீடம் போல
சாதியந்தக் குணத்தொடு நிகண்டு சொல்ல
சச்சிதா னந்தவெளி காப்புத் தானே.

முடிவு :

நாட்டினேன் வாதத்தில் பழுதஞ் சொன்னேன்
புகழான இருபத்து அஞ் ... ... ... ...
ஆட்டினேன் பலநூலி லில்லை யில்லை
ஆச்சரியம் நிகண்டினுட துகையைக்கேளு
நீட்டினேன் ஆயிரத்து யிருநூ றுந்தான்
நேராக்கி நிகண்டினுட கடைதான் முத்தே. -கூருரு

சிவமயம்

ஆகத் திருவிருத்தம் 1200. இதிலுஞ் சூத்திரம் 200 கற்ம முறை 100. ஆக மூனுக்கு விருத்தம் 1500. குருசகாயம். எளிதி முடிந்தது முத்தும்.

மீனாட்சி சகாயம் அகண்டவெளியே துணை. மனோன்மணித்தாய் பாதார விந்தமே துணை. அஞ்சுன்னத்துக்கு சுடுகிர மார்க்க வகை.

ஸ்ரீராம ஜெயம்,

குறிப்பு :

இரசவாத வித்தையைப் பற்றியதாகுமிச்சுவடி. ஏடுகள் முன் பின்னகை இருப்பினும் எழுத்துக்கள் தெளிவாக உள்ளன. பிழைகள் மலிந்துள்ளன. பார்க்க : சுவடி எண் 26-c.

வரிசை எண் : **595** சுவடி எண் : 318 (c)

## கைலாசர் சட்டைமுனி அருளிச்செய்த வகாரச் சுருக்கம் 200

ஏடுகள்: *23*. ஏட்டின் நிலைமை: சற்று நல்லநிலை. பக்கத்திற்கு: *12-15* வரிகள். அளவு: **25X4** செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: *1000*. ஆசிரியர்: சட்டைமுனி. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

சூத்திர மோது முன்னே சொல்லுகிறேன் கிணேசன் காப்பு
சாத்திரம் நிறைந்து பொங்கி சராசர மெங்குந் தானாய்
தோத்திரம் பொருளுந் தானாய் சொல்லத்து மவுன மத்து
போத்துரப் புறம்புள்ளான் பூரணங் காப்புத் தானே. -க

முடிவு :

தானனை சூத்திரத்தை யெழுதி மக்கள்
சாதகமாய்க் கிடாடிரசத்தைப் பெத்துக் கொண்டு

வாஞன சேசரந்தி லாடும் போது
வார்த்தைவந்தால் சாத்திரமும் சூத்திரமும் பேசும்
கோஞன சின்மயத்தின் பிள்ளை நாங்கள்
குடிசெய்து கயிலாச மூர்த்தி வர்க்கம்
வேஞன சூத்திரந்தான் யிருனூத் தொன்று
வேதாந்தக கருணையினல் விளக்க முத்தே ! -உாஉ
சிவகிடாட்ாம்

**காலம் :**

சட்டைமுனி சுவாமியார் அருளிச்செய்த வகார சுருக்கம் யிருநூறும் விரோதகிறுதூ ஞூ, காற்திகை மீ, யக-உ பூறுவ பச்சம் மங்கள வாரனுள் யெழுதி நிறைந்தது முற்றும்.

சின்மயந்துணை.

விரையாச்சிலையிலிருக்கும் சுந்தரம் பிள்ளை யெழுதின
வகாரச் சுருக்கம் யேட்டு குத்தம் யெழுத்தாணிகுத்த
மிருந்தா மனம் பொறுத்து தீர்த்துக்கொள்ள வேண்டியது.

**குறிப்பு :**

இது இரசவாத நூலாகும்.

---

வரிசை எண். **596**. சுவடி எண். **318 (d)**

## அகத்தியர் தீட்சாவிதி 200

ஏடுகள்: *30*. ஏட்டின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: *10-12* வரிகள். அளவு: *25X4* செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *1000*. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

ஆதார மாறு மகண்ட குருபாதம்
வேதா கமத்தின் விதிமார்க்கம்—நாதமுறும்
விந்துவிலே மூலம் விளங்கும்பூ சாவிதியால்
தந்திமுகத் தோன்காப்புத் தான். -க

முடிவு :

தானென நியாசங்கள் உத்துப் பார்த்து
சற்குருவைக் கேளாமல் செய்யா தேகேள்
மோனமாயிக் கைய்முறையாயிச் சொல்லச் சொல்ல
மூவாயிரம் பாடல்திரு மந்தி ரத்தில்
தேனுக மாதுருகா நியாசஞ் சொன்னார்
திடமாக அகாரமுதல்ச் சகார மட்டும்
கோனான அன்பத்தோ ரட்ச ரத்தைக்
கூறினார் நாத குறிகாட்டி யூன்றிக் காணே. -168

குறிப்பு :

இதில் நவசித்தர் பூசை, சகல குருத்தியானம், சர்ப்ப புத்தியான், குரு தோத்திரம், பஞ்ச சக்தி, மௌனம் நாலு, கணபதி பூசை, பிரம்ம பூசை, சமாதி, பிராணாயாமம், அஷ்டகர்மம், நித்திரைக்குறி, ஓமம், எரிதுரும்பு, சிதம்பர சக்கரம் முதலியன உள்ளன.

சுவடி எண் 19-a, 160 ஆகியவற்றின் வேறுபட்டது. கடைசி ஏடுகள் மிகச்சிதிலம்.

வரிசை எண். **597** சுவடி எண். **319.**

## சவுமிய சாகரம்

ஏடுகள்: 205. ஏட்டின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 8-10 வரிகள். அளவு: 27X3½ செ.மீ. எழுத்து: தமிழ். கி, எண்ணிக்கை: 8000. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுள்ளது.

தொடக்கம் :

சோதியெனும் மனோன்மணியைத் தியானஞ் செய்து
சுகமான சவுமியசா கரத்தைப் பாட
ஆதியெனும் கணபதியும் வல்லபையுங் காப்பு
அரசான பிரமனோடு சரசுபதியுங் காப்பு
நீதியெனு மாலுடனே லெட்சுமியுங் காப்பு
நின்றிலங்கு ருத்திரனும் ருத்திரியுங் காப்பு
ஓதியதோர் மயேசுரனும் மயேசுபரியுங் காப்பு
உருதியுள்ள சதாசிவனு மனோன்மணியுங் காப்பு -க

முடிவு :

தன்னைத்தான் தானறிந்து தன்னைக் கண்டு
சவுமியமாய் நின்றசா கரத்தைப் போத்தி
விண்ணைத்தான் னேக்குதற்கு மணிநா வுண்ணி
வேதாந்தச் சுழினையிலே வாசி பூட்டி
வுன்னைத்தான் மனதுன்னி யண்டத் தெறிவும்
சிவாவென்று குருபாதம் போற்றிக் கண்ணைத்
தானறிந்து வெளிஒளிக்கண் ணேடே கலந்து
கொண்டசவு மியசா கரந்தான் முற்றே. -1196

முத்தான சாகரந்தான் மைந்தா மைந்தா
முழுதுமதை யாதியந்த நன்ருய்ப் பார்த்து
சித்தான சித்துவிளை யாடு தற்குச்
சிவசிவா குருநூலாய்த் தெரிந்து கொண்டு
சுத்தான சுத்தற்குச் சோதி யாகி
சோதிமய மானசிவ சூட்சந் தன்னை
பத்தான திசதீட்சை முற்றுப் பெற்றுப்
பரமபதத் தெல்லையிலே பதிவாம் முற்றே. -1197

சண்முக வேலாயுதந்துணை.

காலம் ;

இந்த சவுமிய சாகரம் யெழுதினது 1025, சவுமிய ஸூ மாசி மீ 29 உ எழுதி முகிந்தது முற்றும்.

குறிப்பு :

இதன் பின்னர், சிவத்துடனே தங்கமொன்று என்று தொடங்கும் பாடலும் நாகரச கெந்தகம் என்று தொடங்கும் பாடலும் ஆக இரண்டு இரசவாதப் பாடல்கள் உள்ளன. இந்நூலில். தத்துவ விபரம், பஞ்சபூதம், ஆக்கினை, மாலயன்காணுதது. அஷ்டகணபதி, தாரணை, ரேசக பூரகம், நவகும்பகத்தி பூசை, நாகரசமெழுகு, நவபற்பம், தசவித சரக்குச் செந்தூரம், காந்தசிந்தூரம், கைபாகம், அமிர்தம், லிங்கக்கட்டு, சிவயோகவழி, நாசிநுனித் தெரிசனம், சொரூப தரிசனம், மௌன யோக மந்திரம் முதலியன உள்ளன. எனவே இது ஒரு யோகசூத்திர நூலாகும். எழுத்துக்கள் நன்ருக உள்ளன.

---

வரிசை எண். 598. சுவடி எண். 320 (a)

## அகத்தியர் வாகடம்

ஏடுகள்: 120. ஏட்டின் நிலைமை: 10 ஏடுகள் வரை முன்பின் ஒடிந்துள்ளன. பிற்பகுதி மிகச் சிதிலம். பக்கத்திற்கு: 6-8 வரிகள்.

அளவு: 56X3½ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 2500. ஆசிரியர். அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஆதியாங் கடவுள் தன்னை யன்புடன் பணிந்து போற்றி
உதாமதணிவறு நோய்கள் வந்த வகையுங் குண ... ... ...

* * * * * * * *

மேனிவறண்டு உதரத்துள் வீங்கிக்கனத்து மெய் வெளுத்து
வாய் நீர் சுளற்றி நெஞ்செரித்துக் கண்ணுமுகமும் வறண்டு
வயற்றை மிகக் கண்டால் மானே யகுவை வாயுவிது
மண்ணோரறியச் சொன்னோமே. —91

அகுவை முற்றும்.

கவிகையின் குணம்
இரவில் கணத்தே ... ... ... ...

**முடிவு :**

வேப்பெண்ணை, புங்கெண்ணை, இலுப்பையெண்ணை, விழக்கெண்ணை, நல்லெண்ணை யிப்படியஞ் செண்ணையும் விட்டு வறுத்துப் பொட்டணங் கட்டிக்கொண்டு வெப்பெண்ணை காச்சி ஒத்தடஞ் செய்வது, வாதம் 80, சன்னி 13 தீரும்.

**குறிப்பு :**

இதில் க்ஷய நிதானம், விக்கல் நிதானம், சுர நிதானம், நெய்ச்சிலே சூத்திரம், நாடி நிதானம், தொடுகுறி சாத்திரம், கெற்ப ரோகக் குணம், சுரங்களின் குணம், சூரணராஜன், மதனகாமேசுவரம், நாசிகாபரணன், கோழி முட்டைத் தயிலம், சௌபாக்கிய சுண்டி, பாண்டு காமாலைக்கு மருந்துகள், மகாவியாதி, கேசரி குளிகை. சித்திரமூலச் சூரணம், குக்கில் சூரணம், எரிகுன்ம எண்ணெய் முதலியன உள்ளன. பல வியாதிகளின் குணங்கள் காணப்படுகின்றன.

---

வரிசை எண். **599.** சுவடி எண். **320** (b)

## அகத்தியர் பற்பமுறை 110

ஏடுகள்: 12 (121-133). ஏட்டின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 6-8 வரிகள். அளவு: 56X3½ செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 600. ஆசிரியர்; அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

உருவான சடத்தோர்க்குப் பிணிகள் நீங்க
வுற்றதொரு பற்பமுதல் கற்ப மெல்லாம்
அருவான யிருள்நீக்கி வெளியாய்ச் சொன்னேன்
அப்பனே மட்சேந்திரர் முறையைக் கேளு
குருவான குமரனிரு தாளைக் கொண்டே
குவலயத்தோர் பிளைப்பதற்குக் கற்பஞ் சொன்னேன்
கருவான கருவெல்லா நூற்றுப் பத்தில்க்
கைமுறையாய்ச் சொல்லுறேன் சொல்லுறேனே. -க

**முடிவு :**

போமப்பா அட்டபீலிகைக் கும்ம மெட்டும்
புரிந்தேறுங் குடல்வாதம்
ஆமப்பா பீலிகையு மறணை வலிக்கு
சிகரந்தவாய்
லூமப்பா விஷபாகந் திமிரு முட்ட
முத்தமனே சன்னிமுத வெண்பான் வாதந்
தாமப்பா நீரடைப்புக் கழலைப் புத்துத்
தான்கரையும் பூசுரர்க்குச் சாற்றினோமே. --109

குருவே துணை.

அகத்தியர் பற்பமுறை எழுதிநிறைந்தது முற்றும்.
சுபமஸ்து. ஸ்ரீ மங்களாயகி பாதராவிந்த கேதி.
பொதிகையாண்டவர் முன்னிற்க.

**குறிப்பு :**

இது, சுவடி எண் 17- a, b, 'அகத்தியர் பற்பமுறை இருநூற்றைந்து' என்ற சுவடிகளின் வேறுபட்டது. இதில் சொற்ணபற்பம், வெள்ளி பற்பம், காரீய பற்பம், நாகச் செந்தூரம், ரஸபற்பம், நீலம், மாணிக்கம், புஷ்பராகம், வைரம், வைடூரியம், முதலானவைகளின் பற்பமுறைகள், ஆனந்த பைரவன், உத்தம அக்னி குமாரன், அயச் செந்தூரம், பூபதி, வாதராக்ஷசன், ஸ்வயமக்கினி, மண்டூரம், அர்த்த நாரீசுவரம், குடோரி, திராவகம் முதலியன உள்ளன.

---

வரிசை எண் : **600** சுவடி எண் ; **320 (c)**

## மணவாள சதகம்

ஏடு: 1. ஏட்டின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 8 வரிகள். அளவு: 56x3,5 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 100. ஆசிரியர்: நாராயண பாரதியார். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

தீராத ரோகமுடை யோரிடமு முண்மையது
செப்பாத பொய்ய ரிடமும்
சீரான வொருவர்பண் டிதமன்றி வெகுவிதஞ்
செய்கின்ற பேர்க ளிடமு
மேராத கோபமிகு மூர்க்கமன்ன ரிடமு
மேந்திழையை மனது பிரியா
யிளமையா யதிவிரக மான முகரிப்
முயெப் படிநலஞ் செய்யினுந்
தீராத பேர்களிட மும்பத்தி யந்தனைத்
தாழ்வுசெய் வோர்க ளிடமுஞ்
சகலசன கண்டக ரெனுந்துட்ட ரிடமு
மிகுதன மாயே பொழியினும்
வாராதி ருப்பதே பண்டிதாள் நீதிகாண்
மணவான நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங்கட நாராயணனே ! —க

முடிவு :

சற்றுமே பொருமையில் வாதவர்கள் சண்டையில்
தான்போய் விலக்க வேண்டாம்
தைரியந் தன்னில்விக்கிர மாதித்த னென்னிலுந்
தன்னையே புகழ வேண்டாம்
மற்றொன் றுயெண்ணாது செய்யவேண் டாமென்பர்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரத வேங்கட ராயனே. —ரு

குறிப்பு :

இது நீதிகளைப் புகட்டுவது. 100 செய்யுட்கள் இருக்க வேண்டும். இதில் 5 செய்யுட்களே உள்ளன.

---

வரிசை எண் : 601 சுவடி எண் : 320 (d)

## அகத்தியர் வல்லாரை (மூலிகை நிதானம்)

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 9 வரிகள். அளவு: 36 X 3,5 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 200. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

சம்புடனே வேர் பிரையை யுஃபவர் கிருணி மூலந்
தெம்புடனே தீருமென்று கும்பமுனி தாமுரைத்தார்
சித்திரவில் வத்தின்மூலமெத்தா வலாய்க் கொணர்ந்து
சத்தாகிலு கசாயம் வைத்தாகிலும் குடிக்கில் — — —

**முடிவு :**

........ட்டசுரம் போயகலும் குட்டியதிலான விளமட்டில் வரும்
வாந்தி சத்தி பேய்ப்பீர்க்கி ஞமமதை ........... .........
......... யாங்குமண்ட வாதசன்னி யிங்கிதமா பொடுபுரை
மரக்கொழுந்துலை நசியமூக் கதனிலேவிட் ... ... ... ...

**குறிப்பு :**

கடைசி ஏடு முன்னும் பின்னும் சிதைந்துள்ளது. ஏகமூலிகாப்பிரயோகம் என்ற முறையில் மருந்தின் குணங்களைக் கூறும் நூல். கஷாயம், நசியம், கல்கம் முதலிய பக்குவங்களைச் செய்து நோய்களைத் தீர்க்கும் முறை கூறப்பட்டுளது.

வரிசை எண். **602**. சுவடி எண். **320** (e)

## வைத்தியம் பலதிரட்டு

ஏடுகள்: ***91.*** ஏட்டின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: ***6-10*** வரிகள். அளவு : ***56X3½*** செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: ***6000.*** ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

வாதம் 80 சன்னி 13க்கு தைலம்; குட்டம், கிரந்தி யிவைக்கு ரச மை. பெருங்காய வைப்பு, சூடன்வைப்பு.

வேப்பெண்ணெ ஒருபடிக்கு மூன்கூறு ஈண்டுனலு வராகன்
பெருங்காயம் சேத்தரைத்து வேப்பெண்ணெயிற் கலக்கி
மூன்றுநாள்
சூரியபுடம் குத்தியில் வைத்து ஒரு கழஞ்சு தைலம் உள்ளுக்குக்
கொடுத்து மேலுக்கும் போடவும்.

**முடிவு**

பத்தியமில்லை பகற் புணர்ச்சி நித்திரையை நித்தியமாய்த் தள்ளிவிடுநீ. சூலை வெட்டும் பெருமாள் சூரணம்.

குறிப்பு:

இதில் வைத்திய முறைகள் பல உள்ளன. அவற்றுள் அரிய முறைகள் உள்ளன. ஆனந்தபைரவன் சுரத்திற்கு இந்திர வஜ்ஜிரம், சிந்தாமணி உருண்டை, சுகவிரேசனம், கஜகேசரி, அதிசார கேசரி, ரஸபற்பம், வாதராட்சசன், பூரண சந்திரோதய குளிகை, பஞ்சவிருத்திரரசம், விஷ்ணு பராக்கிரமம், சுத்திக்கிரமங்கள், கெண்டைவியாதிக்குச் சந்நியார் மருந்து, பற்ப வகைகள், கையில் கடுக்காய் பிடித்திருக்க விரேசனம், முயல் நெய், குன்மத்திற்கு கெந்தாதி லேகியம், ரணரங்கபைரவன், தைல வகைகள், அண்டவாதத்திற்கு மருந்து, சாம்பான் முறை, முதலானவைகள் உள்ளன.

வரிசை எண். **603**. சுவடி எண். **321** (a)

## அகத்தியர் பரிபாஷைத் திரட்டு (1-5 காண்டங்கள்)

ஏடுகள்: *105 (18-122).* ஏட்டின் நிலைமை: மிகச்சிதிலம். பக்கத்திற்கு: *12—14* வரிகள். அளவு: $17 \times 4\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *3000.* ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

பஞ்சமித்திர தீட்சை

வாழ்வான சத்திக்குத் தீட்சை மூலம்
வகைபிரித்துச் சொல் ... ... ... ...
தாள்வில்லாச் சத்தியுஞ்சிவ சத்திக் குள்ளே
... ... ... ... மூன்றுசெங்மந் தணிந்து போச்சு
கோளேது மில்லாத நாத் ... ... ... ... ...
கூறுமந்தச் சுண்ணரவக் கடலில் மூழ்கில்த்
தாள்விலாப் பிரணவ ரூப ... ... ... னு மாச்சுச்
சவுக்காரச் செயநீரைச் சாத்தினேமே. -சு

முடிவு:

மதுவென்பா ரண்டபகி ரண்டமென்று
மகஷ்த்தான அண்டமதுபே ரண்டமென்றும்
பதுவென்பார் பரமண்ட மஞ்சாங் காண்டம்
பகருமொளி யேரண்டம் பதியு மென்று
மதுவென்று மவுனமென்று மண்டமென்று
மகஷ்த்தான யென்குருவு முபதேசித்தார்
சதுவென்ற சற்குருவு மிதுவே யென்றுஞ்
சமரத்தின் பிரமமென்றுஞ் சார்பு முற்றே. -ா

தெட்சணாமூர்த்தி ரெட்சிக்க வேண்டியது.

**காலம் :**

1051—ம் ௵ சித்திரை மீ ௰௨ குருவாரமும் பூரட்டாதி நட்சேத்திரமும் யேகாதசியும் கூடிய சுபதினத்தில் எழுதி முடித்தேன், அருணாசலையா.

**குறிப்பு :**

இச் சுவடி பெரும்பாலும் வாதிகட்குப் பயன்தரக் கூடியது. முதல் 17 ஏடுகள் காணப்படவில்லை. இதில் பஞ்சமித்திர தீட்சை சிவ தீட்சை, புத்திரப் பிறவி, ஆண்பெண் வயது, உயிரெழுத்து. ஊமையெழுத்து முதலியனவும் சக்தி சிவ மறியக் குறிப்பு, திருமூலர்மறைவு, நூல் கிழிதல், சித்தர் நூல் இயல்பு, முதலியனவும், நாதவிந்தும் அண்டமும், பஞ்சகண தீட்சை, பதினெண் சித்தர் சாபம்' சாபநிவர்த்தி, பஞ்சபாதகம் நீக்க முதலியனவும், அகர, உகர, ஓகாரம், ஐங்கோணம், சோழ பாண்டி, சேரன் காசி முதலியனவும், மடவாதிகள், அடிமுடி, அது அறியாதவன், பஞ்சமலம், நூல்நிலை முதலியனவும் கூறப் பட்டுள்ளன.

வரிசை எண் : **604**. சுவடி எண் : **321** (b)

## அகத்தியர் வைத்தியம் 30

ஏடுகள்: 8 (124—131). ஏட்டின் நிலைமை: மிகச் சிதிலம். பக்கத்திற்கு: 11—12 வரிகள். அளவு: 17X4½ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 200. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஆதிபரா பரத்தினுட கிருபை போற்றி
அடிமுடிய மணக்கோல நந்தி காப்பு
நீதியாம் வாரணத்தின் முகவன் காப்பு
நிர்மலமாஞ் சதாசிவத்தின் வடிவே காப்பு
பாதிமதி சடைக்கணிந்த சிவமே காப்பு
பத்திமுத்திச் சத்திவை ரவனே காப்பு
சோதியாம் வெளிநிறைந்த நாதாக்கள் காப்பு
சுருதிமுடி வானஓங் காரங் காப்பே. -க

**முடிவு :**

ஆமையா யின்னீருற் துருசு வெள்ளை
அவ்வெள்ளைச் சுண்ணத்தாற் துருசை நீத்தி
ஊமையா பறித்தகட்டிற் பூசிப் பாரு
உத்தமனே சொற்னமது சுண்ண மாச்சு

நாமையா சொல்லுகுறேந் தாம்புரத்திற் கொடுக்க
நாட்டோற்குப் பிளப்பதற்கு வெளியு முண்டாங்
காமையா அதையெடுத்து வெள்ளிக் கீயக்
கனகமாங் கருமூன்று பத்து முற்றே. -நய

கைபாக முப்பது முற்றும்.

**குறிப்பு:**

சுவடி எண் 121-g என்பதின் மறுபிரதியாகு மிது. அதற்கு 'அகத்தியர் வகாரம் முப்பது' என்று பெயர் கொடுக்கப்பட்டுளது. ஆனால் சுவடி எண் 248-e கொண்ட "அகத்தியர் மகாமுனி வகாரம் முப்பது" என்ற சுவடியின் வேறு பட்டது இது.

இதில் முப்பு, குருமுடிக்குங்காலம், அண்டபிண்டம், அண்டசக்தி, கங்கைக்குத் தசதீட்சை, அம்பிகாயோகம், சிவஉப்பைக்காண, சிவதீட்சை, முப்பு நிறம், நடுவின் பெயர், அடியுப்பின் பெயர், முப்புச் சுன்னம், பஞ்சபூதவுப்பு, சுன்னத் தெந்தம் முதலியவைகளுள்ளன.

---

வரிசை எண் **605**.

சுவடி எண். **321** (c)

## அகத்தியர் வகாரச் சுருக்கம் 12

ஏடுகள்: 4 (133-136) ஏட்டின் நிலைமை: மிகச் சிதிலம். பக்கத்திற்கு: 11 வரிகள். அளவு: 17 × 4½ செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 100. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

தாயான வுன்மனையாள் பாதம் போற்றிச்
சாற்றுகிறே மாயிரத்தி யிருநூ றுக்குள்
தோயாத கருவொன்று மில்லை யில்லை
சொல்லடக்க மாயுரைத்தேன் கருவ தொன்று
காயாகு மதைக்குறுக்கி யிறுநூறு சொன்னேன்
கனிபோலே யிந்தநூல் பனிரெண் டுக்குள்
வாயாரச் செல்லுகிறேன் வளலை மாற்கம்
மதியிரவி யண்டபிண்ட வளமை கேளே. -க

**முடிவு:**

தானென்ற அண்டபிண்டங் குருவாய்ச் செய்யத்
தவம்வேணுஞ் செபம்வேணுந் தியானம் வேணு
மானென்ற அக்கினியா முப்பைக் காண
மதிவேணும் விதிவேணும் வாசம் வேணு

நானென்ற ஆணுவத்தை யொளிக்க வேணு
நலமான சிவயோக நாட்டம் வேணுந்
தேனென்ற சற்குருவைக் காக்க வேணுஞ்
சித்தியாம் பன்னிரெண்டுஞ் சிறக்க முற்றே. -கஉ

தெட்சணமூர்த்தி சுவாமியளாகிய பொதிகாசலத் தெய்வம் திருவாய் மலர்ந்தருளிய சுருக்கம் பனிரெண்டு முற்றும்.

**குறிப்பு :**

இது எமது சுவடி எண். 120-a-ன் 'அகத்தியர் பாடல் பன்னிரெண்டு' என்ற சுவடியின் மறுபிரதியாகும்.

இதில், பிண்டம், பிண்டமண்டபம், நூல்பார்க்க முதலான முப்புச் சம்பந்தமான செய்திகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண். **606** சுவடி எண். **321 (d)**

## அகத்தியர் மதிவெண்பா (ஒன்பது)

*ஏடுகள்: 2 (137, 138). ஏட்டின் நிலைமை: ஓரங்கள் எலி கடித்தவை. பக்கத்திற்கு: 12 வரிகள். அளவு: 17x4½ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 50. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.*

**தொடக்கம் :**

கதிருஞ் சசியுங் கலந்து டிரிந்தநிலை
விதிபூரு வங்குருநூல் விள்ளுமே—மதிவெண்பா
முழுதும் பொருளறியா மூடர்களே யானலும்
வழிலையறி வார்களென்ற வாறு. -க

**முடிவு :**

சாற்றுங் குளிகை தமர்வாச லிற்செலுத்தி
யேற்றினு லேழுசபை யெய்தாதோ—தோற்று
மனங்கடந்து பூரணத்தில் வாழாதோ காய
மினந்தெளிந்து கொள்வா யினம். -கூ

**குறிப்பு :**

இது 296-ஐ எண்ணுள்ள சுவடியின் வேறுபட்டது. இதில் முப்பு விபரம் கூறப்பட்டுளது. இதில் 'முற்றும்' என்று கூறப்படவில்லை.

வரிசை எண் : **607** சுவடி எண் : **321** (e)

## அகத்தியர் வகார மதிவெண்பா 100

ஏடுகள் : 12 (139-150). ஏட்டின் நிலைமை : ஓரங்கள் எலி கடித்துள்ளன. பக்கத்திற்கு: 6-14 வரிகள். அளவு: 17 × 4½ செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 300. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

வெள்ளைக் கலைமாதும் வெண்கமலத் தாய்மாதும்
பிள்ளைக் கலியகற்றும் பெம்மானே—பிள்ளைக்
காணிக்குக் காத்திருக்குங் கற்பகமே மதிவெண்பா
நாணிக்குத் துணைவிநா யக.

இவை மதிவெண்பாக் காப்பு. இதுவே வகார மதிவெண்பாவாம்.

நாயக மென்றே யகத்தில் நானினைந்தேன் அகத்தியனேன்
வாயில் வழுதொழுகா வந்தருளும்—பாயிர
மாயுரைத்த வைஞ்ஞூறும் வகார மதிவெண்பா
சேயுரையா மின்னூறுஞ் செப்பு. -க

முடிவு :

நயந்தேன் புலத்தீசர் நாயகியாள் திருவடிக்கு
வயந்தசிறு பிள்ளையென வாழலா—நயந்த
மாத்திவைக்கும் புத்தியறி மதியமூர்த மானவெண்பா
சாத்திவைத்த மாலைமுற்றுஞ் சார். -ா

தெட்சணாமூர்த்தியருளிச் செய்த வகார மதிவெண்பா முகிந்தது. முற்றும்.

**குறிப்பு :**

இது ரசவாதத்திற்கேற்ற நூல்.

வரிசை எண் : **608.** சுவடி எண் : **321** (f)

## அகத்தியர் மூப்பு ஐம்பது

ஏடுகள்: 8. ஏட்டின் நிலைமை: ஓரம்எலிகடித்தது. பக்கத்திற்கு: 13 வரிகள். அளவு: 17 × 4½ செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 200. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றும்.

**தொடக்கம்:**

மயமான முப்புவின் மாற்கந் தன்னை
வயத்துக் காதியாய் விரித்துச் சொல்வேன்
செயமான கணபதியுங் கந்தன் ருனுஞ்
சிவனோடே பார்வதியுநிற் வாணி தானு
நயமாக யெப்போது முன்னே நின்று
நாமறிய முப்பூவை நயந்து காத்து
வயமாகச் சொல்லுகிறேன் அன்ப துக்குள்
வயித்தியரே யெப்போதும் வணங்கிச் சேளே.

**முடிவு :**

காலான வயித்தியத்தை யுத்தி யாகக்
கைமுறைகள் தப்பாமல் கருவாய்ச் செய்தால்
பாலான திறமுடைய பிறம ஞவார்
பாரிலே வாள்வதற்குக் குருவு மாவார்.
சேலான திருவுடைய செல்வ ஞவார்
சிந்தையிலே களங்கமற்ற சித்த ஞவார்
நாலான மணிபொருத்த பிரமன் சொன்ன
நலமுடைய முனிவர்மொளி நாடி முற்றே. -ரும

தெட்சண பொதிகாசலத் தெய்வ மருளிச் செய்த
முப்பூ அன்பது நன்ருக முகிந்தது முற்றும்.

**குறிப்பு :**

இதில் முப்புவில்லாக்கூறு, முப்பு முடித்தல், முப்புச் சுண்ணம், கடுங்காரம், அறியாதார், தூல்கள் துகை, காந்தச்சத்து, அயம், அப்பிரகம், கல்நார், அண்ட ஓடு, அஸ்தி, கலங்கொம்பு, ஆமையோடு இவைகளில் சத்து எடுக்கு முறை, அனுபானங்கள் முதலானவை கூறப்பட்டுள்ளன. 154ம் ஏடு இல்லே.

---

வரிசை எண். **609**. சுவடி எண். **321** (g)

## அகத்தியர் குருநூல் ஐம்பது

ஏடுகள்: *15 (161—175)*. ஏட்டின் நிலைமை: சிறிது எலிகடித்த நிலே. பக்கத்திற்கு: *12* வரிகள். அளவு: *17 × 4½* செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: *400*. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

அகண்டவெளி பராபரத்தி னருளைப் போற்றி
யகிலமதிற் குருநூலன் பதுஞ் சொல்ல
இகத்திலுறு பாசமது மூன்றுந் தள்ளி
யீசனைப்போல்ச் சருவாங்க மிருக்க வென்று
செகமதிலே வயித்தியத்தின் முப்பூ மாற்கஞ்
செப்பினேன் முப்பூவன் பதும் பாரு
அகமகிழச் சொன்னதொரு முப்பூ மாற்கம்
வாதமாம் வயித்தியற்கு மறைந்திட் டேனே. -க

முடிவு :

என்றுரைத்த யிந்தநூல் குருநூ லாகு
மேலைகட்கா யன்பதுள்ளே யெவருங் காண
நன்றன்றோ முப்பூவை வெளியாய்ச் சொன்னே
னுடுவீ ரெந்தன்மக்காள் நாடு வீர்கள்
வண்டுரையும் பூங்குழலாள் கிருபை யாலே
வரைந்துரைத்தேன் யேழையுந்தான் அறிந்தமட்டுங்
குன்றுடைய சித்தர்களுஞ் செகமு மெச்சக்
குருநூலன் பதுமிதுவாங் குணமா முற்றே. -டுக

பொதிகாசலத் தெய்வமாகிய அகத்திய சுவாமிகள்
அருளிச்செய்த குருநூலன்பது முகிந்தது.
முற்றும்.

குறிப்பு :

முப்புவைப்பற்றி யுரைப்பதாகு மிந்நூல்.

வரிசை எண். 610 சுவடி எண். 321 (h)

## அகத்தியர் வெடியுப்புச் சுண்ணச் சூத்திரம் 4

ஏடு: 1. ஏட்டின் நிலைமை; நல்லநிலை. பக்கத்திற்கு: 11-13 வரிகள். அளவு: 17X4½ செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை; 50. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

ஆச்சப்பா புளியொடு உப்புங் கூட்டி
அப்பனே கொளுத்திடவே சுண்ண மாகும்
பாச்சப்பா சாரத்தை நாலி லொன்று
பாச்சியே தூளாக்கிப் பனியில் வைப்பாய்

நீச்சப்பா செலமாக நிறைந்து நிற்கு
　　நிச்செயமாய்ச் சொல்லுகிறேன் கேளு கேளு
காச்சப்பா வெப்பதனைக் கரைத்துக் கொண்டு
　　கலக்கியே தெளிவிருத்துக் காச்சு காச்சே. -க

முடிவு :

போடப்பா சுண்ணமது கொடுர மெத்தப்
　　புகளான துருசுக்குக் கவசங் கட்டி
போடப்பா காடையென்ற புடத்தைப் போடு
　　புனிதமாய் நீறியது வெண்மை யாகும்
ஆடப்பா சூதமது கட்டிப் போகும்
　　மழவாந்த வேதையெல்லா மாட லாகும்
விடப்பா பொன்னுகும் வித்தை யாகும்
　　வேதாந்த மூர்த்திசொன்ன வேதை முற்றே. உ

அகஸ்திய சுவாமியளருளிச் செய்த
வெடியுப்புப் புளிச்சுண்ண முற்றும்.

குறிப்பு :

வெடியுப்புப் பற்றிக் கூறுவது. இதன்பின், 'வெடியுப்பைக் கடுங்கார மேத்து முறை' என்ற தலைப்புள்ள, ஓரே பாடலுள்ள ஏடொன்றுளது.

---

வரிசை எண். 611. சுவடி எண். 321 (i)

## அகத்தியர் வாழலை பத்து

ஏடுகள்: 3. ஏட்டின் நிலைமை; நல்ல நிலை. பக்கத்திற்கு: 8-12 வரிகள். அளவு: $17 \times 4\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 150. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

காணப்பா யெரியிலே வளந்த பிண்டம்
　　கடிதான மாங்கிஷத்தோ டெடுத்து வந்து
பூணப்பா பொரிகாரம் பொரித்துக் கொண்டு
　　பிண்டத்தை வாய்திறந்து அதினுள் போடு
ஆணப்பா பெண்ணோடே கூடி னுப்போல்
　　அப்பனே நாதமங்கே யிரங்கும் பாரு
சாணப்பா லோகமென்ற சட்டி தன்னில்
　　சாதகமா யிணங்களையும் அதனுள்ப் போடே- -க

முடிவு :

ஆடலா மிது(ஞலே குளிகை செய்து)கொண்டு கோடா கோடி
அளவறந்த வித்தையெல்லா மாடலாகும்
ஓடெலா மிதுகொண்டு குளிகை செய்து
உறுதியுள்ள மலைக்கெல்லா மேறிப் பார்த்து
நாடெல்லாந் திரிந்தாலு மிந்தப் போக்கு
நல்லமுறை யிதுபோலே யெங்கு மில்லை
பாடலிலே சொன்னதென்று யெண்ண வேண்டாம்
பத்துமே சூத்திரமாம் பாடல் முற்றே. -ம

அகத்திய சுவாமியளருளிய மழைமுறை பத்து முற்றும்.

குறிப்பு :

இது வழலை மார்க்கம் கூறும் நூல்.

---

வரிசை எண் : **612** சுவடி எண் : **321 (j)**

## நாலுகாண்டத் தாயிரத்து இருநூறில்

ஏடுகள்: *3.* ஏட்டின் நிலைமை: சிறிது சிதிலம். பக்கத்திற்கு: *12* வரிகள். அளவு: *17X4½* செ. மீ. எழுத்து: தமிழ். சி.எண்ணிக்கை: *100.* ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

சுட்டுமென்று மின்னமொரு செய்தி கேளு
சுடுஞ்சூல்பெற் றேர்க்கையிலே ஆடு தன்னை
வெட்டுமென்று மரிசூரி யெடுக்கும் போது
மெல்லிநல்லாள் குடங்காணும் வேதை வேதை
தொட்டுமந்த ரசங்கட்டுந் தாக்கிப் பாரு
செறம்பாமற் சிறுகுப்பி யடைத்துக் கொள்ளு
எட்டிரண்டு மிதுதாண்டா பாவி நஞ்சை
யெடுக்கையிலே மூவறுண்டு யிதிலேத் தானே. -559

முடிவு :

விரைத்துப்போம் வெடிக்குரெட்டைக் குண்டு போட்டால்
வேளமென்ற மதயானை சூதஞ் சாகும்
உரத்துப்போம் உப்புமுதற் புடத்துக் கெல்லாம்
ஓடுமே பலகோடி யண்ட மெல்லாம்

திறத்துப்போம் உடலிறுகி வறுத்துக் காணுஞ்
செகமெல்லாம் பார்வையினாற் செம்பொன் னாகும்
துரைதப்பி னல்வருமோ வாதந் தா

குறிப்பு :

இதில் கைபாசச் செய்யுட்களாக எடுத்தெழுதப்பட்ட செய்யுட்கள் உள்ளன. ரோமரிஷி 500, ரோமர் குருநூல் 50 ஆகிய நூல்களின் செய்யுட்களும் உள்ளன.

இதன் பின்னர் உள்ள 3 ஏடுகளில், சகலகலைஞானத்தில் எழுதிய பஞ்சபூதக் குகை, போகர் எழுநூற்றிலெடுத்தெழுதிய பஞ்சபூதக் குகை, சுடுங்காரக்குகை, ஆகியவை எழுதப்பட்டுள்ளன.

---

வரிசை எண் : 613 சுவடி எண் : 321 (k)

## அகத்தியர் வழலை மதிவெண்பா

ஏடுகள்: 3. ஏட்டின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 9–11 வரிக்ள். அளவு: 17X4½ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 75. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

கதிருஞ் சசியுங் கலந்து பிரிந்தநிலை
விதிபூறு வங்குருநூல் விள்ளுமே—மதிவெண்பா
முழுதுரை தெரியா மூடர்களே ஆனாலும்
வளலையரி வார்களென்ற வாறு. -க

முடிவு :

வன்னி யுணரே. சஞ்செய மாகினல்
பின்னையோற் பொறுழப் பேசவும்

குறிப்பு :

இதில் 19 செய்யுட்கள் முழுமையாகவும் 20 வது செய்யுள் குறையாகவும் உள்ளன. பிழைகள் மலிந்துள்ளன.

---

வரிசை எண் : 614. சுவடி எண் . 322. (a)

## நாடி லட்சணம்

ஏடுகள்: 5. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 14–15 வரிகள். அளவு: 22X5 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை; 300. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

கரிமுக னடியை வாழ்த்திக் கைதனில் நாடிபார்க்கில்ப்
பெருவிர லங்கு லத்தின் பிடித்துட னடுவே தொட்டால்
ஒருவிர லோடில் வாதம் இருவிர லோடில் பித்தம்
சிறுவிரல் மூன்றி லோடிற் சிலேற்றும னுடி யாமே. -க

**முடிவு :**

நாடியிற்த் தெளிவு னுலும் நற்குரி குணத்தி னுலும்
நீடுயிர் விறியி னுலும் நிலைபெரு முகத்தி னுலுங்
கூடிய வியாதி தன்னைக் கோதில்லாக் குணபா டத்தால்ச்
சூடிய குணங்க ளாலே சுகம்பட அரிந்து சொல்வேன். -கூச

**குறிப்பு :**

இதில் வியாதி லட்சணம், வாதபித்த கப நாடிக் குறிகள், நடுக்குவாதம் வியாதிகள் நாடிய் நடைபேதங்கள் முதலியன உள்ளன. இதன் மறு பிரதிகள் *104*-d, *104*-i ஆகும்.

வரிசை எண் : **615** சுவடி எண் : **322** (b)

## உதரக்கிரியை நிதானம்

ஏடுகள்: 9. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 15—16 வரிகள். அளவு: 22 × 5 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 750. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

ஆதியாங் கடவு ளான அடியிணைப் பணிந்து போற்றி
தீதறு வியாதி தன்னைத் தெளிவுட னறிய வேண்டிச்
சோதிசேர் முனிவன் கூறுங் குணந்தொரு பாடல் தன்னை
நீதிசேர் படியின் மீதே நெறியுட னுரைத்தார் மேலோர். -க

**முடிவு :**

மலே யுதரந் தனில்புரண்டு வளையும் போலத் திரண்டது
நொந்தாலே நாம் பின்தன் கிளை தடித்துக் ... ... ...

**குறிப்பு :**

இது 323-e என்ற சுவடியின் பகுதியாகும். இதில் எரிகுன்மக் குறிகள், சோகையறிவது, சாத்யாசாத்ய சோகை, வாத சோகைக்குணம், வாதபாண்டுக் குணம், பித்த, சிலேத்தும, சுர, ரத்த, மூல, சன்னிபாத, விஷ பாண்டு வகைகளின் குணம், நீராமை, பேராமை, மஞ்சள் காமாலை, மகோதரம், பெருவயறு,

முதலான வியாதிகளின் குணங்கள் காணப்படுகின்றன. இதில் 111 பாடல்கள் முழுமையாகவும், கடைசிப் பாடல் முடியாமலும் இருக்கின்றன.

---

வரிசை எண். 616. சுவடி எண். 322- (c)

## பிரம்மமுனி வைத்திய சூத்திரம்

ஏடுகள்: 46. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 14—15 வரிகள். அளவு: 22X5 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 3600. ஆசிரியர்: பிரம்மமுனி. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

சீரருளான சோதி சிவமய மான சோதி
ஆரணி கொன்றை சூடி யாரணிந் தானைப் போற்றி
வாரணி ரிஷிகள் பாதம் வணங்கியே வயித்திய நூலைக்
காரண மாகப் பாடக் கணபதி காப்புத் தானே. -க

முடிவு :

வாறான கருவையெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
வாதமொடு வயித்தியமும் வகையாய்ச் சொன்னேன்
வாறான அஞ்சனமுந் திலதஞ் சொன்னேன்
வசியமொரு திலதவிற்றை மாரணமுஞ் சொன்னேன்
ஆறான ஞானமொடு வாசி யோக
மடங்கி நின்ற பூரணமு மறியச் சொன்னேன்
தேறவே ஊளையுட கருவுஞ் சொன்னேன்
செப்பினேன் கருக்கிடையின் சூத்திரந்தான் முற்றே! -383

பிரமமுனி வைத்திய சூத்திர முற்றும்.
குருவே துணை.
குமரன் துணை.

குறிப்பு :

இது 36-a, 162-a, 317-j ஆகிய சுவடிகளின் மறு பிரதியாகும். இதில் முப்பு குரு, மேகராஜாங்க லேகியம், கர்ப்ப நோய்க்கு எண்ணெய் காளகண்ட சூரணக் குடோரி, பரங்கிப்பட்டைப் பதங்கம், வில்வாதி லேகியம், எழுவகைப் பீசனத் திற்கும் எண்ணெய், ஆக்கிரூணம், ஆருத புண்ணுக்கு கொம்மட்டிக்காய் பதங் கம், ஆடாதோடை லேகியம், பவளபற்பம், அரிதாரபற்பம், கர்ப்ப நோய்க்கு மருந்து, முதலியன உள்ளன.

வரிசை எண் ; 617 சுவடி எண் : 322 (d)

## கர்மகாண்டத்தில் பகளங்க பற்பம் முதலியன

ஏடு: 1. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 14—15 வரிகள். அளவு: 22×5 செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 100. ஆசிரியர்; அறியக்கூடவில்லை. முழுமை: முற்றறற்றது.

**தொடக்கம் :**

வணங்காத வங்கமது வெள்ளீ யந்தான்
வளமாகப் பலமொன்று மோரில் சுத்தி
பிணங்காமல் பதிஞெருதிர முருக்கிச் சாய்த்துப்
பிரளாமல்க் கோமியத்திலவ் வீதுஞ் சுத்தி
குணங்காமல் சுத்திசெய்த வங்கந் தன்னைக்
கூறக்கேள் பலமொன்று உருக்கி யேதான்
இணங்காத சூதத்தை மருஞுள்ச் செங்க
லிட்டரைத்துச் சுத்திசெய்து தொந்திச் சாட்டே. -க

**முடிவு :**

கோரக்கிளங்கு, தூதுவளைவேர், கண்டங்கத்திரிவேர், நெய்தற் கிழங்கு, நெல்ப்பொறி, ஆக வகை ஒன்றுக்கு கழஞ்சு -க.

**குறிப்பு ;**

இதில் இரண்டு மருந்து முறைகள் உள்ளன. இதன்பின் 48-56 வரை ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 618 சுவடி எண் : 322 (e)

## சுந்தரானந்தர் சூத்திரம்—25

ஏடுகள்; 2. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 14—15 வரிகள். அளவு: 22X5 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை. 170. ஆசிரியர்: சுந்தரானந்தர். முழுமை: முற்றும்.

**தொடக்கம் :**

பூமிநாத மேகமே புனல்சொரிந்த பூவதாம்
ஆமடா ரவிமுகத்தி லாயிருந்த இந்தடா
சோமநாத மீறியேக ரூபம்வைத்த சத்தியாம்
ஏமவித்தை பூரணமிருக்க அட்டசித்தியே. -க

முடிவு :

வேதை காட்டக் கைம்முறை வேணுமலா தெற்றவே
காதை வெண்ணா லாடவே கண்டு பாரு மும்முளே
ஓதி மம்போல் நந்தி வந்து உபதேசமே செப்பினல்
ஆதி யான பூரண மறிந்து பாரு சோதியே. -௨௫

சுந்தரானந்த ரிருபத்தஞ்சு முகிந்தது.

முற்றும்.

குறிப்பு :

இது சுவடி எண் 228-h போன்றது. ஆனல் இதில் பாட பேதங்கள் உள்ளன. இதில் வெளுத்த வுப்பு, வழலே செய்முறை, முப்பு முடித்தல், கவுனக் குளிகை. லிங்கச் சுண்ணம் முதலியன உள்ளன.

****

வரிசை எண். **619.** சுவடி எண். **322 (f)**

## கருவூரார் நொண்டி நாடகம்

ஏடுகள்: 32. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 14—15 வரிகள். அளவு: 22X5 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 2500. ஆசிரியர்: கருவூரார். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

பூவுலாவிய தேவி யந்தரி மோத சுந்தரி மாயிசிற்ப......
சிவக்கியானி சித்திகளே கொண்டாடவே
காவு லாவிய போக நாயகர் கடவு ளகத்திய ரிஷிகளே
...... ாகள கருணை நந்தீசர் பொதுவருந் துணையே
பாவுலாவிய போக நாதர்கை பச்சையாகிய கொண்கண
ரருள் பண்பு நற்றமயன் றுணை யெனுமே கொண்டாட
நாவுலாவிய சட்டை மாமுனி நாதந்தரு திருமூல நாயகர்
நாதர் கோரக்க நாத ருந்துணையே
தந்தானனே -க

முடிவு :

சித்தனும் வாயுவேக மனவே கங்கள்
சிறப்பான தேவருடன் ரிஷியு மாக
முத்திபெத்த பன்னீரா யிரமாண்டுக்கு
முகியாமல் வாழ்ந்திருப்பா ரில்லத் தோடே

உத்தமொரு மறுகற்பங் கொண்டு பின்பு
யுற்பனமாய்க் கற்பங்கள் கொள்ளு மப்பா
சத்தியிம மூலியிலே யரைத்துப் பாலில்த்
தான்போட ரத்தமா மிதிற்கூ தத்தை. -245

**குறிப்பு :**

இது கருவூரார் நொண்டி 700 என்ற பெயரில் அச்சாகியுள்ளது. இதில் கற்பஞ் சாப்பிட்ட பேரறிய, நாய்ப்பாகல், சவுக்காரக்குரு, நாகரஸபற்பம், உப்புக்கட்டு, வல்லாரைக் கற்பம், வேதைகண்டோர் மகிமை, கும்மியடி, காத்தவராயன் சந்தம், கையாந்தகரைக் கற்பம், பாதாளமூலி கற்பம், மதியம்ருதம், லிங்கக்கட்டு, அண்டமெழுகு, இரும்பீயம், துருசுச்சுண்ணம், குருமுறை, சிந்து வல்லாரை, கீழ்க்காய்நெல்லி கற்பம், பேய்ச்சுரை, நீலிக்கற்பம், சலாகை, சோதிப்புல் முதலியவை உள்ளன.

---

வரிசை எண் : **620** சுவடி எண் : **322 (g)**

## அகத்தியர் தீட்சாவிதி

ஏடுகள்: 24. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 14—15 வரிகள். அளவு: 22 × 5 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 2000. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றும்.

**தொடக்கம் :**

வானைத் தாவிய பொதிகை மகத்தான ரிஷியுடைய வாக்கு நேர்மை
பானைத் தாவிய பூசை பரிவான சிவயோக பண்போர் கேளு
மீனைத் தாவிய ராசி விளங்கிநின்ற கன்னிமுதல் வில்லு மேஷஞ்
சேனைத் தாவிய துலாத்தின் சென்ம ராசிக் கருவைச் செப்பிறேனே.-க

**முடிவு :**

பணிமாறு காலத்தே மணியி னோசை
பாரங்கான் சிகண்டியி னாத வோசை
பணிமாறு காலத்தே மணியி னோசை
பாங்கான செகண்டி நாத வோசை
பணிமாறு காலத்தே மவுன தோத்திரம்
பதிவாலே கையிலே கியத்தை யீய்ந்து
பணிமாறு காலத்தே பணிந்து தெண்டம்
பண்ணுவாய் தீட்சைவிதி பூசை முற்றே. -201

அகத்தியர் தீட்சைவிதி முற்றும்.
குருபாதமே துணை.

குறிப்பு :

இது 19-bன் மறுபிரதி. இதனுடன் ஒப்புநோக்கத்தக்க சுவடிகள் 228-e, 160. இதில் இன்னின்ன ராசியில் பிறந்தோர்க்கு இன்னின்ன சித்திக்கும் என்றும், நாற்பத்து முக்கோண பூசைவிதியும் சிதம்பர ரகசியமும், காயசித்தி கற்பங்களும், சாபநிவர்த்தியும், சிவபூசையும் உள்ளன. கடைசி பாடலில் முதல்வரியே 2-வது வரியாகவும் உளது.

---

வரிசைஎண் : 621 சுவடி எண் : 322 (h)

## கண் வைத்தியம் முதலியன

ஏடுகள்: 13. ஏட்டின் நிலைமை: பழுது (ஒடிந்தும் உளது): பக்கத்திற்கு: 14—15 வரிகள். அளவு: 22X5 செ.மீ. எழுத்து: தமிழ் கி.எண்ணிக்கை : 1000 ஆசிரியர் : தெரியவில்லை. முழுமை. முற்றற்றது.

தொடக்கம் :

பச்சை உருண்டை

வங்காளப் பச்சை, வெங்கலப் பொடி, வெள்ளைக் கல்லுப் பீங்கான் சங்கு தலையோடு, ஓரிலைத்தாமரை சமூலம், சிறுகீரைவேர், பொன்னாங் காணிவேர் இவை சமன் கொண்டு, எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து உண்டை செய்து நிழலுலர்த்தி முலைப்பாலிலுரைத் திடப் பல கண்ணோக்காடுந் தீரும்.

முடிவு :

எரிகுன்மம் வலிகுன்மத்துக்கு விஷ்ட்டிணுக்கி ... ... ... ...
டுவிராகனிடை தண்ணீர் வார்த்து அரைத்து வெண்ணெயிற்
குளப்பிக் குடுக்க
எரி ... ... ... ... து கடுநெல்லி தான்றிக்காய் நேர்வாளம் கெந்தகம்
அரிதாரம் சீன ... ... ... ... இவை கையாந்தகரைச் சாறு வார்த்து
ஒரு நாளரைத்து நிழலுலர்த் ... ... ... ...

குறிப்பு :

இதில் நயன வியாதிக்கு மருந்துகள், வாதராச்சஸ அகவல், சுரத்திற்கு, பெரும்பாட்டிற்கு, மகாபூதிகா தைலம், சந்தனாதி அகவல், கண்ணோய் மருந்து, கற்பூரக் குழம்பு, கணைக்கு நெய், கஷாயம், ரசமுறிவு, நீரடைப்பிற்கு, மணக்கத் தேவன் வித்தை, எரிகுன்மத்திற்கு மருந்து, முதலியன உள்ளன. கடைசி ஏடு பாதியாக முறிந்துள்ளது.

வரிசை எண் : 622. சுவடி எண் : 323 (a)

## அகத்தியர் 205

ஏடுகள்: 21. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10—11 வரிகள். அளவு: 32x4 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 1200. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றும்.

தொடக்கம் :

பூரணமா மும்மூலம் பொறியில்ச் சூடாம்
புகையெழும்பி மேகமதாம் சிரசில்ச் சூடாய்
காரணமாய் நீர்கலந்து கண்ணில் ரோகங்
கனவெழுந்த வாய்வுனுல்ச் சூலை ரோகம்
மாரணமாய் வாதத்தி லெழுந்த ரோக
மதியதொரு பித்தத்தில் கிராணி யாச்சுச்
தாரணமாய் வாயுவினுல்க் குற்ம மாச்சு
சார்ந்தசிலேற் பனங்கூடில்ச் சயம தாமே. -க

முடிவு :

சஞ்சீவி போலயிந்த நூலைச் சொன்னேம்
சண்டாளப் பயல்களுக்கு ஈய வேண்டாம்
* * * * * * * 203

ஈய்ந்திந்த நூல்த்துகைதான் இருநூற் றஞ்சு
இகத்துள்ளோர் பிளைக்கவென்று இரங்கிச் சொன்னேன்
தாயிருந்த பிள்ளைக்குத் தயக்க மில்லாத்
தன்மைபோ லின்னூலைச் சாற்றி னேனுன்.
நோய்மிகுந்து சாவில்லை யொருநா ளுந்தான்
நுண்மையாய்ச் சரக்கெல்லாம் நீற்றிக் கொண்டு
வாய்முட னெண்ணையொடு கிருதஞ் செய்து
வைய்த்திடுவா யனுப்பானம் வயித்திய முற்றே. -205

தெட்சணாமூர்த்தி துணை,
மைய்தீன் மாவுத்தன் கையெழுத்து
குருபாதமே கெதி.

குறிப்பு :

இது சுவடி எண்கள் 311-e, 317-k, 294-h, ஆகியவற்றின் பிரதியாகும்.

இதில் காரீயபற்பம், வைரபற்பம், நவரத்தினபற்பம், தங்கம் துரிசு, நிமிளை முதலான பற்பமுறைகள், செம்முள்ளி, இஞ்சி, அகில்கட்டை, அருகம்வேர்,

தைலம் முதலியவைகளும், கருஞ்சீரகத் தைலம் முதலானவைகளின் செய்முறைகளும் உள்ளன.

வரிசை எண் : **623**. சுவடி எண் : **323** (b)

## அகத்தியர் கர்மகாண்டம் 300

ஏடுகள்: *36 (22-57)*. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: *10—11* வரிகள். அளவு: *32x4* செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *2200*. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

பூரணமாய் மும்மூலப் பொறியிற் சூடாய்
புகையெழும்பி மேகமதாய்ச் சிரசிற் சூடாங்
காரணமாய் நீறேற்கும் பீனிசப் பேர் கொள்ளுங்
கனலெழுந்தே வாய்வுவதாங் கபால மெல்லாஞ்
சீரணமாய்ப் போகாது வாத பித்தஞ்
சிலேற்பனந்தான் மூன்றுலே நோய்க ளெல்லாஞ்
தாரணையாய்த் திசவாய்வில் மூன்று வாய்வு
சமானனெடு பிராணனெடு அபானந் தானே! -க

முடிவு :

சித்தியுண்டா மவுனத்தில்ச் செல்லு வோர்க்குத்
தெளிவான மனதுருமை யறிவி னேடு
புத்தியாய் நிலேத்தபின்பு பாவம் போச்சு
பஞ்சபொறி புலனுண்மை மறந்து தய்யா
புத்தியாய்ப் பிளேப்பதற்குச் சாகரத்தே செல்லு
புகளான மனவாசி வாயு வேகம்
முத்தியா மிருவினையு மற்ற தேசி
முதலான சொற்கபதம் முத்தி தானே. -ஙா

அகஷ்த்தீசர் கற்ம காண்ட சூஷ்த்திர முற்றும்
மையதீன் மாவுத்தன் கையட்சரம்
குருவே துணை.

குறிப்பு :

இதில் குன்மம் வந்த வரலாறு, மேகராஜாங்கத் தைலம், மதனகாமேஸ்வரம் அயக்கட்டு, நோய்கள் வந்த வரலாறுகள் கூறப்பட்டுள்ளன. இது சுவடி எண் 9 போன்றது. பாடபேதங்கள் உள்ளன.

வரிசை எண் : 624 சுவடி எண் : 323 (c)

## உதரக்கிரிகை வாகடம்

ஏடுகள்: 13 (58—70). ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 32X4 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 800. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஆதியாங் கடவு ளான யடியிணைப் பணிந்து போற்றித்
தீதறு வியாதி தன்னை தெளிவுட னறிய வேண்டில்
சோதிசேர் முனிவன் கூறுங் குணந்தொகு பாடல் தன்னை
நீதிசேர் படியின் மீதே நிகழ்த்தினர் முன்னோர் தாமே. -க

**முடிவு :**

இரத்த ரோக ரத்தசுரத் தோடு நோவு சூரையினில்
உரத்த வாயு வுத்திரட்சி யோடு உரையுங் கெற்பவிப்புருதி
வருத்தும் புணர்ச்சி வஞ்சனையும் மருந்தி னீடு மொன்பத்துள்
திருத்த மாக முன்னுன்குந் தீரா தயந்துந் தீருமென்றே
-உாசசு

உதரகிரிகை வாகட முகிந்தது முற்றும்
மையதின் மாவுத்தன் கையட்ஷரம்
குருபாதமே கெதி.

**குறிப்பு :**

இது சுவடி எண் 322-b- போன்றது. இதில் வாதசோகத்தின் (சோகையின்) குணம், சூரை குன்மத்தின்குணம், எரிகுன்மம், சுரபாண்டுவின் குணம், கெற்ப சூரைக் குணம், கெற்பவாயுவின் குணம், புணர்ச்சியின் குணம், வஞ்சனை மருந்தீட்டின் குணம் முதலானவை கூறப்பட்டுள்ளன. பின்னர், (71—76) 6 ஏடுகள் இல்லை.

வரிசை எண். 625. சுவடி எண். 323 (d)

## சூலை நிதானக் குணம்

ஏடுகள்: 13 (77—89). ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 32x4 செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 800. ஆசிரியர்: அகத்தியர். முழுமை; முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஆதியான் வகுத்து நால்வர்க்
கருளிச்செய் யாயிள்வேதத்
தேதிய சூலையீ ரொன்பா
னுறுபெயர் குணங்கள்
தீதறு சாத்தி யங்கள்
அசாத்தியஞ் செய்மருந்து
கோதையே யிவைக ளெல்லாங்
குறித்துநீ யறிந்து கொள்ளே. -க

**முடிவு :**

கொடுநீ கரண்டி மண்டலமுங்
கூறு மண்டம் பலசூலை
இடருங் குன்மம் குடல்வாய்வு
இரைக்கு மாமந் திரவாய்வுக்
கொடிதாஞ் சலப்பிற மேகமதாற்
கூறும் தொந்த சூலையெல்லாம்
பொடியாம் பக்க சூலையெல்லாம்
போகுமென்று புகழ்ந்தனரே. -கசரு

**குறிப்பு :**

வாதசூலை, பித்தபாண்டு, சூலைகுணம், பரங்கிப்பட்டை நெய், கபாலசூலை, கிரந்தி சூலைக்கு அகவகந்தாதி தைலம், கண்டங்காரி லேகியம், நீர்ச்சூலைக்குப் புகை, எலும்புச் சூலைக்குக் காந்தக் குளிகை, நரம்புச்சூலை குணம், அண்டசூலை குணம், அண்டவாயுசூலைக் குணம், அண்டசூலைக்கஷாயம் முதலியன இதில் உள்ளன.

---

வரிசை எண். 626. சுவடி எண். 323 (e)

## பதார்த்த குணம் முதலியன

ஏடுகள்: 3 (94—96). ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 32X4 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 200. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றும்.

**தொடக்கம் :**

லகிரியென்ற வஸ்துவெல்லாம் கசப்பதாகும்
லாடத்திற் பித்தத்தை யேற்றி விக்கும்

லகிரியென்ற வஸ்துவெல்லாஞ் சூடதாகும்
ஞூடாத கோசத்தை நாட்டி விக்கும்
லகிரியென்ற வஸ்துவெல்லாங் கடுப்பைத் தீர்க்கும்
நலமாக ஆனந்த மயமி தாமே. -க

முடிவு

கட்டுவது மாதவிடை காணு நேரங்
கணபதி முன்பாகவே கட்டி யேறு
நெட்டுவது நடுச்சாமந் தன்னில்ச் செய்வாய்
நிலைதப்பிச் செய்யாதே பசாசு வேளை
தெட்டுவது மப்படியே செய்யும் போதில்
திறமாக வுள்மருந்து செய்யக் கேளு
வெட்டுவது இல்லில்மேல் வொட்டு யெட்டி
யிசைவேரும் வெள்ளெருக்கம் வேருந் தானே -நக

குறிப்பு :

90-93 ஏடுகள் இல்லை. அறுசுவைகளின் குணம், லாகிரிப் பொருள்களின் குணம் வைத்தியர் லட்சணம், முதலியன இதில் உள்ளன. இதன் பின் 97-ம் ஏட்டில் பிரயாணத்திற்கு நாள் நட்சத்திரம் திதி சேர்க்கையும், 98-ம் ஏட்டில் கிராணிக்கு மருந்தும் உள்ளன.

வரிசை எண். 627. சுவடி எண். 323. (f)

## குதிரை வாடகம்

ஏடுகள்: 4 (99—102). ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 32 × 4. செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 250. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

செங்கழுநீர்ப் பாதிமதி யாலவட்டத்தேர்
தொட்டிகயல் வேதிவடி வாளவில்லு
சங்குக்கை கொடிக்கெவுரி மாலைகும்பந்
தனிக்கலப்பை தோரணமதிசும் பேரிந்து
கங்கைநீர் முகந்தகலசப் பானை புண்டரீகஞ்
சக்கரம் சக்கரத்தின் பாதி
துங்கமிந்திரன் வயச்சிரத்தி னோடு
சேர்ந்தேறு பல்வகைச் சுளிகள் சொல்லுகாலோ. -க

**முடிவு :**

குக்கல் நோயின் குணம்

கழுத்தை நீட்டி நாயிளைத்தாப்போலே யிளைக்கும், வாயாலே தண்ணீர் வடிந்து நிற்குமிதுக்கு மருந்து.

நாவொடிக்கிவேர், கள்ளிக்கோப்பு, சிறுமியுஞ் சவுக்காரமுகல்ச் சாரமும் வேப்பெண்ணை நாளி மரவெண்ணை நாளியும் நெய்நாளியும் இலுப்பை யெண்ணை நாளியு மிதுவெல்லாம் வேகவைத்துக் கவள மிடவும். விசாதி நாற்பதுக்கும் மருந்து.

**குறிப்பு :**

இதில் குதிரைச் சுழிசுத்தம், லட்சணம் பார்க்கிறது, இலத்த சூலை குணம், தலைச் சூலை, சயசூலை, கண்டனென்கிற சூலை, வவ்வை சூலை, கொக்குச் சூலை, கோதா வென்கிற சூலை, முதலானநோய்களும் மருந்துகளும் உள்ளன.

---

வரிசை எண். 628. சுவடி எண். 323. (g)

# தனிப்பாடற்றிரட்டு

ஏடுகள்: 3. (103—105). ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 32x4 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 200. ஆசிரியர்: பலர். முழுமை: முழுமை.

**தொடக்கம் :**

எள்ளுமோர் வகையு மில்லார் யிப்புவி தன்னி லேதான்
கொள்ளையோர் கோளி வாங்கி கோடிசம் பன்ன ராவார்
தெள்ளற விதிவந் துற்றால்த் தேடிய பொருளுந் தோத்து
வெள்ளரித் தோட்டங் காத்த வேதியன் கதைக்கு நேராம்.

**முடிவு :**

கதிர்க்குலைச் செந்நெல் வாடக் கார்க்குலங் கடந்து சென்று
கொதித்தெழு கடலிற் பெய்யுங் கொள்கையாந் தன்மை போலாம்
மதித்தலைக் குணங்கள் தாமும் மதியிலா தறிவினாலே
நிதிதனம் படைத்தோர்க் கல்லால் நிலையில்லார்க் கீய
மாட்டார். -௩௩

**குறிப்பு :**

இதில் 33 பாடல்கள் உள்ளன. சில அச்சான பாடல்களில் பாடவேறு பாடுகள் காணப்படுகின்றன.

வரிசை எண். 629. சுவடி எண். 323 (h)

## அகத்தியர் வாகட சூத்திரம் நூறு

ஏடுகள்: 9. (106—114). ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 32X4 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 600. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றும்.

**தொடக்கம் :**

பாகுடன் கிணேசன் பாதம் பணிந்துமுக் குணங்க ளாய
வாகடத் தொகுதி யெல்லாம் வகுத்துச்சூத் திரம தாக
ஆகம விதிநூ லாலே அடர்ந்திடும் நோய்கட் கெல்லாம்
போகவே மருந்து சொல்வோம் புலத்தியா புகழ்ந்து கேளே !

**முடிவு :**

பத்தியுட னிருவங்க மிப்படித்தா னுருக்கிப்
பாங்காகச் சாய்த்திடவே சுத்தி யாகும்
வெத்தியுறு வெள்ளைக்குச் சுத்தி சொல்வேன்
வெட்டடா மனம்போலே பொடியாய்த் தானே. -ııı

**குறிப்பு:**

எண் 3-a என்ற சுவடியில் 582 செய்யுட்களுள்ளன. அதிலும் இது வேறுபட்டது. முதற் செய்யுள் மட்டும் ஒன்ருக இருக்கிறது. 115-ம் ஏட்டில் விக்கலுக்கும், ஒரு தலைவலிக்கும் வைத்தியம் கூறப்பட்டுள்ளது. 116-ம் ஏட்டில் சிதம்பர சக்கரங்கள் உள்ளன.

வரிசைஎண். 630. சுவடி எண் 323 (i)

## அகத்தியர் வைத்தியம்

ஏடுகள்: 33 (117—149). ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 32X4 செ மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 2200 ஆசிரியர்; அகத்தியர். முழுமை: முற்றும்.

**தொடக்கம் ;**

பூதலத்தில் தென்பொதிகை தன்னில் வாழும்
பூரணமே யென்குருவே சிவமே அய்யா
மாதவத்தா லட்டசித்தி யெட்டும்.பெத்த
வரிசையினுல் வயித்தியநூல் வகையாய்ச் சொல்வேன்.

முடிவு :

சீலத்தின் நந்தியுடன் பூசை பண்ணு
செகண்டி ஞதவொலி மணியி னேசை
காலத்தின் கருவறிந்து பூசை செய்தால்
கைக்குள்ளாம் வயித்தியமுன் னூறு முற்றே. -நா

குமரன் துணை.

குறிப்பு :

இதில் காந்த சத்து. சுற்பூர சிலாஜித்து பற்பம், பொன்னிமிளைச் செந்தூரம் வங்கச் செந்தூரம், நவசிந்தாமணி லேகியம், ஆனந்தபைரவன் முதலானவைகள் உள்ளன.

இச் சுவடி 235-a-யின் மறுபிரதியாகும். பாடபேதங்கள் உள்ளன. எழுத்துக்கள் சுத்தமாக உள்ளன.

வரிசை எண். 631 சுவடி எண்: 323 (j)

## வைத்தியத் திரட்டு—வாகடம்

*ஏடுகள்: 3(150-152). ஏட்டின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 32X4 செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 600. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.*

தொடக்கம் :

மூலஞ்சேர் கரிகூட்டேன் மூத்த தயிர்பொசிப்பேன்
முதனாளில் சமைத்தகரி அமுதினிலு மருந்தேன்
பாலுண்பென் எண்ணெ பெறில் வென்னீரில் குளிப்பேன்
பகலுறங்கேன் பங்கயத்தான் மூத்த
ஏலஞ்சேர் குழலியரு மிளவெயிலும் வேண்டேன்
ரெண்டடக்கேன் ஒன்றுவிடேன் இடக்கைக்கீழ்ப் படுப்பேன்
ஞாலந்தா னளிந்திடனும் பசித்தொளிய வுண்ணேன்,
நமனாரு மணுகுவரோ நாமிருக்கு மிடத்தே. -1

முடிவு :

ஒளிக்கு மானைநெருஞ்சி யுயர்ந்தமாங்
கனியும் பாலை கலந்திடு சர்க்கரை
அளிக்கும்போது அகத்திடுமேகமே
துனுக்கு மெத்தச் சிகமிது காணுமே. ௩௬

குறிப்பு :

நோயற்ற வாழ்வு வாழ முன்கூட்டியே செய்யக் கூடிய நெறிமுறைகள் இந்த நடக்கை விதிகளில் உள்ளன. கையாந்தகரை நீர் கண்ணுக்கு, மூலவியாதிக்கு மருந்து, விக்கல் குணம், மருந்துகள், சிநேகப் பெட்டணம், பிளவைக்கு விளக்கம் முதலியன உள்ளன.

வரிசை எண். **632** சுவடி எண், **323 (d)**

## நயனவிதி சாத்திரம்

ஏடுகள்: (*153-160*) 8. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: *10-11* வரிகள். அளவு: *32 × 4* செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *1500*. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

மாதுமை பாகன் சொன்ன மாமறை முதல வாய
தீதுகள் வாரா வண்ணம் திருவிளத் தருளி னலே
வாதமா முனியு ரைத்த வாயுறு வேதந் தன்னைத்
தீதறு தமிழி னலே திடம்பட வுரைக்க லுற்றேன். -க

**முடிவு :**

(*158-ம் ஏட்டின் பின்புறம்*)

தாவுந் தலையில் புளிவாங்கிச் சீலை வடிகொண்டு
னேவும் பொடிசெய் திந்துப்பை யிட்டுக் காய்ச்சி யிதமானல்
மேவுந் துத்தந் துரிசுடனே விளங்கு தேனு முடன்கூட்டிக்
கூவுங் குயிலாய் கண்ணிலிடக் குந்தந் தீருங் கண்டீரே. -80

குருபாதமே கெதி.

**குறிப்பு :**

அகத்தியர் நயனவிதி 500 என்னும் சுவடியிலிருந்து எடுத்தது எனத் தெரிகிறது. கண்சம்பந்தமான நோய்களும் அதற்கான மருந்துகளும் உள்ளன. **159, 160**-ம் ஏட்டிலும் கண் நோய்க்கான மருந்துகள் உரை நடையில் கொடுக்கப்பட்டுள்ளன.

வரிசை எண். 633. சுவடி எண். 323 (l)

## பல திரட்டு வைத்தியம்

ஏடுகள்: (161-164) 4. ஏட்டின் நிலைமை: ஒடிந்தும் முறிந்தும் உள்ளன. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 32X4 செ. மீ. எழுத்து; தமிழ். கி. எண்ணிக்கை: 800. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை; முழுமையுமுளது.

**தொடக்கம்:**

கைப்பெல்லாம் பித்தம் வளையெவ்ளியக்கைப்
பூரத்தித்திப் பெல்லாஞ் சிலேற்பனமாந் ........
வாதமடா பூதலத்தில் நெல்லிக்கனி யெல்லா
மற்றதெல்லாங் காண் ........

**முடிவு:**

காக்காய் நாக்குங் கற்பூரமுந் தன்னிந்திரியமுங் கூட்டி உண்டை செய்து நிழலுலர்த்திச் சுண்ணாம்பில் கூட்டி வெத்திலையில் தடவிக் குடுக்க வருவாள். குடுக்கிறபோது மந்திரம்.

பாசி சிதறி பனிக்குடஞ் சிதறி மாசி நீங்கி மாணிடம் பிறந்தான் ஆவின் கிளே எம்மை வெருந்தாரின், முன் வர சுவாகா ... ... ... வெள்ளைக் குன்றிமணியைத் தேனிலுரைத்துத் தண்டில் தடவிப் புணரச் செலமுண்டாம்.

**குறிப்பு:**

இதில், யோனிச் சூலை, பெண்களுக்குப் புகை, உள்மூலம், புறமூலத்திற்கு மருந்து, விரியன் பாம்பிற்கு, தண்டு எழும்புவதற்கு, தலைமயிர் புழுவெட்டுக்கு, தடியடி படாமல் குடத்தில் தேங்காய் உடைக்க, மீன் தடுக்க, தண்டுக்கட்டு விட, அழைப்பிற்கு சத்தி வலுவிற்கு, மழைதடுக்க, அம்பு விலக, தனக்கு ஆகாதவளைத் தனக்குப் பிலத்துக்கு, யோனி அடைக்க, முதலான வைகளுள்ளன.

வரிசை எண். 634. சுவடி எண். 323 (m)

## கோரக்கர் கற்பமுறை

ஏடுகள்: (165–166) 2. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 32X4 செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 400. ஆசிரியர்: கோரக்கர். முழுமை; முற்றுமுளது.

**தொடக்கம் :**

கோரக்கர் மூலி குருவி னுபதேசம்
நேரொக்கக் கொண்டு நிலையறியா ரில்லை
நேரொக்கக் கொண்டு நிலையறி வார்க்கு
சீரொக்க நிற்குஞ் சிவபதந் தானே.

**முடிவு :**

இடைவார் நரகிலே எண்ணூளி காலம்
இடைவார் பிணியிலும் ரவிகுலந் தன்னிலும்
இடைவார் வெருமையில் இயல்லில்லா மூடராய்
மிடைவாய் நிசநிச மென்றனர் சித்தரே. -31

வாலையானந்த குருவே துணை.

**குறிப்பு :**

இதில் கோரக்கர் மூலி (கஞ்சா) லேகியஞ் செய்யும் முறையும் அதன் உபயோகங்களும் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண். 635. சுவடி எண். 323 (n)

## தன்வந்திரியார் (குருநாடி) பாடல்

ஏடுகள்: (167-174) 8. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டு முறிந்து உள்ளன. பக்கத்திற்கு: 10-11 வரிகள். அளவு: 32 × 4 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 1600. ஆசிரியர்: தன்வந்திரியார். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

தானுன நாடி நரம் பான செய்கை
தாரணியில் மானிடர்செய் தர்மகர்மம்
ஊனுன உடலுயிராய்த் தேக மான
உரையறிந்து உதித்துநின்ற உண்மைக் கியானம்.

**முடிவு :**

கடைசி 2 ஏடுகள் முறிந்துள்ளன. 98 செய்யுட்கள் உள்ளன.

**குறிப்பு :**

இதில் கொறப்பக் குறி, மலட்டுவகைக் குறிகள், அண்டவாயு வகைகள், வியாதிகளின் எண்ணிக்கை, இடகலை பிங்கலை சுழுமுனை குண்டலினி, தசநாடி வகைகள் முதலானவைகள் உள்ளன.

வரிசை எண் : 636 சுவடி எண் : 324 (a)

## கர்மானுயோக சூத்திரம் 302

ஏடுகள்: (51-52) 2. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 9 வரிகள். அளவு: 33 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 80. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: தொடக்கம் 50 ஏடுகள் இல்லை.

**தொடக்கம் :**

தானென்ற நாடிநிலை யறிய வேணுஞ்
 சடத்திலுள்ள நோய்குணங்கள் அறிய வேணும்
வானென்ற காலங்கள் அறிய வேணும்
 மருந்தினுட பதமறிந்து வைக்க வேணும்
 ... ... ... ...
 குணமாக நடந்தவனே குருபுத்திர னாமே. -209

**முடிவு :**

தெரிசனமாங் கண்களிலே வருவ தேது
 தீர்க்கமடா சிறுவருக்குத் தேவாமிர்தம்
சுரிசனமா மின்னூலின் கர்ம தர்மங்
 கட்டான மருந்துவகைக் கருள முற்றே. -302

குருவே துணை.
கர்ம வனுபோக சூத்திரம் 302.

**குறிப்பு :**

இது முழுது மின்மை 53 வது ஏடு கைமுறை வைத்தியம். இதில் இராத வயிற்று வலிக்கு மருந்து முதலியன உள்ளன.

வரிசை எண். 637. சுவடி எண். 324 (b)

## அகத்தியர் வைத்தியம் 150

ஏடுகள்: 6. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 9 வரிகள். அளவு: 33 × 3 செ. மீ, எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 300. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: குறைபாடுடையது.

தொடக்கம் :

சீரணி கொன்றை சூடு சிவனிரு பாதம் போற்றி
வாரண முகத்தோன் பாதம் வணங்கிநூற் றன்பது சொல்ல
பூரண வால ஞான சரசுவதி போற்றி போற்றி
காரண மான செஞ்சொல் கர்மசூத் திரங்காப் பாமே. -க

முடிவு :

சொன்னது துகைதான் நூறு அன்பது சூட்ச மாகு
முன்னமே சொன்ன நூலின் முக்கிய மின்னூல் சூட்சம்
பன்னமே பாரு லோகம் மாரண மதிக சூட்சம்
அன்னமே சொன்ன நூத்து மன்பது மறிவீர் முத்தே

குருபாதமே கெதி

குறிப்பு :

இதில் 54 முதல் 66 ஏடுமுடிய உள்ளதில் 57, 60—65 ஆகிய 7 ஏடுகள் இல்லை இதில் நாகக்கட்டு, சூடன் வைப்பு, லிங்க சுத்தி, பொன்னிமிளை சுத்தி, காரீய பற்பம், தங்கச் செந்தூரம், உள்ளி லேகியம், கடுக்காய் லேகியம், நேர்வாள சுத்தி, ஆமலக லேகியம், ஓம லேகியம் முதலியவை உள்ளன.

இது சுவடி எண் 269-bன் மறுபிரதி. பாடபேதங்கள் உள்ளன. அச் சுவடியில் முதல் 32 செய்யுட்கள் காண வில்லை.

இதனை அடுத்து 67—71 வரை ஏடுகள் இல்லை.

வரிசை எண் : 638 சுவடி எண் : 324 (c)

## அகத்தியர் வைத்தியம் 36

ஏடுகள்: (72-77) 6. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 9 வரிகள். அளவு: 33X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 700. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

பாரப்பா செம்பினுட வெள்ளை சேகனும்
பரிவான தாம்பிரத்தைக குகையில் வைய்த்து
சேரப்பா பதினாறு பலமே போடு
சேந்துருகும் போதினிலே மருந்து கேளு

முடிவு :

வாமப்பா யிருந்திடவே மருந்தெல்லாம் வைத்தால்
வயித்தியன்பே ருரைக்கில்முன்னே னேய்க ளோடும்
தாமப்பா யெட்டுரெண்டு மிருபத் தஞ்சுந்
தடையாலே உருவோச் சித்தி யாமே. -36

தெஷ்சணாமூர்த்தி துணை.

குறிப்பு :

லோக வெள்ளை, தங்க வெள்ளை, தாமிரபற்பம், அயபற்பம் முதலானவைகள் இதில் உள்ளன. இந்நூல், சுவடி எண் 15-b-ன் மறு பிரதியாகும். பாடபேதங்கள் உள்ளன.

வரிசை எண். 639 சுவடி எண். 324 (d)

# அகத்தியர் பூனீறு வித்தை 50

ஏடுகள்: (78-84) 6. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 9 வரிகள். அளவு: 33 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 700. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: குறைபாடுடையது.

தொடக்கம் :

மயமான முப்பூவின் மார்க்கந் தன்னை
வயித்தியம தாக்கியே விரித்துச் சொல்லச்
செயமான கணபதியுங் கந்தன் றானுஞ்
சிவனுடனே பார்வதியும் நிறுவாணி தானும்
நயமாக யெப்போது முன்னே நின்று
நாடறிய முப்பூவை நயந்து கேள்க்க
வயமாகச் சொல்லுகிறேன் அன்ப துக்குள்
வயித்தியரே யெப்போதும் வணங்கிக் கேளே. -1

முடிவு :

வாச்சதொரு கரியுப்பை வாரிக் கொண்டு
மானிடர்கள் கூட்டுமுப்பு மாற்கங் கேளு
பாச்சிந்தப் படிப்படியே சுத்த சிலம் விட்டுப்
பரிவாகத் தெளிவிருத்து பத்துமுறை காச்சே. -50

தெஷ்சணாமூர்த்தி துணை.

குறிப்பு :

இதில் காந்த உருக்கினம், அப்பிரக உருக்கினம், அண்டத்தோடு உருக்கினம், சங்கு உருக்கினம், முதலானவைகள் உள்ளன.

79-வது ஏடு காணப்படவில்லை.

வரிசை எண். 640. சுவடி எண். 324. (e)

## இராமதேவர் சூத்திரம் 215.

ஏடுகள்: 17. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 9 வரிகள்.
அளவு: 33 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1500.
ஆசிரியர்: இராமதேவர். முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம்:**

ஆதியந்த மெய்நிறைந்த சோதி பாத
மகண்டபரி பூரணத்தி னறிவே கூட்டிப்
பாதியாய் முப்பொருளு மூன்று மொன்றாய்
பரவெளியாய் நின்றபரா பரையின் பாதம்

**முடிவு:**

செய்யாதே தீவினைதான் கொடிது பாவஞ்
செந்துவெல்லா மீசனென்று தெளிந்து காணு
மெய்யான குருபதத்தைப் பணிந்து போற்றி
விளம்பினேன் பலதிரட்டுச் சூத்தி ரந்தான்.

தெஷ்சணு மூர்த்தி துணை.

**குறிப்பு:**

இதில் வெடியுப்புச் சயநீர், சூதக்கட்டு, காந்தக் கிண்ணி, கல்லுப்புத் தைலம், துருசுச் சுன்னம், தாளகச் சுன்னம், கெந்தக மெழுகு, பாஷாண மெழுகு, அய முருக்க வகை முதலியன உள்ளன.

இடையிடையே ஏடுகள் இல்லை.

---

வரிசை எண். 641. சுவடி எண். 324 (f)

## அகத்தியர் பூரண சூத்திரம் 216

ஏடுகள்: 25. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 9வரிகள்.
அளவு: 33x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 2500.
ஆசிரியர்: அகத்தியர். முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம்:**

கார்செரி மெய்யன் வெண்மை கடவுளுங் காணுப் பாதம்
போர்பொரு ளுண்மை தன்னைப் பூரண நூலி லோதத்
தார்செரி கொன்றை சூடித் தாய்சர சோதி கந்த
னூர்மத வனைப்பின் னையார் பாதங் காப்ப தாமே. -1

முடிவு :

தாமிந்தச் சூத்திரத்தைக் கொணிய தீந்தால்
  தலைதெரித்துப் போகுமடா சத்தியஞ் சொன்னேன்.
நாமிந்தப் படிசொன்னேன் யோகிக் கீய்வாய்
  நலமான பூரணசூத் திரந்தான் முற்றே. -216

குறிப்பு ;

இதில் சுப்பிரமணிய தியானம், கற்பமுறை, தெரிசனம், அமிர்தம், கொள்ளப் பாகம், அஞ்சனம், தனம்கிடைக்கும் தலங்கள், சித்தர் சாபம், குழிக்கல் விபரம், சீஷன் லட்சணம், முதலானவைகள் உள்ளன.

இடையிடையே ஏடுகள் இல்லை. இது 288-f சுவடியின் மறு பிரதியாகும். கூடிய வரை சுத்தப்பிரதியாகும்.

இதன்பின் நவக்கிரகம் அடைக்கிறது, கிரகம் அடைக்கிறது என்ற தலைப்புள்ள ஒரு ஏடு காணப்படுகிறது. இது முற்றுற்றது.

---

வரிசை எண். 642. சுவடி எண். 324 (g)

## அகத்தியர் ஞானத்திரட்டு 100

ஏடுகள்: *13.* ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: *9*வரிகள். அளவு: *33 × 3* செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: *500.* ஆசிரியர்: அகத்தியர். முழுமை: குறைபாடுடையது.

தொடக்கம்:

அந்து கரத்தனை யானை முகத்தனை
யிந்து யிளம்பிரை போலு மெயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தனைப்
புத்தியில் வைத்தடி பொத்துகின் றெனே. -1

பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
  பூமியென்றுந் திகிரியென் றும் படைத்த வாறும்
காரணமாய்த் தேவியெங்கும் நிறைந்த வாரும்
  கற்பமுண்ட ரிசிகள்சா காத வாரு

முடிவு :

வெளியோடே வெளிசேரும் நீறுந் தண்ணீர்
  விதமான அப்புடனே சேர்ந்து போகும்
உத்தமனே மண்ணுடனே மண்ணுஞ் சேரு
  மணியாத வாய்வுலே வாய்வுஞ் சேரும்

அஞ்சுமொன்றாய்க் கூட்டினால் ஆத்துமா வாகும்
வெளியோட யிவ்வண்ண மரிந்து கொண்டு
மானிடரெடினால் ஆத்துமா வாகுங்
காயசித்தி ஞானசித்தி முத்தே. -100

தெஷ்சணா மூர்த்தி துணை.

குறிப்பு :

இதில் பதினென் சித்தர்கள் பெயர், கும்பிடு சிப்பிச் சுண்ணம், பிண்டப் பெருமை, வெள்ளைக்கல் சுன்னம், தங்கநீறு, மணி, வாலை மூன்றெழுத்து, குறு முனிக் குருபூசை, முதலான ரசவாதத்திற்கான மருந்துகள் உள்ளன.

வரிசை எண். 643 சுவடி எண். 324 (h)

# சுந்தரானந்தர் பூசைவிதி முப்பத்தாறு

ஏடுகள்: 4. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 9 வரிகள். அளவு: 33x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 160. ஆசிரியர்: சுந்தரானந்தர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம்:

ஆதிபரா பரையான மூல ஞயன்
ஆறுமுகம் பாதத்தை அன்பாய்ப் போற்றி
வீதிநடு வீதிதனில் நின்ற சோதி
விளங்கிநின்ற சரசுபதியாள் பாதம் போற்றி

முடிவு :

நாளடா வஷ்த்துவுட சாய மக்கி
நன்றாக வுன்கரத்தில் வாங்கிக் கொண்டு
மூளடா வாலையுட மந்தி ரத்தை
யுன்னிமுன் குருஆக்கிருந்து பின்வாலைக்கீ

குறிப்பு :

இதில் 26 செய்யுட்களே உள்ளன. அதிலும் பிழைகள் மலிந்துள்ளன.

இதன் பின் 195-வது ஏடு கூருரார் பூசா விதியின் கடைசிப் பக்கம் உள்ளது.

வரிசை எண். 641 சுவடி எண். 324 (i)

## அகத்தியர் வாத சூத்திரம் 202

ஏடுகள்: 22. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 9-10 வரிகள். அளவு: 33x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 900. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம்:**

(முதல் 52 செய்யுட்கள் இல்லை)

காணப்பா சரக்குளிரு பத்தி னுலுந்
தனித்தனியே மேனுகாக் களஞ்சி விதம்
பூணப்பா வில்லைதட்டி கல்வைத் திட்டுப்
புதுமையாய்ப் பாதாளந் தன்னில் வைத்து

**முடிவு:**

சந்திரனு ரவியொன்றுய் முடிக்க வேணுஞ்
சராசரத்தி நீர்தலையே காண வேணுங்
கொந்தான பூரணமே சார மாகுங்
கூடுகின்ற ரவிகோடா கோடி முத்தே. -202

தெஷ்ட்ணுமூர்த்தி துணை.

**குறிப்பு:**

இது வாத நூலாகும். இதில் கெந்தகம் பாஷாணக் கட்டுகள் அரிதார வங்கம், காந்த வங்கம், பாஷாண வங்கம், வழலை எண்ணெய் வாங்க, துருசுச் சுண்ணம், கோசபீசக் குரு, கற்பம் கொள்ளத் தங்கபற்பம், முதலான பல மருந்துகள் உள்ளன. இடையிடையே ஏடுகள் இல்லை.

****

வரிசை எண். 645 சுவடி எண். 324 (j)

## கொங்கணர் தீட்சை (இது பொருளடக்கம் ஏட்டில் குறிப்பிட்ட பெயர்)

ஏடுகள்: 6. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8—9 வரிகள். அளவு: 33x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 250. ஆசிரியர்: கொங்கணர். முழுமை: குறைபாடுடையது.

தொடக்கம் :

(முதல் 28 செய்யுட்களில்லை)

......... .........னத்தானும்
பளங்கனிந்து ரசினைகொண்ட பாங்கு போலே
பரமகுரு வாசானைப் பணிந்து கேளு
களங்கமறப் பன்னிரண்டு வருசஞ் சென்றால்க்
கருத்தரிந்து சோதித்துச் தீட்சை வைப்பார்
வளம்பெறவே சிவதீட்சை சத்தி தீட்சை
வகுத்துரைப்பா ராதார மாறுந் தானே. -29

முடிவு :

கள்ளமென்றுந் திரியாதே தீட்சை மாற்கங்
கயிலாசத் தேகுடியா யிருக்கப் பண்ணும்
வெள்ளென மனங்கண்டா ......... .........

குறிப்பு :

சுவடி எண் 234-b-ஐப் பார்க்கவும். இந்தச் சுவடிக்குப் பெயர், 'கொங்கண நாயனர் சுவாமி கடைக்கண்ட சூத்திர தீட்சாவிதி'' என்பதாகும். நூல் முழுவதும் உளது.

இதன்பின் 4 உதிரி ஏடுகள் உள்ளன,

---

வரிசை எண். 646. சுவடி எண். 325.

## மச்சமுனி நாயனர் 800.

ஏடுகள் : 66. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு: 6—8 வரிகள். அளவு: 36x3½ செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 2000. ஆசிரியர்: மச்சமுனி. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

ஆதிபரந் பாதத்தை யாம — — — —
நீதியில் வேதம் நிராமய மானது
சோதியில் நாதந் துலங்குஞ் சுடரொளி
சாதியில் நந்தி தன்ம்பதங் காப்பே. 1

முடிவு :

துலங்கு மெண்ணூறு சுடரொளி கண்டவன்
களங்கங் கண்டு கற்பூர தீபம்போல் . . . .

(வி)ளங்கிய யோகம் விரும்பி மனது
இலங்கிய வாசி யேகாந்த முற்றுமே. -802

மச்சமுனி யருளியச் செய்த எண்ணூறு முற்றும்.

குருவே துணை.

— — — லஞசாரி மகன் ஆனந்த வடுகஞசாரி மச்யமுனி எண்ணூறு முத்தும்.

குறிப்பு:

இதில் பேதமறிய, அயன் புலன், சிவசக்தி, நிர்மலதேகம், அகத்தியர் தரிசனம், முப்புக் குருமுறை முதலியன உள்ளன. 52-வது ஏடு புதிதாக எழுதிக் கோக்கப் பட்டுளது.

இதன் பின் 8 உதிரி ஏடுகள் காணப்படுகின்றன.

வரிசை எண். 647. சுவடி எண்: 326.

## தட்சிணாமூர்த்தி யோகாண்டம் 1200.

ஏடுகள்: 52. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 10—11 வரிகள். அளவு: 28X4 செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 1500. ஆசிரியர்: தட்சிணாமூர்த்தி. முழுமை: குறைபாடுடையது.

தொடக்கம்:

ஆகமுடன் சிரசதிலே வனல்தான் மீறி
அப்பான நீர்பனைத்து வலியுண் டாச்சுப்
பாகமுடன் அன்னீர்தான் தசையில்ச் சேர்ந்து
பக்குவமாய்ச் சூடுகொண்டால்ச் சுரங்க ளாச்சு.

முடிவு:

முற்றுமே பூரணமு மயமு முற்று
முதண்டக் கயிலேமுனி கும்பமுனி நானே
முற்றுமே ஒருகாண்ட மாறிரு நூறு
முகிந்திடவே ஆயிரத் திருநூறு முற்றே. -1200

முகிந்தது முற்றும்.

தெட்ஷ்ண மூற்தி அருளிச் செய்த யோகாண்டம் ஆயிரத்திருநூறு முற்றும்.

**காலம் :**

1003 க்கு மார்கழி மீ 9ந் தேதி மந்த வார நாள் சீதாஸ முதலியார் எழுதின சுவடி. நீடுளி காலம் வாள்க. தெட்ஷணாமூற்தி கிருபா கடாட்ஷ முண்டாக வேணும்.

**குறிப்பு :**

இதில் வியாதியின் குணம், சகல சுரத்திற்கும் மருந்து முதலியன உள்ளன. இடையிடையே ஏடுகள் இல்லை. முதலில் 146 ஏடுகள் இல்லை.

வரிசை எண். 648. சுவடி எண் : 327.

## வாதம், ஜலம்.

ஏடுகள்: 42. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: 29X2½ செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 600. ஆசிரியர்: தெரியவில்லை. முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம் :**

வேதையது களங்கமா யுருகா நின்றால்
வேதைக்குத் தடவி விடு — — — —
பாதையது யுருகிவிடும் பிறர்கா ணுமல்ப்
பணம் பிறவே செய்து விப்பாய்

**முடிவு :**

பொதிந்துமே காய்ந்துமண்ஞ் சீலை செய்து
புடம்போடச் சுண்ணமடா யென்ன சொல்வேன்
னெதிரந் தகரைக் கண்டா தன்ன மேறினலு
மேதுசெய்வாய் வகைவிபரந் தெரியா விட்டால்க்
கதிந்துமே வொன்றைத்தான — — —

**குறிப்பு :**

இதில் வெடியுப்பு வித்தை, துருசு நீறு, பொரிகவிக்கட்டு, கெந்தக தைலம், நாகக்கட்டு, ரசக்கட்டு, நாகப் பதங்கம், ரசசுத்தி, அரப்பொடிச் செம்பு முதலியன உள்ளன.

வரிசை எண். 649. சுவடி எண். 328.

## வாத முறைகள்.

ஏடுகள்: 30. ஏட்டின் நிலைமை: ஒடிந்தும் முறிந்தும் உள்ளன. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 29X3 செ. மீ. எழுத்து; தமிழ். கி.எண்ணிக்கை: 450. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம் :**

ஊழிக்காத்து.

உரக்கவிதி யற்றவற்குச் சாவோ யில்லை
ஊழிக்காத் தின்விசையுஞ் கொல்லா தப்பா ... ... ...
யோகிகள்க்குஞ் சிவபத்த ரான வர்க்கும்
வெட்டி லொன்று அரக்கெடு
நிந்தினைக ளான பேற்கு ... ... ... ...

**முடிவு :**

வாமப்பா பச்சப்பாம் பாகுமய்யா
வளமான அவன ... ... ...லெயுருவிப் போடு
நாமப்பா செச்சருக்கி போட்டா யானல்
நவமான செங்குளவிக் கருங்குளவி யாகும்
காமப்பா யிம்மொழியே ... ... ... ... ...

**குறிப்பு :**

ஏடுகள் சீராக இல்லை, செய்யுட்களும் முறைதவறி இருக்கின்றன. இதில ஊழிக்காத்து, நாகக்கட்டு, இரும்பு, செம்பு, சௌவீரச் செந்தூரம், துருசுநீறு முதலியன உள்ளன.

வரிசை எண். 650. சுவடி எண். 329.

## அனுபோக வைத்திய முறைகள்

ஏடுகள்: 41. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: 36X2½ செ. மீ. எழுத்து: தமிழ். கி,எண்ணிக்கை: 600. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றறது.

தொடக்கம் :

வெள்ளைக்கு தயிலம்,

மாட்டு எலும்பு இடித்தது பலம் 20. குதிரை எலும்பு இடித்தது பலம் 20, ஆட்டு எலும்பு இடித்தது பலம் 20. ஆக யிந்த மூன்று வகையும் இடித்ததை ஒரு பானையில் போட்டு, கீழே குழிவெட்டி அந்தக் குழியில் நடுவில் சிறுகுழி வெட்டி அதுக்குள்ளே கலையும் வைத்து,

முடிவு :

எட்டா நாள் திரந்து பார்க்கவும், அப்பால் எடு .........
பச்சைத் தண்ணீர் விட்டு அலம்பிப் போட்டு வெய்யிலில் காய வைக்கவும். துருசு.........காாமாம்.

குறிப்பு :

இதில் லிங்கமாத்திரை, சூலைக்கரப்பானுக்கு எண்ணெய். கண்ணுக்குமை, பூரணலேகியம், பிள்ளையில்லாத பேருக்கு வங்கபற்பம், இருமலுக்கு திரிப் புகை, சடைப்பெருமாள் குருக்கள், சீனப்புகை, கிராணிக்குத் தாடிமாதளைச் சூரணம், சவுரியார் குழம்பு, பேதிமாத்திரை முதலான பல உள்ளன. இடையிடையே ஏடுகள் இல்லை.

வரிசை எண் : 651. சுவடி எண் : 330 (a)

## வைத்தியம் பல முறை

ஏடுகள்: 12. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 20 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 250. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

முறிதார் சிங்கி, கழிதோலண்டி, நாபிசுத்தி, தொண்டி பாசாணம், துருசுச் சுண்ணம்,

க்கிய சாறு மத்தி சித்திரமூலிச் சாறு சேர்த்தரை திரிபலாதி வத்திய கிசாயந்தன் ... ... ...

முடிவு :

கும்மட்டிக்காய்ச் சாறு விட்டரைத்து முக்கால்படி நல்லெண்ணையில் போட்டு ... ... ... பதத்திலே வடித்து முழுக மேகம் 20 நயன ரோகம் பீனிசம் யிவை தீரும். குமரன் துணே.

**குறிப்பு :**

இதில் மிருதார் சிங்கு, துரிசு, தொண்டி தொட்டிப்பாஷாணம், மடல்துருசு சர்வவிஷத்துக்கும் அஞ்சனம், க்ஷயத்துக்கு நெய், வாயுவிற்கு தைலம், முலைப் பால் சுரக்க, கெந்தகச் செம்பு, நவனீதவெண்ணெய், சுரகுளிகை, குற்றால நாதர் நிலவாகைப் பொடி, இருமல் ஈளை தலையிடிக்கு, சொர்ண தாளீசபத்திரி, மேகத் திற்கு இருதம், ஆகியவை உள்ளன.

---

வரிசை எண். 652. சுவடி எண். 330. (b)

## அகத்தியர் சூத்திரம் 50 (வயித்தியக் குரு நூல்)

ஏடுகள்: 9. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 20X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 200. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

வானும் புவியுந் தீயும் கதிரொளியுந்
தேனுந் தெளிந்த சிவகுருவைத் — தேனுந்தா
ஞல்மறையு மாராய்ந்து நன்னூ லன்பதையுங்
கோலமுடன் கணேசனருள் கூறு.

**முடிவு :**

சேலான திருவுடைய செல்வ னைவான்
சிந்தையிலே களங்கமற்றுச் சித்த னைவான்
நாலான மணிபோத்தும் பிருமன் சொன்ன
நலமுடைய குருமுனிவன் நாடி முற்றும். 50

(குரு முன் நிற்க

**குறிப்பு :**

இதில் இரசவாதத்திற்குரிய கல்லுப்புச் சுன்னம், கருப்பச்சை உருக, இரும்பு உருக, பவளச் சுன்னம் முதலானவைகள் உள்ளன.

---

வரிசை எண். 653 சுவடி எண் 330 (c)

## அகத்தியர் மூர்த்தி சூத்திரம்

ஏடுகள்: 16. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு; 10 வரிகள். அளவு: 20 X 3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 400. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

சீரணி கொன்றை சூடும் சிவனிரு பாதம் போற்றி
வாரண முகத்தோன் பாதம் வணங்கியே நூல் தன்பதுஞ் சொல்ல
பூரணை வாலை ஞான சரசோதி பாதம் போற்றிக்
காரண மான செஞ்சொற் கர்மசூத் திரங்காப் பாமே.

முடிவு :

சொன்னது வகைதா னூறு மன்பதுஞ் சூட்ச மாகு
முன்னமே சொன்ன நூலின் முக்கிய மின்னூல் சூட்சம்
மன்னமே பாரு லோக மாரண மதிக சூட்ச
மன்னமே னூற்றன்பது மதிகமாஞ் சூட்சந் தானே. -151

அகத்திய சூத்திரம் முடிந்தது முற்றும்.

குமரகுருபரன் துணை.

அகத்திய சுவாமி திருவடி வாழ்க.

குறிப்பு :

இதில் வீர சுத்தி, பூரம், வெள்ளைப் பாஷாண சுத்தி, சிலாஜித் கல்நார், கருடப் பச்சை, ஊசிகாந்தம், குந்துருக்கம், வெங்காரம், கெந்தி ரசம், தாமிரம், காரீயம், இவைகளின் சுத்தி, நெல்லிக்காய் லேகியம், பூசனிக்காய் லேகியம், சுக்கு திப்பிலி லேகியம், கடுகு லேகியம், உளுவை லேகியம், பத்தியம், கறி, சைவன், அசைவன் முதலியவைகள் உள்ளன.

சுவடி எண் 269-b, 324-c இவைகளையும் பார்க்கவும்.

வரிசை எண். 654 சுவடி எண். 331

## வைத்தியம் பலமுறை

ஏடுகள்: 30. ஏட்டின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 6—11 வரிகள். அளவு: பலஅளவுகள். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1300. ஆசிரியர்: பிரமமுனி முதலானவர்கள். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

புழுவெட்டுக்கு, தலைமயிர் உதிர்தலுக்கு

பழந்தின்னி வெளவால் கொண்டுவந்து தேங்காயெண்ணெயிற் போட்டுக் காச்சி மெழுகு பதத்திலிறக்கி தலையில் நூற்பது நாள் பூசவும். புழுவெட்டுத் தலைமயிர் உதிர்தல் நீங்கி ரோம முளைக்கும்,

முடிவு :

வைத்தபடி கண்டங்கத்திரியினுப்பும்
வாகான நொச்சியுப்பும் விராலியுப்புத்
துத்தியுப்பு ... ... ...

குறிப்பு :

இதில் 4 சுவடிகளிலிருந்தும் உதிர்ந்த ஏடுகள் உள்ளன. பலவித நீள அகலத்தில் உள்ளன. ஒரு ஏட்டில், 'பிரமமுனி அருளிய கருக்கடைச் சூத்திரம் 400' என்றுளது. வாதம் எண்பதுக்கும் தைலம், செவிட்டுக்குத் தைலம் முதலானவைகள் உள்ளன. சாமுத்ரிகாலட்சணம் எழுதப்பட்ட ஏடுகள் 4 உள்ளன.

---

வரிசை எண். 655 சுவடி எண். 332

## வைத்தியம் பல முறை

ஏடுகள்: 21. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 9 வரிகள். அளவு: $22\frac{1}{2} \times 3$ செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 700. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

வாக்குண்டாம் நல்ல மனதுண்டாம் வாள் மலராள்
நோக்குண்டா மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பா திருமேனி தும்பிக்கை யான்பா தம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

முடிவு :

இந்த மருந்தெல்லாம் இளவறுப்பாக வறுத்து, அந்தக்காய்க் குள்ளே அடைத்துச் சீலைமண் செய்து காய் கறுகாமல் குக்குடபுடம் போட்டு எடுத்துக் கொண்டு

குறிப்பு :

இதில் பீனிசத்திற்கு எண்ணெய், நார்த்தங்காய் லேகியம், காந்தச் செந்தூரம் கலிங்காதி லேகியம், சந்தனாதி எண்ணெய் முதலியன உள்ளன.

****

வரிசை எண். 656 சுவடி எண் 333.

## வண்டுகடி சூட்டத்துக்கு மருந்து

ஏடுகள்: 3. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். அளவு: $22\frac{1}{2}$X$2\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 150. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

நீ(லி) வேர் கொட்டைப் பாக்களவு யரைத்தது ஒன்று, மூன்று பங்கு எருமை வெண்ணெய் கூட்டி உள்ளுக்குக் குடுக்கவும். மேலுக்கும் பூசவும்.

**முடிவு :**

ஓடாது வாசி யுறவாம் பராபரம்
நாடாத பூரண நாடுஞ் சிவகலை
தேடாது ஆசா பாசத்துக் குள்ளாய்
வாடாது சிந்தை மவு... ... ... ...

**குறிப்பு :**

சட்டை முனியார் சூத்திரமாக இருக்கலாம் எனக் கருத இடமிருக்கிறது. சுவடி அறியக்கூடவில்லை, 2-வது ஏட்டில் 93-99 வரை செய்யுட்கள் உள்ளன. 3 வதில் 20—29 வரை செய்யுட்கள் உள்ளன.

வரிசை எண். 657 சுவடி எண். 334

## வைத்தியம் பல முறை

ஏடுகள்: 4+1. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 11—12 வரிகள். அளவு: 22x4 செ. மீ எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 100. ஆசிரியர்: (அகத்தியர் + சுந்தரானந்தர்). முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம் :**

ஆட்டினுல் பூரணத்தை யாட்ட வேணு
மதினுலே அம்பலத்தில் செல்ல வேணும்
மூட்டினுல் இடைபின்னுய் மூட்ட வேணும்
மூவுலகு நன்ருக முடிக்க வேணும்.

முடிவு :

ஓடுமே பூதத் துருவோ ரிடைகண்டு
நாடுமே பஞ்சி கரணப் பிரிவாகத்
தோடுமே கூட்டிச் செலுத்த நவலோகங்
கூடுமே வேதைக் குறித்தப்பு மில்லையே. -28

சுந்தரானந்தர் வாக்கியம் முற்றும்.

குறிப்பு :

இதில் அகத்தியர் பூசைவிதி 200-ன் கடைசி 2 ஏடுகள், 194-முதல் 200-வது செய்யுள்வரை 2 ஏடுகள் உள்ளன. சுந்தரானந்தர் வாக்கியம் 28-ல் கடைசி ஏடு உள்ளது. அகத்தியர் பூசாவிதி முற்றும். 19-a சுவடியில் உளது.

வரிசை எண். **658.** சுவடி எண். **335.** (a)

## அனுபவ வைத்திய அட்டவணை

ஏடுகள்: 33. ஏட்டின் நிலைமை: ஓரங்கள் முறிந்தும் பழுது பட்டும் உள்ளன. பக்கத்திற்கு: பலபடியாக வரிகள் உள்ளன. அளவு: பலவிதம். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 500. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: குறைபாடுடையது.

குறிப்பு :

பல வகையான ஏடுகளாதலால் சரிவர வைத்தியம் காணமுடியவில்லை. ஓரங்கள் எலிகடித்தும் முறிந்தும் உள்ளன. 6 ஏடுகள் சோதிடம் போல் தெரிகின்றன. வைத்திய முறைகள் சொல்லப்பட்டுள்ளன.

வரிசைஎண். **659.** சுவடி எண் **335** (b)

## கொங்கணர் திருவருள் — 16

ஏடுகள்: 4. ஏட்டின் நிலைமை: பாதிமுறிந்தவைகள். பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 18 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 70. ஆசிரியர்: கொங்கணர். முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம்:**

அரி என்னும் அட்சரத்துக் கர்த்த மேது
அந்தரங்க ஓமென்னு மருளங் கேது
... ... ... நாம மென்னும் பெருமை யேது
பேச்சரிய அவ்வென்னும் பொங்க மேது.

**முடிவு:**

திருவுரைத்த யின்னூலைப் பார்க்கலாஞ்
சிவயோகத் தவமுடைய தேக சித்தியாகி
பரவுகின்ற நாளிலொன்று ... ... ...
பாடியதோர் முதற்காண்ட முத்தே.

**குறிப்பு:**

காயசுத்தி செய்து கொள்ளும் யோக மார்க்கம் கூறப்பட்டுளது. பிற்பகுதி ஓடிந்துளதால் செய்யுள் சரியாக தோன்ற வில்லை. மையிடாத சுவடி.

---

வரிசை எண். **660** சுவடி எண். **336**

## சில்லரை வைத்தியம்

ஏடுகள்: 6. ஏட்டின் நிலைமை: மடிந்தும், ஓடிந்தும் உள்ளன. பக்கத்திற்கு: 5—6 வரிகள். அளவு: 15X3 செ மீ. எழுத்து; தமிழ். கி. எண்ணிக்கை: 75. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: குறைபாடுடையது.

**குறிப்பு:**

இதில் விஷ மைக்குப் பத்தியம், பேய்கள் பூராதிருக்க மந்திரம், மாடுகளுக்குத் தண்ணீர் செபித்துக் கொடுக்க மந்திரம், இவற்றுடன் இரண்டொரு மருந்து முறைகளும் உள்ளன.

---

வரிசை எண். **661** சுவடி எண். **337**

## அனுபவ வைத்திய முறைகளும் ரோக நிதானமும்

ஏடுகள்: 239. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 6—7 வரிகள். அளவு: 26X2½ செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 4000. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம் :**

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் நாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

குருவே துணை.

**முடிவு :**

சர்வ கிரகத்துக்குச் சக்கரமும், வாயாலெடுக்கிற பிள்ளைகளுக்குக் கட்ட சக்கரமும் உள்ளன.

**குறிப்பு :**

அனுபவ வைத்திய முறைகளுள்ளன, கண்ணுக்குச் சீலை மருந்து, வயிறு கடுப்பிற்கு மருந்து, சூரியப் பிரபை குளிகை குஷ்டம் தீர, வயிறு கழிச்சலுக்கு, சுர உருண்டை முதலியன உள்ளன.

---

வரிசை எண். **662** சுவடி எண். **338**

## வைத்தியம் பல முறை

ஏடுகள்: *15*. ஏட்டின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: *6—8* வரிகள். அளவு: *16X3* செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: *200*. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம் :**

கண்டா யத்தி சுரம்மட்டை கால்கையெரிவு காந்தல்லொடு
பண்டே யெழுந்த சூடுமுதல் பகைத்த இருமல் புகைச்சலொடு

**முடிவு :**

ரோமம் வளராமலிருக்குற பரட்டத் தலைக்காரருக்கு நன்றாய் வளரும். நரை மாறிப்போகும். கண் குளிர்ச்சையாயிருக்கும். இது கைகண்டது. தலைரோமம் ரெப்பக் குளவாய் வளரும்.

**குறிப்பு :**

இதில், காந்தல் எரிவுக்குச் செய்யுள், வாந்தி பித்தம், பிணிசச்தைலம் பாண்டு காமாலை, கருக்கு வாகையிலைத் தைலம் முதலானவை உள்ளன.

---

வரிசை எண். 663 சுவடி எண். 339

## வாத நூல் முதலியன

ஏடுகள்: 37. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 17x3 செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 500. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: குறைச் சுவடி.

**தொடக்கம்:**

சாயா விருக்ஷம், வாயிவு வாதம் வாதவைத்திய சாயுச்சிய
மெல்லாம் ஏத்தபடி கைக்குள் வந்து சிக்கும் பாறு
ராஜரிஷியென்று பேரெடுப்பார் பாரே. -619

**முடிவு:**

(34-வது ஏடு கடைசி)
பாதை காணுருது பாதை காணரிது
பாறு மூன்றுவிசை பாரைமேல் — — —
நாகம்பூநீர் புவிசொற்ணமாவது பிரதிவியே.

**குறிப்பு:**

22-வது ஏட்டில் சுப்பிரமணிய ஞானம், குமரிக்கற்பம் என்று காணப்படு கின்றது. கடைசி 4 ஏடுகளில் மூலத்திற்கு, புண்ணுக்குக் களிம்பு, பரங்கிச் சூலைக்கு உருண்டை, கோழிகற்பம் முதலானவைகளுள்ளன.

---

வரிசை எண். 664 சுவடி எண். 340

## அநுபவ வைத்திய அட்டவணை-நயன ரோகம்

ஏடுகள்: 44. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 5—7 வரிகள். அளவு: 17x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 600. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம்:**

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் வாள்மலர்தாள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பா திருமேனி தும்பிக்கையாள் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

கண்ணில் யெழுந்த வியாதி தொண்ணூற்றெட்டுக்கும் மருந்து. மிளகு, துத்தம், துரிசு, சயிந்துலாணம்,யிந்துப்பு, கடல்நுரை, மஞ்சள் துத்தநாசம், செம்பு, மனோசிலை, சாதிலிங்கம், கோளிமுட்டைத்தோடு கோரோசினை, செங்கழுநீர், கொட்டம், பீதுரோகணி, சீரகம் ஆக மருந்து 17-ம் சரி சமனா கொண்டு பொடிசெய்து ஏழு அரைப்பு அரைக்கவும்.

முடிவு

பிள்ளைக்கு தோஷம் தட்டாதபடிக்கி மருந்து. சென்னுயுருவித் தூராடியில் நன்றாய் செதுக்கிப் போட்டு மூன்று சந்தியில் மூன்று — — —த்து வந்து நாயுருவித் — — —

குறிப்பு:

இதில் அனுபவ வைத்திய முறைகள் பல உள. நயனரோகம் கெர்ப்ப விப்புருதிக்கு, மலட்டுவலிக்கு, மலட்டுப் புழுவிற்கு, உள்க்காய்ச்சலுக்கு, விஷத்துக்கு, படர்தாமரைக்கு, வாய் வாதத்திற்கு, சேற்பன சுரத்திற்கு, பெரும்பாட்டிற்கு முதலியன உள்ளன. இடையிடையே ஏடுகள் இல்லை.

வரிசை எண். 665 சுவடி எண், 341 (a)

## நந்திசுவரர் நிகண்டு 300

ஏடுகள்: 34. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 9—11 வரிகள். அளவு: 27 × 4 செ. மீ. எழுத்து: தமிழ். கி எண்ணிக்கை: 1300. ஆசிரியர்: நந்தீசர். முழுமை: முற்றும்.

தொடக்கம் :

சுந்திரமான வடிவான சோதியைத் துலங்கு ரெற்றின
அந்தரமான சுழிமுனை மீதி லமர்ந்தகுரு
சுந்தனை யானை முகவனையீன்ற கடவுளரை
யெந்தனை யாண்டுகொண்டருளிய நாதனை யென்குருவே.
மூலமென்ற கணபதியின் பாதம் போற்றி
முத்திபெத்த சுளிமுனையின் முனைமேல் நின்று

முடிவு :

சித்திபெத்த கருவினுட சூட்சங் கண்டு
தெளிந்துமதி மாய்கைவிட்டுச் சிவமே யென்று
சத்திநின்ற யிடங்காணப் பெரும் பெற்றுச்
சகலவுயிர் தானவனாய் முத்தி யாமே. -307
நந்தீஷ்பர(த்தி)யா றருளிச் செய்த நிகண்டு நூல்
முற்றிற்று.

குறிப்பு ;

இதில் புத்தி சொல்ல, நந்தீசபரரூபம், ஹடயோக வாசிப் பழக்கம் சந்திர கர்ப்பம் அறிதல், போசன மெடுத்தல், ஞானயோகம், கொடுமை யாளரைத்தள்ளல், கெங்காமிர்தக் குறிப்பு, ரவிமதி சேர்தல், ரவிமெழுகு, மெழுகு கொள்ளும் வகை, சந்திரன் மெழுகு, அட்டகருமம் முத்தரணி பூசை, வசியம் மோகனம், தசவித தீட்சை, சோதி நின்ற விடம், தேன்பூடு, பரிபாஷை யில் சொல்லு மென்றவை, பரிபாஷை மகத்துவம், நந்தி மகிமை, சுந்தக பற்பம், நூல் கொடுத்தோர்க்குச் சாபம், முப்பூவுக் கடையாளம், மறைப்பு, வசியம். மைக்குப் பூசை, முதலியவைகள் உள்ளன.

வரிசை எண். 666 சுவடி எண். 341 (b)

## நந்தீசர் நிகண்டு 300-க்குச் சுருக்கம்

ஏடுகள்: (35-37) 3. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10—11 வரிகள். அளவு: 27x4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 100. ஆசிரியர்: நந்தீசர். முழுமை: முற்றும்.

தொடக்கம் :

பூரண மான பொன்னடி மூலம்
காரண மான கணபதி பாதம்
சாரணை மேலாய்ச் சார்ந்திடஞ் சோதி
ஆரண தீத ரிஷிமுடி காப்பே. -1

காப்பது மீசன் கறுணையி னாலே
கூற்புடன் வாதங் குறிதெரிந் திடவே
சேற்பது வாதத் தெளிவுமுன் னூரறைப்
பாற்பவற் கல்லோ பலித்திடுஞ் சித்தியே. -2

முடிவு :

கோலமி தென்னுங் குருவிது னாலே
காலனு மில்லைக் கலியனு மில்லை
பாலனு மமுர்த பானமு முண்டாம்
மூல மிதுதான் முப்பது முற்றே. -33

நந்தீசுவர சுவாமியருளிய நிகண்டு 300 க்குச் சுருக்கம் 30, பாயிரங் காப்பு 3 ஆக துறை 33.

குறிப்பு :

இதில் முப்பூவின் அடயாளம் சவுக்காரவைப்பு முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண். 667. சுவடி எண். 341. (c)

## நந்தீசர் அருளிய காரச் சுருக்கம் 12

ஏடுகள்: *(38-39) 2.* ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: *10--11* வரிகள். அளவு: 27X4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *100.* ஆசிரியர்: நந்தீசர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

சீர் பெருகும் வேதாந்தத் துள்மூ லத்தின்
செயலறிந்து மனமடங்குந் துரிய வீட்டி
னீர்பெருகும் காரமறிந் துண்டு வாசி
னேரறிந்து நிரைசெலுத்தி முனையி லேறி

**முடிவு :**

மாவென்பாள் துரியமணி பூரத் துள்ளே
வந்தமந்த நாதசுத்த மவுன மூலம்
ஓலென்பா ளுகாரத்தி னொளியைப் பாரு
உத்தொடுங்கிப் பன்னிரண்டு மென்றாய் முற்றே. -12

நந்தீஸ்வர சுவாமியருளிச் செய்த காரச் சுருக்கம் பனிரெண்டு
முகிந்தது முற்றும்.

**குறிப்பு :**

இதில் வழலை, கார சாரச் சரக்குகள், பூநீர் விளையுமிடம், அது விளையும் மாதம், தீட்சை முறைகள் முதலியன உள்ளன.

---

வரிசை எண். 668 சுவடி எண். 342 (a)

## திருமூலர் திருமந்திர சூத்திரம்

ஏடுகள்: *13 (39-51).* ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: *12—13* வரிகள். அளவு: 26x4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: *700.* ஆசிரியர்: திருமூலர். முழுமை: முழுமை.

**தொடக்கம் :**

எண்ணு யிரத்தி விருநூறு மந்திரம்
... ... ... ... ... ...... ... ... ... ...
.................... சேர்பச்சை நீலம்
வண்ணு னறிவான் காரத் திறை........
* * * * * -1

தானென்ற கோச பீச மகிமை
நானென்று சொல்ல நாவெழும் பாது
பேனெனைக் குலைக்கும் புகழ்கிட்ட மாகும்
தேனென்ற மித்திரம் செய்திவிள் ளாதே. -70

முடிவு :

குருவான நந்தியென் னந்தி யப்பா
திருமூல ஞானெசெய் தொழில்சொன் னே(னே)
கருவூரான் கொங்கணன் போனி வர்கள்
திருபோக னென்செய்த தமிழடி யென்னே. -200

குருபாத முன்னிற்க. சர்குரு கிடாக்ஷமுண்டாக சரஸ்வதியே நம!.

குறிப்பு :

இதில் 64 சரக்குகளையும் கட்டும் விதம், துருசுச் செம்பு, லிங்கக் களங்கம்' கோசபீசம், அறுவகை நீர், வழலைக் குரு, வங்கக் களங்கம், அயச் செந்தூரம், முதலான ரசவாத மருந்துகளும், வல்லாரைக் கற்பமும் உள்ளன.

சுவடி எண் 40-ன் மறு பிரதியாகுமிது, "திருமூலர் 8000-ல் இருநூறு, வகாரத் திரையம்" என்ற பெயரில் இருக்கிறது.

---

வரிசை எண். 669 சுவடி எண். 342 (b)

## சுந்தரானந்தர் பாடல் சூத்திரம்

ஏடுகள்: 15. ஏட்டின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 12 வரிகள். அளவு: 26x4 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 1500. ஆசிரியர்: சுந்தரானந்தர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

ஆதியந்த மிகநிறைந்த சட்டை நாதர்க்
கன்பான சேயெனவே பிள்ளை யாகிச்
சோதியந்தத் துள்ளிருக்குஞ் சுட்டரைப் போற்றிச்
சுந்தரமென்றே பேருமிட்டார் எங்கள் நாதர்

முடிவு :

தானென்ற கற்பமழை யுண்ண வேணுஞ்
சாத்திரத்தைப் பாற்ருக்காற் செய்ய வேணுந்
தானென்ற எந்தன்னூ லாயிரத்தி நூறு
சாத்திரந்தா னிதுநூத்துப் பத்து முற்றே. -109

சுந்தரானந்தமூர்த்தி சூத்திர முற்றும்
சற்குரு கிடாக்ஷ முண்டாக
குருபாதமே கெதி.

குறிப்பு :

இதில் சிப்பிநீர், சிப்பிச் சுண்ணம், பூனீர் சுத்தி. அண்டத் தோடு, அண்டச் சுண்ணம், சிப்பிச் சதை முறிய முதலான ரசவாதத்திற்கான முறைகளுள்ளன.

சுவடி எண் 29-a, 29-b, போன்றது பாடபேதங்களுள்ளன.

வரிசை எண். 670 சுவடி எண்: 342 (c)

## சட்டமுனியார் நிகண்டு

ஏடுகள்: 70. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 12 வரிகள். அளவு: 26x4 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 3500. ஆசிரியர்: சட்டை முனியார். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

ஆதியந்த மில்லாத பூரணத்தை நோக்கி
அடுத்துநின்ற வுண்மனைத்தாய் பதத்தைப் போற்றி
பாதியந்த மாகநின்ற வுண்மையாள் சொல்ல
பாங்கான சின்மயத்தின் கருணை யாலே

முடிவு :

போக்கா மணவறுத்தம் புகழ்ந்திடு சத்தாக்கி
வாக்காக் (காசிடை) வளமாய் நிறுத்திடு
சூக்காக நாகந் தாவொரு காசிடை
நீக்காத சூதமு நேரொரு காசிடை -995

இட்டிடு தங்கம் இயல்பாய்ப் பணவிடை
மட்டிடு கெந்தகம் மாட்டு முக — — — —

குறிப்பு :

இதில் சரக்கு மூலிகையின் வேறு பெயர்களும் வாத வைத்திய முறைகளும் உள்ளன.

சுவடி எண் 26-c, 318-b இவைகளைப் போன்றது.

வரிசை எண். 671 சுவடி எண். 343 (a)

## நந்தி – 300

ஏடுகள்: 83. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 5—7 வரிகள். அளவு: 21x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை- 1300. ஆசிரியர்: நந்தீசர். முழுமை: குறைபாடுடையது.

தொடக்கம் :

(முதல் ஏடு இல்லை)

காப்பான ஐங்கரனைப் பணிந்து கொண்டு
கந்தன்வடி வேல்முருகன் கடாச்சத் தாலே
ஏப்பான ரிஷிமுனிவர் சித்தர் பாடல்
எல்லாரும் பாடியதோர் தமிழுக் கெல்லாந்
தாப்பான திறவுகோ லிந்த முன்னூர்
சாற்றினேன் புவிதனிலே மனிதற் காக
கோப்பான கருக்குருவும் பிசகா மல்தான்
கோர்வைகொண்ட மணிபோலே வகையாய்த் தானே -4

முடிவு :

சித்திபெற்றுக் கருவினுட சூட்சங் கண்டு
தெளிந்தமதி மாய்கைவிட்டுச் சிவமே யென்று
சத்திநின்ற விடங்காணப் பேரும் பெற்று
சகலவுயிர் தானவனாய் முற்றி யாமே. -306

நந்தி முன்னூர் யேழு நிறைந்தது முற்றிற்று.

குருபாதந் துணை.

குறிப்பு :

இதில் கெங்கையின் மூலம், ரோமன் சிங்கி, ரவிமதிபேர், அகாரம், உகாரம் அஷ்டகர்மம், மாரணம், அஞ்சனம், மந்திரம், ஆகர்ஷணம், மோகனம், உச்சாடனம், கற்பமெழுகு, ஜெயநீர் பெருமை, அழியாமலிருக்கக் கருவிபரம், மறைப்பு, கெந்தக பற்பம், கருக்கிடை முதலானவைகளுள்ளன.

---

வரிசை எண். 672 சுவடி எண். 343 (b)

## சுந்தரானந்தர் பலதிரட்டு

ஏடுகள்: 11. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 21×3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 180. ஆசிரியர்: சுந்தரானந்தர். முழுமை: முற்றும்.

தொடக்கம் :

ஆனந்த மாகிநின்ற ஆயி பாத
மையமென்ற கைலாச மூர்த்தி பாதந்
தானந்த மானகுரு முனிவன் பாதம்
சனகருடன் திருமூலர் கொங்கணவர் பாதம்
வானந்த மாகியதோர் போகர் பாதம்
வதிஷ்டர்முதன் முனிவோர்கள் பாதம் போற்றி
மோனந்த மானபல திரட்டைச் சொல்ல
மூலாதா ரத்திருந்த கிணேசன் காப்பே. -க

முடிவு :

தருணமுள்ள பூரகந்தான் ரெண்டு வாங்கு
சதானந்த பங்கும்பகமே நாலு கும்பி
கருமமுள்ள ரேசகத்தை யொன்றே ரேசி
கைமுறையாய்ச் சொன்னபடி கருதிச் செய்யே. -32

குறிப்பு :

இதில் அடித்தப்பு. நூல், ரேசக பூரக கும்பக யோகங்களைக் கூறும் நூல் (யோக சாத்திர முறைகள்) முதலியன உள்ளன.

வரிசை எண். 673. சுவடி எண். 344

## சட்டைமுனி நிகண்டு

ஏடுகள்: 105. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 9 வரிகள். அளவு: 31×3 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்தஎண்ணிக்கை: 5000. ஆசிரியர்: சட்டைமுனி. முழுமை: குறைபாடுடையது.

தொடக்கம் ;

— — — றைதொரு மண்ட ரென்ற மெல்லாம்
குறிகவிக்கும் நீட்டிவைக்கும் குறையொண் டில்லை
ஆட்டபின்பு வாதமென்ற பெண்ணைத் தொட்டு
அப்பனே உப்புமுத லெல்லாங் கட்டும்
நீட்டுபின்பு வாதவித்தைக் கிதுவே ஆதி
நேராக யிதைவிட்டால் வாதம் போச்சே. -5

முடிவு :

நாட்டினேன் செயவீரம் வராக வித்தை
நலமாக உப்பினுட உறுதி சொன்னேன்

பூட்டினேன் வாதத்தில் பூதஞ் சொன்னேன்
 புகழாக இருபத்து அஞ்சு அங்கம்
ஊட்டினேன் பலநூலு யில்லை யில்லை
 ஆச்சரியம் நிகண்டினுட துகையைக் கேளு
நீட்டினேன் ஆயிரத்திரு நூறு மேலே
 நேராக முப்பத்தி ரெண்டு முற்றே. -1232

எனையாண்ட தக்ஷிணாமூர்த்தி பாதமே கதியாக வேணும்
நிர்வாணி ஆத்தான் பாதமே கதி எனையாண்ட பதினெண்
நாயன்மார் பாதார விந்தமே கதியாக வேணும்.

**காலம் :**

விக்ருதி வருஷம் வைகாசி மீ 18உ வெள்ளிக் கிழமை சுக்கிர வாரம் மகநட்சத்திரத்தில் திதி சப்தமியில் ஆறுமுகம்பிள்ளை சட்டை முனியார் நிகண்டு எழுதி முடிந்தது முத்தும்.வேணும். மீனாட்சியம்மன் துணையாகவும்.

குறிப்பு :

இதில் வைத்திய சரக்குகளின் வேறு பெயர்கள் கூறப்பட்டிருக்கின்றன. முதல் ஏடு இல்லை. சுவடி எண் 26-c, 318-b, 324-c, இவைகளின் மறு பிரதியாகும் இது. அச்சாகியுள்ளது.

கடைசியில் ஒரு ஏட்டில் கிரந்தி புண்ணுக்கு "திருதிகை" என்ற முறை உள்ளது.

வரிசை எண். 674. சுவடி எண். 345.

## அகத்தியர் பதினாயிரக் காண்டத்தில் சர்ப்பராசன் மாத்திரை

ஏடுகள்: 12. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: $25\frac{1}{2} \times 3$ செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 400. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முழுமை.

**தொடக்கம் :**

சித்தநா யிருப்பதற்கு யின்னஙு் சொஞ்சஞ்
 செப்புகுறேன் மாத்திரையின் பேரு கேளு
அத்தனர் எனக்குரைத்தார் சர்ப்ப ராசன்
 அவனியிலே உனக்குரைத்தேன் மச்ச கேந்திரா

முடிவு :

வீணப்பா போகாதே விருது கட்டு
வித்தையிலே வயித்தியந்தான் மேன்மை யாயி
வேணப்பா சர்ப்பத்தின் ருச ஞன
மேன்மையுள்ள மாத்திரைதான் முடிவு முற்றே. -13

விக்னேசுவரர் துணை. சுப்பிரமணியர் துணை.
மனோன்மணி துணை. அகஸ்தியர் துணை.
மகாவிஷ்ணு துணை. நந்திகேசுவரர் துணை.

காலம் :

சித்திரபானு வருஷம் மார்கழி மீ சிரஞ்சீவி ராமசாமி என்ற நான் எழுதி முகிந்தது.

குறிப்பு :

சர்ப்பராசன் மாத்திரை செய்முறை உள்ளது.

வரிசை எண். 675 சுவடி எண். 346

## சில்லரை வைத்தியம்

ஏடுகள்: 7. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: $27 \times 3\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 150. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: இல்லை.

தொடக்கம் :

பர்வதம் தன்னில் வாழும் பரயஞ ரருளிஞலே
பெருமையாய் உலகில் வாழும் புண்ணிய சனங்களுக்கு

முடிவு :

அடுக்க வாந்தி யுன்ருனல்
ஆன வாகக் கசாயமதில்
நடுக்கம் பழச்சாறு கூட்டியுண்ண
நலமாம் வாந்தி கண்டீரே,

முற்றும்

குறிப்பு :

இதில், வாந்தி, கழிச்சலுக்கு மருந்து முறைகள் உள்ளன. தேள்கடிக்கு மருந்துளது.

வரிசை எண். 676 சுவடி எண். 347 (a)

## சட்ரச நிகண்டு

ஏடுகள்: 29. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 28X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 900. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம் :**

பூவார் சிரகிரியிர் பொன்னி வரவழைத்து
பாவா ரணமுகனை வாழ்த்தியே — நாவார
வாறுசுவை தேர்நிகண்டின் ஆரியத்தைச் செந்தமிழாற்
தேறுசுவை செய்தேன் தெறிந்து.

**முடிவு :**

ஓங்கார கண்டகமு மோதியிடு மாதண்டை
நீங்காத நற்குணத்தை நீகேளாய் — — — —

**குறிப்பு :**

பல் சுவைப் பொருள்களின் குணங்கள் கூறப்பட்டுள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இதில் | மதுரவர்க்கம் முற்றும் செய்யுட்கள் | 37 | ஏடு | 7. |
| | அம்லவர்க்கம் | ,, | 20 | ,, | 10 |
| | லவணவர்க்கம் | ,, | 36 | ,, | 17 |
| | உரப்புவர்க்கம் | ,, | 42 | ,, | 23 |
| | கசப்பு வர்க்கம் | ,, | 13 | | |
| | துவர்ப்பு வர்க்கம் | ,, | 83 வரையுள்ளன. | | |

சுவடி எண் 36B-b, 212-a, 214-b போன்றது.

---

வரிசை எண். 677 சுவடி எண். 347 (b)

## கொங்கணர் சோடச சூத்திரம் 40

ஏடுகள்: 7 (30-36). ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 28x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 200. ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றும்.

**தொடக்கம் :**

ஆயிரத் தஞ்ஞூத்திலேயறிந்தெடுத்த மந்திரம்
மாயிரத்து ளானபத்து மானநான்கு மொன்றிலே
தாயிரக்க மானசத்தி தான்றிந்து வாழ்வதோ
ராயிரத்து ளொன்று யவன்பொடி யாகுமே -1

முடிவு :

அறிகோச பீச வேதைச் சரக்கு
யறிய வல்லார்க்குப் பொன்காணு மப்பனே
குறியான மூலங் குலாவு மனத்தி
லறிவாய் சிவத்தி னடிச்சத்தி முத்தே. -41

கொங்கணர் சோடச சூத்திரம் முற்றும்.
குருநாதன் துணை. தேவி சகாயம்.
திருவையாறு சண்முகம் நெட்டெழுத்து.

குறிப்பு :

இதில் இரசவாதத்திற்கேற்ற வழலை சுன்னம், செந்தூர வகைகள் உள்ளன.

---

வரிசை எண். 678 சுவடி எண். 347 (c)

## கொங்கணர் சாமியார் காரசாரப் பெருமை

ஏடுகள்: 10 (37-46). ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 28x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 300. ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முழுமை.

தொடக்கம் :

என்றுமுன் சொன்னகார சாரத்தின் லவணங் கேளு
மன்றுயா காரம்வீரம் வழங்கிய சார முப்பு
குன்றுத லவணமார்க்கம் தனித்தநற் துரிசி யாகும்
ஒன்றுக்கு மூன்றின்பேரை கொளசியே மூன்றுங் கேளே. —க

முடிவு :

கட்டுஞ் சார காரத்தால் கலரும் வற்ண மிணியாலே
யெட்டி யோடும் தூரத்தே யிசைந்த உபரசத் தால்மாதே
கெட்டிப் புடமும் பறியாவே கேளாய் கெந்திச் செந்தூரம்
மட்டும் பிறையைத் தரித்தசிவன் வளந்த சிடலத் தெழுத்தஞ்சே. -47

குருநாதன் துணை. தேவி சகாயம்,
திருவையாத்திலிருக்கும் சண்முகம் கையெழுத்து.

குறிப்பு :

காரசாரக் குணம், சத்துரு மித்துருச் சரக்குகள் முதலானவை இதில் கூறப்பட்டு உள்ளன. இரசவாதச் சுவடி.

வரிசை எண். 679 சுவடி எண். 347 (d)

## புலத்தியர் வைத்தியம்

ஏடுகள்: 27(47-73). ஏட்டின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 28X3 செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 900. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முழுமையற்றது.

**தொடக்கம் :**

சொல்லுகிறேன் பொன்வெள்ளி இரும்பு செம்பு
தோருத காரீயம் வெள்ளீயம்
கொல்லுகிற மித்திரத்தின் வகைமையச் சேரு
கோமயமோர் காடியெண்ணெய் எருக்கம் பாலில்
நல்லதொரு பழச்சாறு காணச் சாற்றில்
நலமான பொன்முதலி ரண்டு தேய்க்க
வல்லரிய வங்கமொரு மூன்று தீயில்
வேகமுட னுருக்கியதில் சாய்க்க நன்றே. -1

**முடிவு :**

நாயுருவி முத்தினதாய்
நருக்கமிக்க நற்பசுவின் கோமியத்தில் நனைத்துப்
பாண்டவாயிலிட்டுப் புடத்தில் தயில...........

செண்முகம்

**குறிப்பு :**

இரச கெந்தக சம்பந்தமுள்ள மருந்துகள் காணப்படுகின்றன.

வரிசை எண். 680. சுவடி எண். 347 (e)

## நட்சத்திர பலன் — சுரநிதானம்

ஏடுகள்: 4.(74-77) ஏட்டின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 28X3 செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 150. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றும் இல்லை.

**தொடக்கம் :**

ஆமப்பா சுரதோசத் தாள்மை யெல்லா
அறைந்திட்டேன் முன்பேதா னடக்க மெல்லாம்
ஓமப்பா நஷ்ஷெத்திரம் அவத்தை தேர்ந்து
முத்துக்கேள் புலஸ்த்தியரே மச்சமுனி நீங்கள்
வேமப்பா அசுபதினுள் வந்தசுரந் தானும்
விட்டுப்போ மெட்டானுள் பரணி னுளிர்
போமப்பா வந்தசுரங் கொல்லா தாகிற்
பொருக்குமடா ஒன்பதிலே காற்த்திகை னுளைக்கேளே. -க

**முடிவு :**

சந்தமென்ற உயிர்மீளும் வாத பித்த மீரண்டுங் கீளே
களன்று வாங்குதான் சிலேற் பனத்திற் துட்டு மாகிற
தொந்தமென்ற மருந்தேது தடுப்பா ராரு
துஞ்சுவர் பச்சத்திற் துஞ்சு வாரே. -14

**குறிப்பு :**

இன்ன நட்சத்திரத்தில் சுரம்வந்தால் இத்தனை நாள் இருக்கும் என்று கூறும் சுர சாத்திரம். "சுரகண்டிகை" என்ற பெயரிலும் இதேபோல் உள்ளது. அச்சிடப்பட்டுளது.

வரிசை எண். 681. சுவடி எண். 347 (f)

## வயித்தியன் குணம்

*ஏடுகள்: 1. (78-ம் ஏடு). ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 28X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 40. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: அறியக்கூடவில்லை.*

**தொடக்கம் :**

பண்டிதனும் பரிகாரி வைத்திய னென்னும்
பகருகிற மொழியெல்லாம் பரனுக் காகும்ங்
கண்டிதமாய் முகம்பார்த்து நோயைப் பார்த்து
கரத்தெழுந்த னுடியுடன் கலக்கம் பார்த்து
முண்டிதமாய் மூன்றுக்குள் நவதாது பார்த்து
மூனைக்கண்டு மருந்தினுட முருக்கும் பாத்து
அண்டினபின் பொருளாசை மிகுந்தி டாமல்
நிரிந்துரசெய் வோனெழுபிறப்பு மயனும் பாரே. -1

முடிவு :

வல்லோர்க ளாகமத்தின் பொருளை யெல்லாம்
வகைவகையே தொகுத்தறிந்து மனமொன் றாக
புல்லோர்கள் சங்காத்தங் கடிந்து தள்ளி
பொறையுடைய தபோதனரை போத்தி நிற்பார்
நல்லோரே அவற்கண்டால் சிகத்துக் கெல்லாம்
நமனிவலை நமனில்லை நாட்டி லென்று
சொல்லார்க ளுண்மைதனை யார்க்கா னாலும்
சொல்லுவா ரறிவில்லா துஷ்டற் காணே. -4

குறிப்பு :

இதில் வைத்தியர்கட்கு இன்னின்ன குணங்களிருக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறப்பட்டுளது.

****

வரிசை எண். 682 சுவடி எண். 347 .(g)

## கொங்கணர் தண்டகம்

ஏடுகள்: 32. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 28X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 1000. ஆசிரியர்: கொங்கணர். முழுமை:. முற்றும்.

தொடக்கம் :

வெளிகடந்த வெளிஒளியே சுழினை காப்பு
வேதாந்த விபரத்தி னறிவே காப்பு
தளிர்கனதுங் காலுமொன்றாய் மூன்றும் நல்லில்
தம்பனத்தில் மோகனத்தாய் பதமே காப்பு
அளிக்குருவி லெட்டாகி நாலுஞ் சேந்த
அதிசயமே பூரணத்தி னறிவே காப்பு.
களிவுறுதி பட்சணியின் கருவைக் கூற
கணபதியே முத்தியருள் காப்ப தாமே. -1

முடிவு :

விதியறியான் மதியறியான் நூலைப் பாரான்
வித்தறியான் முளையறியான் சுளினை பாரான்
நதியறியான் நிலையறியான் நீரில் மூழ்கி
தானென்ற சொல்மறவா னுலைக் கரன

பதியறிய வேணுமென்றால் யின்நூலைப் பாரு
பாத்தவர்கள் வெகுகோடி கண்டு தொய்ந்தார்
விதியறிந்தோன் கருவாளி யாக வென்றால்
விட்டகுறை யாலறிவான் சித்தி முத்தே. -109

குருநாதன் துணை.

**காலம் ;**

அஷ்சய ஸ்ரீ ஆடி மீ 2௳சஉ புதன் கிழமையில் தண்டகம் எழுதி முடிந்தது முத்தும். திருவையாத்திலிருக்கும் சுப்பாரய பிள்ளை மகன் சண்முகம் கையெழுத்து தேவிசகாயம்.

**குறிப்பு ;**

இதில் எருக்கு எட்டி, கீழாநெல்லி, இவைகளுக்குக் காப்புக்கட்டி, வேர் பிடுங்கிக் குளிசமாடிவைத்துக் கொண்டு, அதனால் வசியம், மந்திரம், மாரண, ஜாலம், திலதம், மறைப்பு மை, முதலியவைகளைச் செய்யும் முறைகளும் ஞான யோக மார்க்கங்களும் கூறப்பட்டுள்ளன.

இது சுவடி எண் 35-dயின் மறுபிரதியாகும். பாடபேதங்கள் உள்ளன.

வரிசை எண். 683 சுவடி எண். 347 (h)

## அகத்தியர் தண்டகம்

ஏடுகள்: 10. (111—120). ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 28x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 300. ஆசிரியர்: அகத்தியர். முழுமை; முற்றுமுளது.

**தொடக்கம் :**

அந்தணர் பாதம் போற்றி அறிவுடன் வாழ்வோர்க்க கெல்லாம்
சந்ததம் பூமி மீதில் சாத்திய தண்ட கந்தான்
எந்தனுர் பிள்ளை யெல்லா மிதுவறிந் துள்ளே கொண்டு
பிந்தமிழ் பிறர்விள் ளாதார் பெரியவ ராகுந் தானே. -1

**முடிவு :**

ஆனேஞ் சிவனை யடிதொழு தேத்தி
மானே பார்பதி மக்களு மானேம்
வீனே யிருந்து விஞ்சுவர் கண்டாய்
ஞனே தண்டக்கம் நாடுமுறை முற்றே -100

சிவமயங் குருனதன் துணை

காலம்:

அட்சய ஞு ஆடி மீ உரு உ அகஷ்த்தியார் தண்டக்கம் எழுதி முடிந்தது முத்தும்.

குறிப்பு:

இது, சுவடி எண் 17-dயின் மறுபிரதி. பாடபேதங்கள் உள்ளன.

வரிசை எண். 684. சுவடி எண். 347 (i)

## அகத்தியர் (பித்தகுண) வாகடம்

ஏடுகள்: 31. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்: 7 வரிகள். அளவு: 28X3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 500. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றும்.

தொடக்கம்:

பித்தகுண மருந்து

பித்தத்தில் வெதுப்புப் பத்திப் பெருத்திடிற் சத்தி குன்மம்
சித்தத்தில் வலிதெ ரித்துத் தெளிவுறக் கழிச்ச லாக்கு
மெத்ததி லீர லோடே மிகுந்துதா னெரித்த ழத்திக்
கைத்தத்து நாக்குத் தானுங் கதித்துமாப் பித்த மாமே. -1

முடிவு:

கூட்டீரொரு மண்டலமுங் கொள்ள வல்லீராகில்
சேட்டுமம் வாதமொடு பித்தமிவை தீரும்,
நாட்டிலுள்ள வெட்டிணமுஞ் சூலைகளும் நன்றூ
யோட்டியிடு முண்மையிது உண்மை. -20

அகத்திமாமுனி திருவிளம் பத்தினபடி வாகடமுகிந்தது, முற்றும்.
பறசத்தியம்மந் துணே.

குறிப்பு:

இதில் சந்நிவாதக் குதிரை வலிப்பு, இரத்த குன்மம், சந்தனுதி வாதகுளிகை, பித்த தோஷத்திற்கு மருந்து, கெற்பசூலைக் குணம், வெப்புப்பாவை, ஈளை சோகை, வாதப்பிரமியத்திற்குப் புகை, அண்டவாதம், பக்கசூலைக்குணம், காசத்தின் குணம், மந்தார காசம், வரட்சிக் கரப்பான் குணமும் மருந்தும், சலப்பிரமிய மருந்து, குஷ்டம், பரங்கிப் புண்ணுக்கு, கற்பவாயுவிற்கு, தலைச் சுழற்சி, பித்தத்திற்கு மருந்து, உதர தோஷத்திற்கு, கபால வலிக்கு நசியம், சன்னியறிதல், சத்தி சுரத்திற்கு மருந்து முதலானவைகள் உள்ளன.

வரிசை எண். 685 சுவடி எண். 347 (j)

## கோரக்கர் பூரணாதி லேகியம்

ஏடுகள்: 5. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு. 28x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 75. ஆசிரியர்: கோரக்கர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

கோரக்கர் மூலிகைக் குருவினுப தேசம்
நேரொக்கக் கொண்டு நிலையறிவா ரில்லை
நேரொக்கக் கொண்டு நிலையறி வாருக்குச்
சீரொக்கப் பாயும் சிவபதந் தானே.

**முடிவு :**

சித்தான மூலிகை சிந்தையுள் நேசமாய்
நித்தமுஞ் சாதிக்க நினைத்ததெல் லாந்தரும்
பத்திசெய் யாமல்ப் பழித்தே யிகழ்ந்தவர்
யெத்தனை ளுளு மிடைவார் நறகிலே. -29

குருனுதன் துணை. கொறக்கற்ஞயன் கற்பம்.

**காலம்:**

அஷ்சய ஞூ ஆவணி மீ கஉ கோறக்கர் அருளிச் செய்த பூறஞுதி லேகியம் எழுதி முடிந்தது, முத்தும்.

**குறிப்பு :**

பூர்ணாதிலேகியம், (கஞ்சா) செய் முறையுள்ளது.

வரிசை எண். 686 சுவடி எண். 347 (k)

## கொங்கணர் கற்ப சூத்திரம்

ஏடுகள்: 28. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 28x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 900. ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முழுமையுமுளது.

**தொடக்கம் :**

முத்திகொண்ட வேதாந்த நந்திக் கீழாய்
மூலாதா ரத்திருந்த கிணேசன் பாதம்

பத்திகொண்ட சித்தாந்தம் நாதாந் தத்துள்
பாவியே விந்துவிரும் போக நாதர்
சத்திகொண்ட தத்துவங்க ளெல்லாம் பாளாய்
சட்சுதா னந்தவெளி யொளிமே லான
சித்திகொண்ட காயசித்தி கற்ப சூத்திரஞ்
செப்பிறேன் வெளியாகச் செப்பி றேனே. -1

முடிவு :

பாரப்பா கும்பமுனி ஞான தீட்சை
பண்பான பூரணசூஷ்த் திரத்தை யன்பாய்
பாரப்பா ரோமரிஷி ஞான சொடசம்
பாருநீ சடாதார மாறுந் தோணும்
பாரப்பா நான்சொன்ன கற்பம் நூறும்
பகிர்ந்திட்டேன் கடைக்காண்ட மஞ்ஞூ றுந்தான்
பாரப்பா வெட்டவெளி யாகச் சொன்னேன்
பரமோட்ச கெதியுண்டாம் பத்து முற்றே. -10

முத்தும் குருனுதன் துணை. தேவிசகாயம்

கொங்கணமூர்த்தி யருளிச் செய்தகற்ப சூத்திரம் எழுதி முடிந்தது, முத்தும்.

காலம்:

அஷ்சய ஹூ ஆவணி மீ 20உ.

குறிப்பு :

இதில் நவகல்பம் முதலான கல்ப முறைகள் உள்ளன.

வரிசை எண் : 687. சுவடி எண் : 347 (1)

## அகத்தியர் வாத சூத்திரம்—50

ஏடுகள்: 9. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 28x3 செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 300. ஆசிரியர்; அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

ஆதியென்ற பூரணனூல் யிருனூத்தில் சொச்ச
மடக்கிவிட வேணுமென்று மாயி பாத
போதியென்ற மனந்தெத்தி ஓராண் டுதான்
பூசித்தே னவளும்வந்து அரிக்கை யிட்டாள்

சோதியென்ற மதியாளுங் கருப்படுவா
ளென்று தலைத்தியளை கருவைப் பார்த்து
...... ...... ...... ......
வாயடங்கி ஞலெழுத்து மதியில் காணே. -1

முடிவு :

ஒன்றான குருமுடித்த மார்க்க மெல்லாம்
ஓலையிலே யெழுதிவைத்தேன் கருவாய்ப் பார்த்தா
லன்றான குருமுடித்த மார்க்க மெல்லாம்
அடைஓலை கட்டியது சொச்சம் பாரு
வன்றான தும்பியது ரசனை யுண்டு
வாங்குமப்பா ஓலையிலே யீயே யாகும்
சன்றான ஓலையிடு நாலெழுத்து வாசி
சிறப்பான யீயெழுத்து அஞ்சு முற்றே. -51

குருபாதம் துணை. தெட்சணாமூர்த்தி பாதமே துணை.

காலம் :

அஷ்சய வருஷ ஆவணிமீ" உய உ யெழுதி முடிந்தது முத்தும்.

குறிப்பு ;

இது ரசவாதச் சுவடியாகும். பாடல்களில் சீர் சரியில்லை.

வரிசை எண். 688 சுவடி எண். 347 (m)

## அகத்தியர் சூத்திரம்—8

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 28x3 செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 60. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

தெரிசினமாஞ் சிவயவசி சிவஅ உமென்று
திரும்பவே அரியும் கிலியுங்கென் றோதும்
சரிதையொடு கிரிகையது ஞான மப்பா
தப்பாது உங்கிலியுஞ் சவ்வென் றோதும்

துரியத்தி லப்பு முப்பு ........

...... ...... ...... ......

...... ...... ...... ......

சூட்டிலேன் பாறையுப்பைச் சொல்லக் கேளே.

முடிவு :

வழியான வழிகண்டு சேந்தார் சித்தர்
வெளியறியா மோட(ப்)பா கழுதை மாடு
ஒளியாகுஞ் சோதிமணி யவனே யாகும்
துயமறத்த நாகமணி வய்க்குந் தானே. -அ

சண்முகம் கயி எழுத்து.

குறிப்பு :

இதில் மந்திரங்களைச் சித்தி செய்துகொள்ளும் முறை உளது. புலத்தியருக்கு உபதேசித்தது.

சுவடி எண். 248-g. 'அகத்தியர் எட்டு' என்ற பெயரில் உளது. அதில் அரிதாரக் குளிகை சொல்லப்பட்டிருப்பதால் இச்சுவடி வேறு

வரிசை எண். 689. சுவடி எண். 347 (n)

## அகத்தியர் தீட்சை — 5

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது, பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 28x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 50. ஆசிரியர்: அகத்தியர் ?. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

ஆதியந்த மிகநிறைந்த தீட்சை மாற்க
மருள்பெத்த புலத்தியனே சொல்லக் கேளு.
சோதியந்தத் துள்(ளிரு)க்குஞ் சுடரே போற்றி
சொலங்குறேன் அகாரமுட னுகாரம் ஞேக்கி

முடிவு :

வொன்றுனே பொருளதுவாம் உத்தப் பாரு
ஓகோகோ வென்னென்ன உகமை யன்டோ
யின்(னது) தான் புதுமையது கதித்தெ ழுத்தைக்
காளூர்யீபட்ட தேனதுபோல் யிகழ்த்து வாரே. -5

குறிப்பு :

தீட்சை கொடுக்கும் விபரம் கூறப்பட்டுளது. 'புலத்தியனே சொல்லக் கேளு' என்றதனல் ஆசிரியர் சுப்பிரமணியக் கடவுளாக இருக்கலாம்.

வரிசை எண். 690 சுவடி எண். 347 (0)

## கொங்கணர் கற்ப சூத்திரம்

ஏடுகள்: 7. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 28x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 200. ஆசிரியர். கொங்கணர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம்:

முற்றிகொண்ட வேதாந்த நந்திக் கீளாய்
மூலாதா ரத்திருந்த கிணேசன் பாதம்
பற்றிகொண்ட சித்தாந்த முதாந் தத்துள்
பரவியே விந்துவிரும் போக நாதர்

முடிவு :

அனுகொட்டா தெமநாரை வெட்டிச் சாடும்
அயக்காந்த செந்தூரம் லேகியத்திலே கொள்ள
அனுகொட்டா தொண்றையுந்தான் மனமொன் றுகும்
அப்பனே அயக்காந்தம் சொல்லக் கேளே. -உரு

கேளடா காந்தமது பலந்தா னஞ்சி
கெட்டியாக — — — — — — — —

குறிப்பு :

இதில் துவாதச லேகியம், அயக்காந்த லேகியம் முதலிய முறைகள் உள்ளன, பிழைகள் அதிகம்.

இதன்பின் சோதிடம் 1 ஏடும், ஷட்ரசநிகண்டு 5 ஏடுகளும் மிகமிகப் பழுது பட்டுக் காணப்படுகின்றன.

வரிசை எண். 691. சுவடி எண். 348

## அகத்தியர் சௌமிய சாகரம்

ஏடுகள்: 297. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது, பயனற்ற நிலை. பக்கத்திற்கு: 6 வரிகள். அளவு: 45x3½ செ.மீ. எழுத்து:

தமிழ். கி. எண்ணிக்கை: 10,000. ஆசிரியர்: அகத்தியர் முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

சோதியெனும் மனோன்மணியைத் தியானம் செய்து
சுகமாக சௌமியசா கரத்தைப் பாட
ஆதி……… ………… வல்லமையுங் காப்பு
அரசான பிரமனொடு சரசுவதியுங் காப்பு

**முடிவு :**

சுத்தான சுத்தன்பகு சோதி யாகி
சோதிமய மானசிவ சூட்சந் தன்னை
மு……… ………தீட்சை முற்றி பெற்று
பரமபதத் தெல்கையிலே பதிவாய் முற்றே. -1001

**காலம்:**

1827-வருஷம் செப்டம்பர் மாதம் 24-ம் தேதிக்குச் சரியான தமிழ் பிரபவ வருஷம் புரட்டாசி மாதம் 10-ந்தேதி மங்கல வாரம் பள்ளிகொண்ட சேஷாசலம்பிள்ளையால் எழுதி நிறைவேறியது. கடவுள் துணை. அகத்தியர் சாகரம் 1200 முற்றுப்பெற்றன. பல்லாரியில்……

**குறிப்பு :**

இதில் ரேசக பூரக கும்பகம், ஆதாரபூசை, வாலைகாயம், பஞ்சபூத விபரம், வெள்ளி பற்பம், சக்திசிவம், வெளியொளி, திரிகோணபூசை, குடவன் செம்பு, வேதை, ருத்திராட்ச மகிமை, புட விபரம், நீத்தினம், உருக்கினம் அறிய, சுவாசம் இருக்கும் விபரம், துருசு சத்ரு மித்ரு, சதாசிவன் தெரிசனம் முதலியன உள்ளன. ஏடுகள் பல ஒடிந்தும் முறிந்தும் உள்ளன. செல்லரித்தநிலை.

---

வரிசை எண். 692 சுவடி எண். 349

## போகர் இரண்டாம் காண்டம் 1000

ஏடுகள்: 168. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள். அளவு: 37X3 செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 5000. ஆசிரியர்: போகர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

இரண்டான ஆயிரத்தை விரித்துச் சொல்ல
யீசுபரன்மு னீன்றெடுத்த கரிமுகன் காப்பாகுத்

………… சிவனுடைய பதத்தைப் போற்றி
திரிபுரசுந் திரிபாதஞ் சிரத்தில் வைத்து
கரண்டான காலாங்கி ……… போற்றி
கடாச்சித்த மூலகுரு பாதம் போற்றி
இரண்டான பதஞ்சலியார் தெட்சணா மூர்த்திப்
பாதத்தைச் சிரசில்வைத்துப் பாடுரேனே. -1

**முடிவு :**

சரக்கான பழுப்புத்துத் தன்னைத் தானும்
தாயார்க்கு அருள்செய்த ………
யிரக்கான யிமோபாறு தைத்திங்கிழே
எத்தமாம் பூமியிலே புத்துக்கண் போல
வாக்கான ……… ……… ………
மாசத்த நிறமுண்டாய்த் தானிருக்கும்
தாக்கான தங்கநிறம் புத்துக்கண் போன
……… ……… ……… -637

**குறிப்பு :**

இதில் சாரச் சுன்னச் செயநீர்; லோகத் திராவகம், பச்சைக் கர்ப்பூரச் சுன்ன ஜெயநீரிலளவிய வேதை. களங்குச் செந்தூரம், வெங்கார வைப்பு, துரிசு வைப்பு, சாரக்கட்டு, சத்திச் சாரவைப்பு, கெந்தியுப்பு, சூடன் கட்டு, சத்திசிவ பஞ்சபூதம், சீன வைப்பு, சீனக்காரச் சுன்னச் செயநீர், பச்சைக் கர்ப்பூரவைப்பு, அப்பினல் உப்பைக்கட்ட, கல்லுப்புப் பரீட்சை, கரியுப்பு வைப்பு, வாசியுப்பு' சாம்பவியோகம், பொன்னம்பர், மீனம்பர், கடல்னுரையுற்பத்தி, லிங்கத்தால் ரசமணி, ரசகுளிகை, சாதிலிங்கத்தில் 8வித பாஷாணம், சௌவீரவைப்பு, காம ஆசை விபரம், சிவத்தின் கூறு, சத்தியின் கூறு, கோழித்தலை கெந்தகம் முதலியன உள்ளன. போகர் 7000-த்தில் இது இரண்டாங்காண்டம்.

வரிசை எண். 693 சுவடி எண். 350

## தெட்சிணாமூர்த்தி ஞானம் 100

ஏடுகள்: 26. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 10-12 வரிகள். அளவு: 17X3 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 600. ஆசிரியர்: தட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றும்.

**தொடக்கம் :**

பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
பூமியென்றுந் திதியென்று படைத்த வாறும்
காரணமாய் தேவியெங்கும் நிறைந்த வாறுங்
கற்பமுண்ட ரிஷிகள் ……வந்த வாறும்.

முடிவு :

உத்தமனே மண்ணுடனே மண்ணுஞ் சேரு
மனியாத காத்தோடே வாய்வு சேரு
மஞ்சுமென்றுய்க் கூடினு லாற..... லாகும்
வெளியோடே குவ்வெண்ண மறிந்து கொண்டு
மானிடர்க்காய் ............ -101

தெட்சணமூர்த்தி ஞானம் முற்றும்.

குறிப்பு :

ஏடுகள் மிகவும் பூச்சியரித்துள்ளதால் செய்திகள் அறிய இயலவில்லை.

வரிசை எண். 694 சுவடி எண். 351

## (சட்டைமுனி) காயசித்தி நாறு

ஏடுகள்: 35. ஏட்டின் நிலை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். அளவு: 24 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 700. ஆசிரியர்: சட்டைமுனி. முழுமை: குறைபாடு உடையது. (முதல் ஏடு இல்லை)

தொடக்கம் :

கபமெல்லாம் வீழும்.

நாளப்பா ஞற்பதுனுள் உதையத்திற் செய்வாய்
நலமான குணத்தையினி சொல்லு றேனே. -2

முடிவு :

தூரப்பா தொடடல்லோ முடிவரைக்குஞ் சொன்னேன்
சொல்லாமல் சித்தரெல்லாம் ஒளித்திட் டார்கள்
காரப்பா குருபதத்தைக் காத்தால் சித்தி
காயசித்தி பாடினதோர் காய முத்தே. -100

குறிப்பு :

இதில் கடுக்காய் கற்பம், சிவனார்வேம்பு கற்பம், திரிபலை கற்பம், காந்த ரசாயனம் முதலியன உள்ளன.

சுவடி எண். 26-a. சட்டைமுனி 'கற்பவிதி' என்றதின் மறு பிரதியாகும், பாடபேதங்கள் உள்ளன,

வரிசை எண் 695. சுவடி எண் 352 (a)

## சட்டைமுனியார் கற்பம்

ஏடுகள். 12. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு; 10-11 வரிகள். அளவு: 35 × 4 செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 600. ஆசிரியர்: சட்டைமுனியார். முழுமை: குறை பாடுடையது.

தொடக்கம் :

பாடுகிறேன் காயகற்பம் ஐங்கானே காப்பு
பரிவான ......... .........
......... ......... ......... காப்பு
நாதாந்த மனோன்மணித்தாய் பதமே காப்புத்
தேடுகிற ......... ......... .........
......... ......... .........

முடிவு :

தூரப்பா தொட்டல்லோ முடிவரைக்குஞ் சொன்னேன்
சொல்லாதே யொளித்திட்டார் சித்த ரெல்லாம்
காரப்பா குருபதத்தைக் காத்தாற் சித்தி
காயசித்தே பாடினதோர் கட்சி முத்தே. -100

சற்சுதானந்த குருசுவாமியார் பாதமே கெதி.

குறிப்பு :

இதில், அயம், காந்தம், பூஜைச் செம்பு, மூலிகை கறுப்பு, நூல் கொடுக்கத் தக்கவர், முதலான விவரங்கள் உள்ளன. மேலும், சிவனார் வேம்பு கற்பம், முதலானவைகளும் உள்ளன.

இது 351-ம் எண் சுவடியைப் போன்றது. 26-a-ம் இது போன்றதே.

வரிசை எண். 696 சுவடி எண். 352 (b)

## அகத்தியர் பூசாவிதி

ஏடுகள்: 21. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 10-12 வரிகள். அளவு: 35x4 செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 1400. ஆசிரியர்: அகத்தியர் முழுமை: முற்றும்.

தொடக்கம் :

ஆதார மாறு மகண்ட குரு பாதம்
வேதா கமத்தின் விதிமாற்கம்-நாதமுறும்
விந்துவே மூலம் விளங்குபூ சாவிதியார்
தந்திமுகத் தோன்கருணை தான்.

முடிவு :

கண்ணாம்பு மஞ்சளும்போல் குறிகள் காட்டி
களையில் நாட்ட முறத் தொட்டுக் காட்டு
கண்ணாடிக் குள்குருவின் பதத்தைப் போற்றி
கருணைபெறு பூசைவிதிக் கருவா முத்தே. -199

சற்குதானந்த குருசுவாமி லெட்சிக்கவும்.

குறிப்பு :

காப்புச்செய்யுளைச் சேர்த்து 200 ஆகும். இதில் சிதம்பர சக்கரம், மாரணம், பூசைபண்ணும் மார்க்கம், ஓம குண்டம், முத்திரை வகை, ஷட்சக்ர (மூலாதார, மணிபூரக) முதலான நிருபணம், அஷ்டகர்மபூசை, வித்வேஷணம், கணபதி பூசை, பிரும்மதேவ பூசை, ருத்ர பூசை, ரசபற்பம், 4-வகை மவுனம், பூர்ண சமாதி, சதாசிவ பூசை, சண்முகத் தியானம், சீஷனுக்கு குரு மவுனம் சொல்ல, பாஷாண வாலை, ரசலிங்க பூசை, சண்டாள சீஷன் வகை, முத்திரை வகை, சரியை கிரியைக்கு சொர்க்கம் முதலானவை உள்ளன. 19-a சுவடியின் மறு பிரதியாகும்.

---

வரிசை எண். 697 சுவடி எண். 352 (c)

## கொங்கணமூர்த்தி ஆயிரக்காண்டம் கடைக்காண்டம்

ஏடுகள்; 89. (46-134) ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 10-12 வரிகள். அளவு; 35x4 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 6500. ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றுற்றது.

தொடக்கம் :

வையக மேழி னுள்ளே வளம்பெறு முனிவர் வல்லோர்
மையலைக் கடந்தோர் ஞான வளிபட்டோர் வளமை யுள்ளோர்
அய்யமொன் றிலேத்தே சென்று அலைவற வுதகுஞ் சொல்ல
கையுளே கொட்டை யேந்துங் கணபதி காப்புத் தானே. -1

முடிவு :

கூடயினிச் சுண்ணும்பு நீரை வார்த்து
கொள்கியரைச் சாமமாகு குறிப்பாய் வாங்கு
ஆடயினித் தூரிசியுடக் குருவை யிட்டு
அதற்குள்ளே சுக்கிலற்றை வார்த்து ஆட்டே. -983

குறிப்பு :

இதில் வெடியுப்புச் செயநீர், கல்லுப்புக் கட்டு, துர்மார்க்க சிஷன் குணம், கோப வரலாறு, அண்ட பிண்ட வித்தை, பெரியோர்களுக்காம், வெடியுப்பு, கல்லுப்பு மகிமை, உப்புக்கட்டு வகை, வீர குரு, சூத குரு, லிங்கமெழுகு பஞ்ச பூத குறி, பெரியோர்கள் நூல் சந்தம் பாடல், சிங்கித் தைலம், கெங்கை போலாசை, செம்பு வேதை, லிங்கக்களங்கம், அயக்களங்க வேதை, சூதக்கட்டு, மகாமேரு சமைந்த வயணம் முதலானவைகள் உள்ளன. சுவடி எண் 23-a ன் மறுபிரதி. நிரம்பபாட வேறுபாடுகள் உள்ளன.

இதன்பின் 135-137 வரை ஏடுகள் இல்லை.

வரிசை எண். 698 சுவடி எண். 352 (d)

## கொங்கணர் கடைக்காண்டம் 500

ஏடுகள்: 44. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 10-12 வரிகள். அளவு: 35x4 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 3000. ஆசிரியர்: கொங்கணர். முழுமை: குறை பாடுடையது.

தொடக்கம் :

அண்டரண்டங் கடந்தபொருள் நிற்குணமாய் நின்ற
அளவிலா நிற்மலமே சூட்சா சூட்சம்
எண்டிசையும் பரந்து...... ஞ்சனமே யாகி
யேகசட்சு தானந்ததற் பால ஞானம்

முடிவு :

வீருன நடுக்காண் மஞ்னூறு சொன்னேன்
வேதையிடு முதற்காண்ட மஞ்னூறு சொன்னேன்
தாருன முன்னூறுக்கு மூன்று சூத்திரம்
தப்பாமற் சோடசந்தான் தெளிந்த முத்தே.

கொங்கண சாமியார் கடைக்காண்ட மஞ்னூறு முற்றும்.
சற்சுதானந்த குருசுவாமி பாதமே கதி.

**காலம் :**

காலையுக்தி ஸு மார்கழி மீ 23 உ குருவாரமுள் வியாழக் கிழமை யன்றைக்கு ஆப்பனூரில் நந்தவனத் தேவர் வீட்டில் எழுதி முகிந்திது. முற்றும்.

**குறிப்பு :**

இதில் தீட்சை வகை, வாலை பூசை வகை, வாசி போகம், தேவி பூசை, மௌனத்தால் கிரிசை பூசை, சிதம்பர சக்கர பூசை, போகவாசி தம்பன குளிகை, 8, 9, 10ந் தீட்சை, குருநாதன் பூசை, சாம் நிவர்த்தியாக அனுஷ்டான விதி, சட்டைமுனி நூல் பார்க்க, சுழினை அப்யாச மார்க்கம், 4 யோனிவகை தோற்றம் அறிய, பிறப்பு, இறப்பு மான சுந்தர வேஷம், தலைவனை அறிதல் முதலியன உள்ளன.

இது 263-உயின் மறு பிரதியாகும். பாடவேறு பாடுகள் உள்ளன. முதல் இரு ஏடுகள், மற்றும் இடையிடையே ஏடுகள் இல்லை. "பூரண சூத்திரம்" என்ற ஒரு ஏடும் உள்ளது.

வரிசை எண். 699. சுவடி எண். 352 (e)

## கொங்கணார் கற்ப சூத்திரம்

ஏடுகள்: 10. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 10-11 வரிகள். அளவு: 35x4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 600. ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

முத்திகொண்ட வேதாந்த நந்தி ஆசான்
மூலத்தி லேயிருந்த கிணேசன் பாதம்
பத்திகொண்ட ——— ——— ———
பரை பாதம் போற்றுகின்ற போக நாதர்.

**முடிவு :**

கர்ம மெட்டு மாடுமடா குளிகை வேகங்
காரீயங் களஞ்சிரெண்டு மணிதா னொன்று
நிற்மயமாந் தம்பனத்திற் காகு மாகும்
நேரான வர்க்குஷணந் துத்த நாகம்,
தற்மமென்ற வசியவடா தங்கள் — — — — 80

**குறிப்பு :**

இதில் துவாதசாந்த லேலியம், மனக்குரங்கு நிதானம், அயக்காந்த செந்தூரம், அயச்சத்து வாரியோகம், தலைமுழுகக் கற்பம், துவாதசாந்தத்

தைலம், கற்பங் கொள்ள வகை, தம்பன குளிகை, சாறணை சுற்பம், மிளகு கற்பம், மூதண்ட கஷாயம், புரியட்ட மார்க்கம், அப்பிரகக் கிண்ணம், ரசக் குளிகைக் கட்டு முதலியன உள்ளன.

இதன் பின் 32 வெவ்வேறு ஏடுகள் உள்ளன. இவை முன் எண்களி னின்றும் உதிர்ந்தவை, முன்னுள்ள இச்சுவடியின் குறைபாடுகளை நீக்கப் பயன் தரும்.

---

வரிசை எண். 700 சுவடி எண். 353 (a)

## வியாக்கிரபாதர் ஞானம்

ஏடுகள்: 14. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள் அளவு: 20x3 செ. மீ. எழுத்து தமிழ். கி.எண்ணிக்கை: 200. ஆசிரியர்: வியாக்கிரபாதர். முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம் :**

உலக மியற்க மொருபொருங்கனப்பி — —
— — — சொண மாமலைப் பார்பதி புதல்வனை
அலகில் ... ... ... க்க்கியாண மாகின் றவரனையைத் தலையில்......

**முடிவு :**

விரும்பு வாசக மிருக்கின்ற வெளியிலே விரவிக்
கரும்பு மாலையு மாகவே ரசனையைக் கறந்து
துரும்பு மெருவாமென்றது வளியின்னைத் துறந்து
அரும்புள் ளாரும் நிறைந்தது அகாரத்தின் வெளிக்கே.

**குறிப்பு :**

ஞானம் ஏற்பட வழிகளைக் கூறும் நூலாகுமிது. பாதுகாக்கப்பட வேண்டிய சுவடி.

---

வரிசை எண். 701 சுவடி எண். 353 (b)

## சித்தர் நூல்

ஏடுகள்: 3. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 20x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 50. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

அலைவார்கள் அவரவர்கள் தேச வாசம்
அம்மவாசை விரதமென்பார் திதிகள் செய்வார்
உலைவார்கள் வேதியர்க்கி அன்ன மீய்ந்து
உறுதியாய்ப் பிண்டமிட்டுப் பிதிற்குப் பூசை
மலையாமல் குடுப்பார்கள் யெள்ளும் தண்ணீர்
வார்ப்பார்கள் வேதமுறை வளப்ப மாத
நிலையான விந்துகெட்டுப் பிணமாய்ப் போனால்
நிய்யார்க்குத் தற்பணங்கள் செயித வாறே. -1

**முடிவு :**

வாருதோ விட்டகுறை வாசத் தாலே
மாதாவும் பிதாகூடி யமைக்கும் விந்து
சாருதோ விந்துநிலை பத்த வென்பான்
தவறுது நாதாந்தத் துள்ளே யேத்து
தீருதோ பிறவியெல்லாம் மவுனந் தாக்கில்ச்
சித்தாதி ஆங்காலுந் தீர்க்க மாச்சு
போருதோ மனமாய்கை அறிவி லேறி
பிலத்துதே வருஷமொன்றில் மவுனத் தாயே. -எ

வடிவேல் துணை.

**குறிப்பு :**

அமாவாசை தர்ப்பணாதிகளைக் கண்டனம் செய்யும் நூல். இந்நூலின் பெயரை அறியக் கூடவில்லை.

வரிசை எண். 702 சுவடி எண். 353 (c)

## சங்கராச்சாரியார் பாடல்

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 20 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 30. ஆசிரியர்: சங்கராச்சாரியர். முழுமை: முற்றும்.

**தொடக்கம் :**

புலனத்து பொரிஅத்துப் பூசை அத்து
புண்ணியபா வங்கள்விளை தானு மத்து
மலமத்து சலமத்து மாயிகை அத்து
மன்னிவும் அற்றவெ யோகத் தார்க்கு

பலனொத்த வாறுசொல்ல கேள்மா ணுக்கா
பாரிலமுனி யாகி நெடுநா ளிந்து
பிலனுத்த பூமியில்வந் தவத ரிப்பார்
பிறந்தாலும் சிவயோகி யாவர் தாமே. -1

முடிவு :

கலை ஆனசிவன் னீராறு ஓடிக் கழியும்
உருநான்கு கழியாமல் கட்ட
நிலையான பரந்தானும் வந்தாட் கொள்ளும்
துலத்தில்வரும் பிறவியொழிந் திருப்ப மென்பார்
தலையான பாம்வேறு சிவன்வே றுதான்
வேறெண்டீ ரிந்த — — — யாலவர்க்குத்
துலையாத பிறவிவந்தே யுது மென்று
தொல்லுலகில் லென்குறுவும் சொன்ன வாறே.

குறிப்பு :

ஞானம், யோகத்தைச் சங்கராச்சாரியார் உபதேசிக்கிறார்.

வரிசை எண். 703 சுவடி எண். 353 (d)

## தட்சிணாமூர்த்தி வேதாந்த சூத்திரம்

ஏடுகள்: 9. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 5—6 வரிகள். அளவு: 20x3 செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 100. ஆசிரியர்: தட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றும்.

தொடக்கம் :

ஆதியந்த மிகநிறைந்த சின்மயத்தின் பாதம்
அகண்டபரி பூரணமாம் ஆத்தாள் பாதம்
சோதிநிற மாகிநின்ற கிணேசன் பாதம்
சொல்தனக்கு மெட்டாத சூட்சா சூட்சம்
விதியென்ற பராபரத்தின் நந்தி பாதம்
வேதாந்த சூத்திரத்தின் வெளியின் மார்க்கம்
பாதிமதி தனையணிந்த யீசன் ஞானப்
பரஞ்சுடரின் பாதமது காப்புற் றுனே. -1

முடிவு :

பேற்கவே ரசமணியின் மாற்கந் தானும்
யென்மக்காள் சொல்லிவிட்டேன் யோக மாற்கம்
சேற்க்கவே யிம்முறையை உனக்குச் சொன்னேன்
செழுங்கருணை பதினாறில்க் கடாட்சம் முற்றே.

குறிப்பு :

இதில் ரசமணி செய்யும் முறை கூறப்பட்டுளது. இரசவாதச் சுவடி "தட்சிணாமூர்த்தி ரசகுளிகை" என்ற 236-k ன் மறு பிரதியாகுமிது. பாடவேறு பாடுகள் மிகுதியாக உள்ளன.

வரிசை எண். 704. சுவடி எண். 353 (e)

## ரோமரிஷி சூத்திரம்—50

ஏடுகள்: 11 ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். அளவு: 20x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 150. ஆசிரியர்: ரோமரிஷி. முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

மூலாதா ரத்தொளியாய் வெளியாய் ரூபாய
முக்கோண வட்டமதில் முளைத்த தேவி
மேலான பாதமது போத்தி யேத்தி
மென்ஞ்ஞான சத்திமுதல் வாதஞ் சொல்வேன்

முடிவு :

பாரிலே சித்துண்டு ஞான முண்டு
பண்டுவிட்ட குறையோர்க்கு யெதிரே காண்பார்
பாரிலே துலாராசி, கன்னி ராசி
பண்பல்லாப் பாவிகட்கு யெதிரே — — — —

குறிப்பு :

ஏடுகளில் எழுத்துக்கள் பலவகைப் பட்டவைகளாக இருக்கின்றன. வைத்திய ஏடுகள் கலந்துள்ளன.

வரிசை எண். 705 சுவடி எண். 354 (a)

## அகத்தியர் சூத்திரம்

ஏடுகள்: 15. ஏட்டின் நிலை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 30 X 3½ செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 450. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

சீறணி கொண்டை முடியே சூடும் சிவனிரு பாதம் போற்றி

*    *    *

காரண மானஞ் சொல் தர்ம சூஸ்த்திர காப்புத் தானே.

(ஆதியா யுலகில்வா)ழும் மனுஷர் செய் தற்மம்
சோதியா சூஸ்த்திரத்தில் சுருக்கியே புரைக்கக் கேள்மின்
(வாதி)யா முலகில் வந்து வயித்தியஞ் செய்வா னாகில்
நீதியா மனுஷர் செய்த கருமத்தி னிவர்த்தி தேனே. 1

**முடிவு:**

ஓவ்வான மேகக் கிருந்தி உள்ளுக்கு இதையுண்டு
முனுனாளும் ஹவாம் புளிப் புகலே
நன்றென ஏழுநாள் விட்டு ஞசிரம் பருப்புக் கூட்டே... -88

**குறிப்பு:**

இதில் லிங்கத்தி விரசுத்தி கற்பூரம் வெள்ளைப் பாஷாணம், குக்கில், குந்திருக்கம், காரம், துருசு கெந்தி, மிருதார் சிங்கு இவைகள் சுத்தி விபரம், அஷ்ட லோக பற்பம் இவைகள் கூறப்பட்டுள்ளன.

இதன்பின் 21 வது ஏடு கெற்ப சூலைக்கு மருந்து முதலியன உள்ளது. தனியாக உளது.

வரிசை எண். 706 சுவடி எண். 354 (b)

## குழந்தை வாகடம்

ஏடுகள்: 13. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 30 X 3½ செ. மீ. எழுத்து: தமிழ். - கி.எண்ணிக்கை: 400. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது

தொடக்கம் :

விளிநிறம் வெளுகாகி வெரித்துடன் மூடிப் பார்க்கும்
புலியா உச்சி காணும் குணங்குணம் பலவுஞ் செய்யும்
மொளிவது மிடறுங் கம்மி முகங்குறு வேர்வை யுண்டாம்
கழிவது வயர்க ழிந்தால் கணமெனக் கருது வாயே. -1

முடிவு :

அன்னமும் நெய்யும் பாலும்
அடவியில் பழத்தின் சத்தும்
பின்னேயும் பயறு தேங்காய்
வெல்லம் தொரக்கவி ......... -74

குறிப்பு :

இதில் சுழிகணம், ஆமகணம் இவைகளுக்கு மருந்துகள், குமரியெண்ணெய் மூக்கு, கண்மருந்து, காமாலே மருந்து, கணமாந்தத்திற்கு, பட்சிதோஷம், பல தோஷத்திற்கு, கண் மருந்து, எச்சி தோஷத்திற்கு, சகல தோஷங்களுக்கும், மருந்து, ஆம சுரத்திற்கு மருந்துகள் முதலியன உள்ளன. 15—20, 25, 27 ஆகிய ஏடுகள் இல்லே.

---

வரிசை எண். 707 சுவடி எண். 354 (c)

## பலதிரட்டு வைத்தியம்

ஏடுகள்: 12. ஏட்டின் நிலேமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். அளவு: 30x3½ செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 350. ஆசிரியர்: அறியக்கூடவில்லே. முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

கையி காலேயேயும்
உத்தது சொன்னே மிந்த
உகந்திடுஞ் சுரங்க ளாமே. -27

முடிவு :

கண்டங் கத்திரி லேகியம்.

— — —யிதுவெல்லாங் குறுக்கே நரிக்கி முடாவைப் போட்டு
எட்டுமரக்கால் சலம் விட்டு அதிலே கடுக்காயும் ————
துணியக் காச்சி அது ——— நல்லவெல்ல் - - பொட்டு - - -
குருணியா—கடை சரக்கு — — — —

குறிப்பு :

பலவகையான வைத்தியங்கள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண். 708 சுவடி எண். 355

## சித்தராரூடம்

ஏடுகள்: 70. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். அளவு: $19\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 800. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம்:

அத்தியான் மூலன் செய்ய
வடியினைக் கமலம் போற்றி
சித்திரா ரூடந் தன்னைச்
சேர்ந்திடும் பொருளைத் தோய்ந்து
சுத்தமா யெவர்க்குந் தோன்ற
சுருக்கமாய் நொண்டிச் சிந்தாய்
வித்தக ரருளி னாலே
தமியோனும் விளம்ப லுத்தேன்.

முடிவு:

மானுக முதலாகப் பலவிடம் (பி)ரதமை பற்றி வாதை
செய்தால் மந்திரத் திறத்தால் தியானத்தால் மணினல்........

குறிப்பு:

இதில் சர்ப்ப சாதிகளின் வகைகள். நல்லபாம்புக் கடி விஷம், சாரைப் பாம்பின் விஷம், விஷவேக லட்சணம், மருந்துகள் முதலானவை கூறப் பட்டுள்ளன.

இது எமது 252-d, 255, சுவடிகள் போன்றது.

வரிசை எண். 709 சுவடி எண். 356 (a)

## திருமந்திரம் 50 குருபாத விளக்கம்

ஏடுகள்: 16. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். அளவு: $17\frac{1}{2} \times 3$ செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 200. ஆசிரியர்: திருமூலர். முழுமை: முற்றும்.

தொடக்கம்:

குருபாத மானது கொண்டேன் சித்தத்தில்
இருபாத மாக யிருப்பது காரணம்

ஒருபாத மாத்தி யொருபாதம் ஊற்றி
வருமூலம் அங்கி மதியோ டிரவியே. -1

முடிவு :

கவனம் பதினாறுங் கலைக்கியான மானதை
மவுனமாய் நோக்க மகிழ்ந்திடு மானந்த
சிவமெனும் பொருளது தெரிசனம் காணும்
புவனமு மில்லை பிறவா நெறியிதே. -59

பிறவா நெறியது பேரின்ப வாழ்க்கை
பிறவாகி நிற்கும் திருவடி பாதம்.

குறிப்பு :

இது வேதாந்த ரகசியச் சுவடி, யோக சாத்திரத்தைப் பற்றியது. திருவடி விளக்கமுள்ளது.

வரிசை எண். 710 சுவடி எண். 356 (b)

## புலத்தியர் வைத்திய சூத்திரம்

ஏடுகள்: 20. ஏட்டின் நிலைமை; மிகப்பழுது. பக்கத்திற்கு: 7—8 வரிகள். அளவு: 17½x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 300. ஆசிரியர்: அகத்தியர். முழுமை; முற்றற்றது.

தொடக்கம் :

திருவளர் தென்பொதிகை தன்னில் வாழும்
தெஷ்சணா முர்த்தியுட சீடனை
குருமுனிவர் பாலனெனும் புலந்தியனும் அடியேன்
கூறுகிறேன் வைத்திய சூஷ்திரத்தை நானும்

முடிவு :

ஊறவைத்த பின்புநிலக் குமிளின் சாற்றி
லூர்ரிலகு ஞள்கருவூ மத்தைச் சாற்றிச்
சேரவொரு ஞளுரிக் குகையில் விட்டுத்
திறமாக வூதியிடப் பற்ப மாகும்
பாருவயி டூரியத்தைச் சிறுபூ ளைச்சார்
பண்பாக வூரி — — — — — — -39

குறிப்பு :

இதில் தாமிர பற்பம் செய்யும் முறை, சொர்ணபற்பம், வெள்ளிபற்பம், வெங்கலம், பித்தளை, காரீயம், வெள்ளீயம், காந்த செந்தூரம், நாகசெந்தூரம், மிருதார் சிங்கி பற்பம், தாளக பற்பம், ரசப் பதங்கம், வஜ்ரபற்பம், நீலக்கல் சிகப்புக்கல் பற்பம், புஷ்பராகப் பற்பம் முதலானவை செய் முறைகள் உள்ளன.

வரிசை எண். 711 சுவடி எண். 356 (c)

## சுந்தரமூர்த்தி பூசாவிதி

ஏடுகள்: 15. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். அளவு: $17\frac{1}{2}$x3 செ மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 200. ஆசிரியர்: சுந்தரமூர்த்தி. முழுமை: முற்றும்.

தொடக்கம் :

ஆதிபரா பரையாளும் மூல நாதன்
ஆறுமுகன் பாதத்தை அன்பாய்ப் போற்றி
வீதிநடு வீதிதனில் நின்ற சோதி
விழங்கிநின்ற சரஷ்பதியின் பாதம் போற்றி
பாதிபிறை வீட்டிலே யமைந்த மால்தன்
பாரிலெட்சுமி பெண்தன் பாதம் போற்றி
சோதிமய மாகிநின்ற பூசை தன்னைக்
சொல்லவே கணபதியின் பாதங் காப்பே. -1

முடிவு :

வள்ளிதனை ஓமம் பண்ணி நானி ருப்பேன்
மைந்தனே மகேந்திரத்தில் வந்து கண்டு
மள்ளியே யான் வாழ்வை யியச் சொல்வேன்
மகத்தான நவகோண பூசை முற்றே. -96

குருவே துணை.

வால ஞான மனோன்மணியே தெய்வம்.

குறிப்பு :

வாலை பூசாவிதி முறை கூறப்பட்டுளது.

வரிசை எண். 712 சுவடி எண். 356 (d)

## அகத்தியர் வைத்தியம் 50 — மூப்பு வயித்தியம்

ஏடுகள்: 19. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: $17\frac{1}{2}$x3 செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 300. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

ஆதிரச வாதம் ஆன வயித்தியமும்
தேறு மனுதினமும் சிவகுருவை நானும்
நாலு நூறு மாராய்ந்து நயனமாக ஐ(ம்)பதையுங்
கோலமுடன் கிணேசன்ருள் கூறு.

**முடிவு :**

ஆங்கார மாண்டுது புத்திமன மொன்ருய்
சாங்கால ஞய்வீட்டில் சட்டையத் தெரும்போல
ஓங்கார மூலமவிச்சியங் கொண்டு
நீங்காம லங்கே கொண்டுநிற்கும் நயனமே.

திருச்சிற்றம்பலம்
குருபாதமே கெதி

**குறிப்பு :**

இது அந்தாதியாக உள்ளது. இரசவாதநூல். மூப்பு முறையைக் கூறுகிறது.

வரிசை எண். 713 சுவடி எண். 357 (a)

## கவுசிக முனி ஆரூடம்

ஏடுகள்: 9. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 5 வரிகள். அளவு: 32x$2\frac{1}{2}$ செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 100. ஆசிரியர்: கௌசிகர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

அருமறை மொளியில் யாவரும் பிழைக்க
யிருவினை நானூத் தெண்பது மறவே
குருநெறி யருளாற் குளம்புகூ ரணத்தை
பெருமைக் கவுசிகன் பேருரைப் பேனே.

முடிவு

மண்ணதில் வாழும் மனிதரெவ் வுயிர்க்கும்
திண்மையாய்ச் சொன்னேன் ஓர்குளம் பதனுல்
திருவருளாலே கூறினேன் மகிழ்ந்து
வரமிகு கவுசிக மாமுனி நானே.

கவுசிக மாமுனிக் குளம்பு முடிந்தது
முற்றும்

குறிப்பு:

கௌசிகர் குழம்பு செய்முறையும், அதனுல் தீரும் வியாதியும் கூறப்பட்டு உள்ளன. ஏட்டில் இருபத்தியாக எழுதப்பட்டுளது.

---

வரிசை எண். 714 சுவடி எண். 357 (b)

## அகத்தியர் முப்பு ஐம்பது

ஏடுகள்: 15. ஏட்டின் நிலைமை: மிகமிகச் சிதிலம். பக்கத்திற்கு: 5-6 வரிகள். அளவு: 32x2½ செ. மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 300. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

வானம் புவியுங் கதிரொளியுந்
தேனுந் தெளிந்த சிவகுருவுந் — தானுன
மறையு மாந்து நன்றுரை யன்பதையும்
கோலமுடன் கிணைசன்ருள் கூறு.

முடிவு:

காலான வைத்தியத்தா ..............
கைமுறைகள் தப்பாமல் கருணைச் செய்தால்
பாலான நிறமுடைய பிரம்ம னுவான்
பாரிலே ... ..... ர்க்குக் குருவு மாவான்
சேலான் திருவுடைய செல்வ னுவான்
சிந்தையிலே களங்கமறச் சித்த னுவான்
........... முனிபோத்தும் பிரபன் சொன்ன
நலமுடைய முனிமொழிந்த நாம முத்தே. -50

அகத்தியர் சுவாமிகார் முப்பு அன்பது.
குருபாதமே கெதி

குறிப்பு :

முப்பு முடிக்கும் முறையும், குருச்சுன்னம் செய்யும் முறையும், ரசவாத முறைகளும் உள்ளன.

வரிசை எண். 715. சுவடி எண். 358 (a)

## வால்மீகர் நாடி சூத்திரம் 72

ஏடுகள்: 11. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். அளவு: 27X2½ செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 300. ஆசிரியர்: வால்மீகர். முழுமை: முற்றுமில்லை.

தொடக்கம் :

கரிமுகன் அடியை வாழ்த்திக்
கைதனில் நாடி பார்க்கில்
பெரு...... குலம் தன்னில்
பிடித்துடன் நடுவே தொட்டார்
ஒருவிரல் ஓடி வாதம்
யிருவிர லோடிற் பித்தம்
திருவிரல் மூண்டில் லோடில்
செலட்டும் நாடி தானே. -1

முடிவு :

கயல்விழி மாதே ஞடி
காடையின் நடைய தானல்
மயமது திங்கள் யெட்டில்
மகோதிரம் வந்தே கொல்லும்
யெல்வரு வாரு தன்னில்
வலிசுராய் நீச்சாய் நிற்கில்ச்
சுயசுர மூன்று ஞளில்ச்
சுடலையிற் சேர்வர் .........

குறிப்பு :

இது. சிறுநீர்க்கடுப்பு, நிதானம், உதிரத்திரட்சி, சில்விஷம், சுரமயக்கம், சத்தி கண்டமாலை, மரணக்குறி, பித்த சன்னி, வாத சன்னி, வார்சுவ வாயுவு, பக்க வாதம், படர் வாதம், நீராம்பல், பீலிகை, அண்ட வாதம், விப்புருதிக் குணம், பித்த குன்மம், சத்தி குணம், ஆமவலி குணம், மஞ்சக்காமாலை, ஊது காமாலை, பித்த பாண்டு, புடையன் விஷம், எலி விஷம், யானையிருமல், பீக்கி ராணி, பிரமியம், கல்லடைப்பு, சயரோகம், கிரந்தி, கபால வாயு, கரப்பான்,

சிலந்தி, கசரோகம், சுவாசம், சோகை, புத்து, தீதாங்க சன்னி, தனுர் வாத சன்னி, மூலைக்குத்துச் சன்னிக்குணம், சய மரணக்குறி, பாண்டு மரணக்குறி, சுய சுதித்தால் மரணம், முதலானவைகளைக் குறிக்கும் நாடி நூல்.

ஒரு செய்யுள் குறையாக உள்ளது.

---

வரிசை எண். 716 சுவடி எண். 358 (b)

## பலதிரட்டு வைத்தியம்

ஏடுகள்: 37+3. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். அளவு: 27X2½ செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 600. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது

**தொடக்கம்:**

பெரும்பாட்டிற்கு மருந்து

கருவிளிக் கொழுந்து விடத்திறங் கொழுந்து
ஆ(வா)ரங் கொழுந்து அம்ம பச்சரிசி கொழுந்து
தென்னம் பாளையின் பிஞ்சு இந்த அஞ்சும் சட்டியில்
காயவைத்து யிடித்து சீலை வடிகொண்டு காற் அரிசி
காலட்டி யிடித்துச் சாறுபிழிந்து

**முடிவு:**

வெங்காரம் பொரித்துப் போட்டு யிதுக்கு முன்னே நாகபாப்பு
யெண்ணை வைத்து யெரிக்கும் ......... யெண்ணையிலே
விளாங்காயளவு கூடப் போட்டு பதம் ... ... ... ...

**குறிப்பு:**

இதில் சூதகம் இல்லாத பேருக்கு லிங்கக் கட்டு, காதடைப்புக்கு மருந்து, வெள்ளைப்பாஷாணக்கட்டு, இருமல் சுவாசத்திற்கு மருந்து, பேதி மாத்திரை, சுரத்திற்குச் சந்திரோதைய மாத்திரை, சூத பற்பம், லேபனத்திற்கு மருந்து, இருமல் தடுப்பு மருந்து, மூலக்கடுப்பிற்கு, தாதுவர்த்தனைக்கு, வீரியத்திற்கு, நீரடைப்பிற்கு, விக்கலுக்கு மருந்து, தொண்டைத் தாறுக்கு, முதலான எளிய முறைகள் உள்ளன. பதிப்பிக்க ஏற்ற சுவடி.

வரிசை எண். 717 சுவடி எண். 358 (c)

## அகத்தியர் வகாரம்—100

ஏடுகள்: 18. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். அளவு: 27x2½ செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 300. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம்:

ஆதியே மணைக்கோலம் செய்யும் நாளில்
ஆதிமூல தேவரிழி கூட்ட மாச்சு
வேதியோனு மறியாதனு மானே யென்று
விமலன்சத விச்சுவனு வாற்த்தை யீந்தாற்

முடிவு:

சாஷ்த்திரத்தைப் பாத்ததினல் லென்னுவாகும்
மந்தக......... ரகசியத்தை அறியான் வாதி
கோழபீசத்தை நீ மறந்திடாதே. -94

குறிப்பு:

இது ஒரு இரசவாதச் சுவடி. இதில் திறவுகோல், பாஷாணம், குருமெழுகு, திராவகம் குரு பற்பம், பூவழலைச் சுன்னம் செய்முறை, காரசாரத்தின் விபரம்' உவர்நீர், உபரசத்தின் பேர் விபரம், சாரணை அஞ்சனக் குளிகை, தூபவேதை, பொன்னிமிளைவேதை முதலானவை உள்ளன.

இது 289-c சுவடியின் மறு பிரதி 120-bயும் இதனை யொத்தது. " அகத்தியர் வகாரத் திரையம் சூத்திரம் 200 " என்ற பெயரும் இதற்குண்டு. பாட வேறு பாடுகள் உ ளளன.

வரிசை எண். 718. சுவடி எண். 359 (a)

## அகத்தியர் தீட்சைவிதி—200

ஏடுகள்: 45. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. (பயனற்றது) பக்கத்திற்கு: 8 வரிகள். அளவு: 29x3½ செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1500. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றும். (இடையிடையே பழுது)

தொடக்கம் :

வானைத் தாவிய பொதிகை மகத்தாற்றுனை
　　ரிசியுடைய வாக்கினேர்மை
பானைத் தாவிய பூசைப் பரிவான......
　　யோக மனமபோர் சேஞு
மீனைத் தாவிய ருசி மிகவுமாக
　　விளங்கி நின்ற கன்னி முதலி வில்லுமேஷம்.

முடிவு :

பனிமாறுங் காலத்தே சகலசித்தும்
　　பரிவாகத் தாவென்று கொடுக்க வாங்கி
பனிமாறுங் காலத்தே பணிந்து தண்டம்
　　பண்ணுவார் திட்சைவிதிப் பாடல் முற்றே. -201

தெஷ்ணமூர்த்தி பாதாள விந்தமே கெதி.

குறிப்பு :

இதில் காந்த சத்து, பூசாவிதி சக்கரம், திட்சாவித மார்க்கங்கள் சோதிட மூலமாய்க் கூறப்பட்டுள்ளன. சுவடி எண் 19-bன் மறுபிரதியாகும். சுவடி எண் 322-f போன்றது.

வரிசை எண். 719 　　　　　　　　　　　　சுவடி எண். 359 (b)

## சட்டைமுனியார் பூசாவிதி சூத்திரம்

ஏடுகள்: 15. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. (பயனற்றது) பக்கத்திற்கு: 7-8 வரிகள்: அளவு: 29x3½ செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 200. ஆசிரியர்: சட்டைமுனியார். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

அகண்டபரி பூரணமா முமையாள் பாதம்
　　......நின்றதொரு அய்யர் பாதம்
புகண்டுநின்ற கணேசனொடு நாதாக்கள் பாதம்
　　புகழான வாக்குடைய வாணி பாதம்
நிகண்டொவே யெனையாண்ட குருவின் பாதம்
　　நிரைநிரையாய்ச் சொரூபத்தில் நின்றோர் பாதம்

முடிவு :

புலந்துநின்ற கோளாகி நோயு மாகிப்
புனைத்தே நவலோகப் ..........
(மல)ந்துநின்ற பொய்யாகி மெய்யு மாகி
மாயமுமாய் ஞானமுமாய் வளர்ந்த வாறே. -48

குறிப்பு :

இதில் பூசாவிதி முறைகள் பல உள்ளன.

---

வரிசை எண். 720 சுவடி எண். 360

## வைத்தியத்திரட்டு

ஏடுகள்: 90. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். அளவு: 31x3 செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 2000. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

### மண்டூர பஸ்பம்

வல்லத்துக் கிட்டான் 1 பலம். கொல்லன் உலையில் போட்டு சிவக்க ஊதி பசுவின் கோமியத்தில் போட்டு, கல்வத்தில் பசுவின் கோமியம் விட்டரைத்து, வெய்யிலில் புடம் போடவும். கையாந் தகரைச்சாற்றில் 1 புடம், எலுமிச்சம்பழச்சாற்றில் 1 புடம், ஊசி மல்லிகைச்சாற்றில் 1 புடம், செருப்படிச் சாற்றில் 1 புடம் அந்த புடம் தீந்த பிற்பாடு.

முடிவு :

இந்தச் சூரணம் வெந்நீரில் கொடுக்கத் தீரும் வியாதிகள் :— அஷ்ட பீலிசை, கிரந்தி, வாதரோகம், பாண்டு ரோகம், சோகை, உள்ரத்தம், வாயு, நடுக்கல், தலைச் சுத்து, சுவாசகாசம், க்ஷயம் 10, உள மாந்தை, சூலை, பெருவயறு, விக்கல் இவையெல்லாந்தீரும்.

குறிப்பு;

இதில் குணவாகடம் 36 செய்யுட்கள் முன்பின்னாக உள்ளன. 80 வாத நோய்களின் பெயர், 5 விதபாண்டு நோய்களின் பெயர், 4 வித சோகை, 21 மேகம், 18 குட்டம், முதலியவைகளின் பெயர், ரசப் பதங்கம், மேக சூலைலேகியம், குக்கில் வடகம், 15 சூலைபெயர், வெடியுப்புத் திராவகம், குன்மத்திற்கு நீலகண்ட தாம்பிரச் சிந்தூரம், 8 வகை குன்மம், 33 வகை மகோதரம், 13 காமாலை, 11 பிரமியம், 21 கபரோகம், 42 பித்த நோய், முதலியவற்றின் பெயர்கள் உள்ளன.

இது ஒரு தொகுப்புச் சுவடி. பலதரப்பட்ட கையெழுத்து உளது.

வரிசை எண். 721 சுவடி எண் 361

# அகத்தியர் பூரணகாவியம் 1000

ஏடுகள்: 150. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். அளவு: 34X3 செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 5000. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

ஓமென்ற மூலைகண பதியே காப்பு
உண்மையுடன் நடுமனையை யுகந்து நின்று
ஆமென்ற வமிர்தகலை யுட்கொண் டேதான்
அடங்கியந்த மனோன்மணியின் அருமை யாலே
ஊமென்ற வெண்மைதனை மௌன மாக
உருப்போட்டுக் கருப்பெற்று வுறுதி யேத்து
தாமென்ற மதிதனையே ரவியில் தாக்கி
சச்சிதா னந்தமென்ற ஆதி காக்க -1

முடிவு :

கண்ணைப்பார் மனக்கண்ணால் விண்ணைப் பார்க்க
கருத்துனக்கு யில்லையடா காத்துப் பாரு
தன்னைப்பார் காலறிந்து கால்மேல் கொண்டு .
தன்மயமாய் நின்றகே சரியைப் பாரு
விண்ணைப்பாத் தண்டமது ..............
வேதாந்த கலைஞான முடிவுங் காணு
மண்ணைப்பார் தன்னைப்பார் விண்ணைப் பாரு
மனதுபரி பூரணத்தின் வடிவைப் பாரே. -998

குறிப்பு :

இதில் ரசமணி, அஷ்டசித்து மணி, சுருபமை, கமலமணி, ஞானம், மூடர்க்குப் புத்தி, சிதம்பர சக்கரம், கலைதவருச் சத்திசிவ பூசை, நாற்கோண பூசை, அஷ்டாங்க பூசை, மணிபூரகத்தியானம், ஆக்ஞா தியானம், அக்கினி மண்டலத் தியானம், சந்திர மண்டலத் தியானம், அஷ்டநாகத் தியானம், 18 பேரைக் காணத் தியானம், ஆதியுப்பு அறிய, சுவேதகிரி, வாசுதேவமுனி புசுண்டர், சத்திசிவகவுன ரசக் குளிகை, சமாதி பூரணம், நவரசப் பாஷாண வேதை, 32 பாஷாணவைப்பு முறை, முதலானவை உள்ளன. பதிப்பிக்கப்பட வேண்டிய சுவடி.

வரிசை எண். 722 சுவடி எண். 362 (a)

## தெட்சிணாமூர்த்தி வைத்தியம் 688—கடைக் காண்டம் வழலைப் போக்கு

ஏடுகள்: 90. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது (பயனற்றது). பக்கத்திற்கு: 6-8 வரிகள். அளவு: 44x3½ செ. மீ. எழுத்து: தமிழ் கி. எண்ணிக்கை: 4500. ஆசிரியர்: தெட்சிணா மூர்த்தி. முழுமை: குறைபாடுடையது.

**குறிப்பு:**

ஏடுகள் பல ஒடிந்தும், முறிந்தும், சிதைந்தும் உள்ளன. கடைசியில் 620-ம் செய்யுள் காணப் படுகிறது. இடையிடையே ஏடுகள் இல்லை. ஒப்பு நோக்கலுக்குப் பயன்படும்.

வரிசை எண். 723 சுவடி எண். 362 (b)

## ஆயுர் வேத வைத்தியம்

ஏடுகள்; 28. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். அளவு: 44x3½ செ.மீ. எழுத்து: தமிழ்.கி. எண்ணிக்கை: 500. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: குறைபாடுடையது.

**குறிப்பு:**

இதில் ஏடுகள் முறிந்தும், செல்லரித்தும் உள்ளன. தலைப்பு காண்பதற்கில்லை. பக்க எண்கள் இல்லை. 197 செய்யுட்கள் வரை உள்ளன.

வரிசை எண். 724 சுவடி எண். 363

## பதார்த்த குண சிந்தாமணி

ஏடுகள்: 87. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 8-10வரிகள். அளவு: 38½x3½ செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 3500. ஆசிரியர்: அகத்தியர் ?. முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம்:**

(ஆதியும் ந)டுவு மில்லா அம்பிகை பாக னென்னுள்
வேதனுக் குரைப்ப வேதன் மேகனு தனுக்குச் சொன்னான்
போதியிந் தி(ரனு ம)சுவ தேவர்க்குப் புகண்ட தண்டே
கோதிலா அசுவ தேவர் தன்மந் திருக்குக் கூறு. -1

முடிவு :

கொள்ளுச் சாறு

கொள்ளுச்சா மிருமல் வாத்து குறுகாது
டிட்சேர் பிறமேக மேந்ட்டிவிடும்—கட்டுலாக்கில்
வாத குணமாறு மென்றே மதிநுதலாள்
பூதலத் தெல்லாம் புகல். -758

குறிப்பு :

இதில் முருங்கை, இலந்தை, மாதளங்கனி, அடப்பம் (வாதுமை) கெண்டை மீன், முயல்கறி, உடும்புக்கறி, கருங்கோழிக்கறி, பெருச்சாளிக்கறி, நத்தைக் கறி, வெத்திலே, களிப்பாக்கு, கல்லுப்பு, இந்துப்பு, பொட்டிலுப்பு, பஞ்சலவணம், தான்றிக்காய் முதலான சரக்குகளின் குணங்கள் கூறப்பட்டுள்ளன.

சுவடி எண் 5 அகத்தியர் பதார்த்த குணசிந்தாமணி போன்றது. இடையிடையே ஏடுகள் இல்லே. பக்க எண் தெரியவில்லை.

---

வரிசை எண். 725 சுவடி எண். 364

## போகர் எழுநூற்றுத்திரட்டு

ஏடுகள்: 165. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். அளவு: 39X3 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்தங்கள்கை: 6500. ஆசிரியர்: போகர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

ஆனந்த மாய்நிறைந்த ஆயி பாதம்
அகண்ட பரி பூரணமா மையன் பாதம்
வானந்த மாகிநின்ற கிலேசன் பாதம்
மருவியதோர் மூலத்தில் நந்தி பாதம்
தானந்த மாகியதோர் காலாங்கி பாதம்
சனகருடன் வியாக்கிரமர் பதஞ்சலியின் பாதம்
போனந்த மாகியதோர் ரிஷிகள் பாதம்
போற்றியெழு நூற்றிரட்டுப் புகலு வேனே. -1

முடிவு :

சொன்னதொரு சூத்திரத்தில் பொய்யொன்று மில்லை
துலங்கியதோர் மணித்தாயை ஏழுதிரந் துதித்தேன்
சொன்னதொரு குருபதத்தை அனுதினமுந் துதித்தேன்
துலங்கியதோர் மூலருட பதத்தையென்றுந் தொழுதேன்

சொன்னதொரு காலாங்கி அய்யருட பதத்தைத்
தொழுதுகொண்டு எழுநூத்துச் சிலவானஞ் சொன்னேன்
(சொன்ன)தொரு சித்தருட பதங்கள் போற்றி
சூத்திரந்தான் பாடியது கடசி முத்தே. -762

போகருயனர் சூத்திரம் எழுதி நிறவேறினது. முத்தும்
குரு பாதமே துணை. சிவமயம்.

குறிப்பு :

இதில் சவுக்கார வைப்பு, இந்துப்பு, பூரவுப்பு, வெடியுப்புச் செயநீர் உப்பு மெழுகு, பூரசெயனீர், வங்கசுண்ணம், வெங்காரக்கட்டு, நாகச் செந்தூரம், மகாசவ் வீரம், குளிகைப் பேர், கௌரி மெழுகு, ஏகம் பச்சாரம், சூதக்கட்டு, துரிசுவைப்பு, சூதச்செந்தூரம், கற்பம், சர்க்கரை வேம்பு, மகாமூலி கட்ட முதலியன உள்ளன.

போகர் சூத்திரம் எழுநூற்றுத்திரட்டு என்ற பெயரால் சுவடி எண் 292, 305 ஆகியவை இதன் மறுபிரதியாகும்

வரிசை எண் 726. சுவடி எண் 365 (a)

## கைலாச சட்டைமுனி சூத்திரம்—201

ஏடுகள்: 57. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். அளவு: 36 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 1200. ஆசிரியர்: சட்டைமுனியார். முழுமை: முற்றும்.

தொடக்கம் :

முதல் மிகவும் பழுதுபட்டுப் பாதியாக முறிந்துளது.

முடிவு :

கோனான சின்மயத்தின் பிள்ளை நாங்கள்
குறியேதுக் கைலாச மூர்த்தி வர்க்கம்
வேனான சூத்திரந்தான் இருநூற் றொன்றும்
வேதாந்திக் கருணையினால் விளங்கும் முற்றே. -201

கைலாசச் சட்டைமுனி சுவாமிகள் சூத்திரம் எழுதி முடிந்தது முற்றும்.

குறிப்பு :

இதில் கடுக்காய் கல்பம், ஞானம், வழலை, உப்பு, ரசமணி செய்முறை முதலியன உள்ளன. எழுத்துக்கள் நன்றாக இருக்கின்றன.

வரிசை எண். 727 சுவடி எண். 365 (b)

# இராமதேவர் சூத்திரம்—500

ஏடுகள்: 95. ஏட்டின் நிலைமை. மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். அளவு: 36 × 3 செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 3000. ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

ஆதியந்த மேநிறைந்த சோதி பாதம்
அகண்டபரி பூரணத்தி னறிவிற் கூடி
பாதியா முப்பொருளு மூன்று மொன்றாய்
பரவெளியாய் நின்றபரா பரையின் பாதம்
நீதியாய் வாரணத்தின் முகவன் பாதம்
நிறைந்தமலர் வாணிகுரு கந்தர் பாதம்
சோதியாம் நாதாக்கள் பாதம் போற்றிச்
சொல்லுவேன் சூத்திரத்தைச் சொல்லு வேனே. -1

**முடிவு:**

செய்யாதே தீவினைதான் கொடிது பாவம்
செந்துவெல்லா முண்டென்று தெளிந்து காணு
மெய்யான குருபதத்தைப் பணிந்து போற்றி
விளம்பினேன் கருக்கிடைசூஷ் திரந்தான் முற்றே. -521

குருபாதமே கெதி. ஆரணி, காரணி, மனோன்மணி. சிவமயம்.

**காலம்:**

குரோதன வருஷம், தை மாதம் 21-ம் தேதி புனர்பூச நட்சத்திரமும் கூடின சுபதெனத்தில் வீரப்ப ஞயக்கற் குமாறன் முத்துச்சாமி செவடி யெழுதி முசிந்தது. முஷ்த்தும்.

**குறிப்பு:**

இதில் சாரச்சுன்னம், லிங்கம், அயச்செம்பு, கந்தகக்கட்டு, லிங்கக்கட்டு, தாளகச்சுன்னம், சூத பற்பம், வெடியுப்புச் செயநீர், பாஷாண மெழுகு, கருவங்சக்கட்டு, சூதப்பதங்கம், பேய்க்கடலை, பொற்சிந்தில், அட்சரமாறல், நால் தொகை, வெள்ளையாவரை, வசியம், திலதம், அஞ்சனம், வில்வித்தை முதலியவைகள் உள்ளன.

படியெடுக்க வேண்டிய சுவடி. ஆனல் மிகவும் பழுதாக ஒடிந்தும் சிதைந்தும் உள்ளன.

வரிசை எண். 728 சுவடி எண். 365 (c)

## தட்சிணாமூர்த்தி சுவாமிகள் அருளிய—1200
## (முதற்காண்டம்)

ஏடுகள்: 10. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். அளவு: 28x3 செ.மீ. எழுத்து: தமிழ். கி எண்ணிக்கை: 150. ஆசிரியர். தட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

காரணமா மூலமிடந் தன்னில் நிற்குங்
 கணபதியும் வல்லையுந் தேவர் காப்பு
பூரணமார் பார்வதியுஞ் ........ ........
 நிறைபஞ்ச எாத்தாள் தடங்கள் காப்பு.

**முடிவு:**

வாதடா சொல்லிநீ பேசிக் கொண்டு
 மாரணங்கள் விச்சைசெய்யச் சினத்தில் சாவான்
பாதங்க ளாகுமிது ஆயிரத் திருநூறு
 பாடினேன் வெவ்வேறே காண்டமுற்றே. -55

தெஷ்ணா மூர்த்தி அருளிய ஆயிரத்திருநூத்தில் முதற்காண்டம் முற்றும்.

**குறிப்பு:**

இதில், தம்பனம், கலிக்கம், மாரணம் முதலியன உள்ளன. முதல் 2 ஏடுகள் முறிந்துள்ளன.

வரிசை எண். 729. சுவடி எண். 365 (d)

## தட்சிணாமூர்த்தி—1200ல் வாதப் பிரகரணம்

ஏடுகள்: 23. ஏட்டின் நிலை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். அளவு: 36 × 3 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்த எண்ணிக்கை: 800. ஆசிரியர்: தட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றும்.

**தொடக்கம்:**

அறிவுகுரு வானபொருள் தன்னைப் போற்றி
 அணுக்க நின்ற உன்மனத்தாய் பாதம் போற்றி
நெறியுடனே பிடித்தவர்கள் பேறுண் டென்று
 நிச்சயமாய்ச் சதாசிவன்று னெனக்குச் சொன்னார்

முடிவு :

பறந்திட்டேன் துளிகைக் கூட்டி கெவன மோடப்
பாதத்து அடுக்கனின்று மனனம் பண்ண
மறந்திட்டேன் சமுசார வலேயில் சிக்கி
மாளாதே உப்பினுட வளஞ்சொன் னேனே. -183

குறிப்பு :

இதில் ஏடுகள் மிகமிகச் சிதைந்துள்ளதால் தலைப்புக்கள் காண இயலவில்லை.

---

வரிசை எண். 730 சுவடி எண். 365 (e)

## தட்சிணுமூர்த்தி 1200

ஏடுகள்: 8. ஏட்டின் நிலேமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். அளவு: 36x3 செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 250. ஆசிரியர்: தட்சிணுமூர்த்தி. முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

காரணமாம் மூலவட்டந் தன்னில் நிற்கும்
கணறதியும் வல்லபையும் தேவர் காப்பு
பூரணமாம் பராபரையும் சிவனும் நந்தி
பொருந்தி நின்ற பஞ்சகற்தாள் கணங்கள் காப்பு.

முடிவு :

மிகவும் பழுது பட்டுளதால் எழுத இயலவில்லை

குறிப்பு :

இதன் பிற்பகுதி மிகவும் பழுதுபட்டுளதால் வாசிக்கக்கூட இயலாத நிலேயில் உளது.

****

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை, எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

**T. R. இராமசாமி, I. A. S.,**
*மாவட்ட ஆட்சியர் & இயக்குநர்,*
*சரசுவதி மகால் நூலகம்.*

*தஞ்சாவூர்,*
*19—5—85.*